பக்கங்கள்: 20

# காலைக்கதிர்
Kālaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 08 ஞாயிற்றுக்கிழமை 24.11.2019 கதிர் 19

**இது ரகசியம் அல்ல!**

ஜனாதிபதி பதவி காலாவதியானமையை அடுத்து வீடு திரும்பியுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எப்படியாயினும் நாடாளுமன்ற அரசியலுக்குள் மீண்டும் புகுந்து களேபரம் பண்ணத் துடியாய்த்

பக்கம் 02 »

# நாடாளுமன்றை இடைநிறுத்தி புதிய கூட்டத் தொடர் ஆரம்பம்?

## ஜனாதிபதி கோட்டாபயவின் சம்பிரதாயபூர்வ உரையுடன் தொடங்குவதற்குத் திட்டம்

கொழும்பு,நவம்பர்24

நாடாளுமன்றத்தின் தற்போதைய கூட்டத் தொடரைத் தமக்குள்ள விசேட அதிகாரத்தைப் பயன்படுத்தி இடைநிறுத்தவும், தாமதமின்றி இயன்ற விரைவில் புதிய கூட்டத் தொடரை ஆரம்பிக்கவும் வழி செய்யும் வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எந்நேரமும் விடுக்கக் கூடும் எனக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய ஜனாதிபதியும், புதிய அரசும் பதவியேற்றுள்ள சூழ்நிலையில் நாடாளுமன்றக் கூட்டத் தொடரை புதிய ஜனாதிபதி அங்குரார்ப்பண உரை நிகழ்த்தி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைப்பதற்கு வழிசெய்யும் விதத்திலேயே தற்போதைய கூட்டத் தொடரை இந்த மட்டோடு இடைநிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

பக்கம் 03 »

## மாவீரர்களின் பெற்றோருக்கு கிளிநொச்சியில் கௌரவிப்பு!



கிளிநொச்சி, நவ. 24

விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்த போராளிகளின் பெற்றோரைக் கௌரவிக்கும் நிகழ்வு கிளிநொச்சியில் நேற்று நடைபெற்றது.

நேற்றுக்காலை பளையில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச

பக்கம் 02 »

## சுகாதாரத் தொண்டர்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் கவனயீர்ப்பு!

யாழ்ப்பாணம், நவ. 24

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சுகாதார தொண்டர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி ஆளுநர் அலுவலகம் மற்றும் மாவட்ட செயல

பக்கம் 03 »

## செயலாளர் ஸ்ரீகாந்தாவை இடைநிறுத்தியது ரெலோ!

### கட்சி விரோத செயற்பாடுகளுக்காக நடவடிக்கை தலைமைக் குழு திருமலையில் நேற்றுக் கூடி முடிவு

திருகோணமலை, நவ.24

ரெலோ கட்சியின் செயலாளர் நாயகமாகச் செயற்பட்டு வந்த சிரேஷ்ட சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தாவும் மற்றும் இரு கட்சிப் பிரமுகர்களும் அக்கட்சியின் சகல பொறுப்புகளில் இருந்தும் இடைநிறுத்தப்பட்டனர்.

நேற்று திருகோணமலையில் கூடிய கட்சியின் தலைமைக்குழு ஏகமனதாக இந்த முடிவை எடுத்தது.

பக்கம் 02 »

## நாடு முழுவதும் டெங்கு தாக்கம்

### கொழும்பில் அபாயம் அதிகரிப்பு

கொழும்பு, நவ. 24

கொழும்பு மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாக டெங்கு நோய் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இதுவரையான காலப் பகுதியில் கொழும்பு மாவட்டத்தில்

பக்கம் 03 »

## மாவீரர் நாள் நினைவேந்தலை அச்சமின்றி மேற்கொள்ளுங்கள்!

### மக்களிடம் கோருகிறார் சிவாஜிலிங்கம்

(எஸ்.நிதர்ஷன்)

தமிழீழ மாவீரர் நாள் நினைவேந்தலில் மக்கள் அவர்களை அச்சமில்லாமல் நினைவு கூர்ந்து முன்னெடுக்க வேண்டும் எனக் கூறியுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், அப்படி மக்கள் நினைவு கூருவதற்கு

பக்கம் 03 »

## சிங்கள, பௌத்த அரசு அமையுமாயின் தமிழ், முஸ்லிம் மக்களுக்கே பாதிப்பு!



### ரில்வின் சில்வா சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 24

சிங்கள, பௌத்த அரசு ஒன்றை அமைக்கும் நோக்கத்தில் அரசு செயற்பட்டால் அது தமிழ், முஸ்லிம் மக்

பக்கம் 02 »

## இராணுவ ஆட்சிக்கு கோட்டாபய முயற்சி

### ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நவ. 24

இலங்கையின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவான கோட்டாபய ராஜபக்ஷ முக்கிய அரச பதவிகளில் இராணுவ அதிகாரிகளை நியமிக்கிறார். ஆயுதம் தாங்கிய பாதுகாப்புப் படையினர் வீதிகளில் இறங்கலாம் என வர்த்தமானி

பக்கம் 03 »

## கோட்டாபயவின் புதிய அரசாவது ஞானசாரரைக் கட்டுப்படுத்துமா?

### சிவமோகன் எம்.பி. கேள்வி

வவுனியா, நவ. 24

இனவாத ரீதியாகச் செயற்படும் ஞானசார தேரரை புதிய அரசாவது கட்டுப்படுத்துமா என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்றுத் தாம் வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பி

பக்கம் 02 »

## தலைமைத்துவ சிக்கலை ஆராய அடுத்த வாரம் கூடுகிறது ஐ.தே.க.

கொழும்பு, நவ. 24

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ சிக்கலுக்கு முடிவு காணும் நோக்கத்துடன் விசேட கூட்டமொன்றை அடுத்த வாரம் கூட்டு

பக்கம் 03 »

## சங்கிலி அறுத்தவர்கள் சி.சி.ரி.வியால் சிக்கினர்!

யாழ்ப்பாணம், நவ. 24

யாழ்ப்பாணம் – பொம்மைவெளியில் வீதியால் சென்ற பெண்ணின் தங்கச் சங்கிலியை அறுத்தனர் என்ற குற்றச்சாட்டில் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டு, யாழ்ப்பாணம் நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பொம்மை வெளிப் பகுதியில் நேற்று முன்தினம்

பக்கம் 03 »

## டக்ளஸை சிறிதரன் விமர்சித்தமையால் தவராசாவுக்கு வந்தது கடும் கோபம்


(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நவ. 24

தீபாவளிக்குத் தீர்வு, சித்திரை வருடத்தில் தீர்வு என்று மக்களை ஏமாற்றிய – அரசியல் தீர்வு வராது விட்டால் அரசியலில் இருந்து ஒதுங்குவதாகக் கூறியிருந்த

பக்கம் 03 »

## பௌசி எச்சரிக்கை!



கொழும்பு, நவ. 24

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து நீக்கி விட்டு, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பறிக்க அந்தக்

பக்கம் 03 »

# முதன்முறையாக ஔவையார் விழா!

மன்னார், நவ. 24

மன்னாரில் முதன்முறையாக ஔவையார் விழா நடைபெற்றுள்ளது.

இவ்விழா மன்னார் மாவட்ட சைவக்கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் சைவக்கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் செந்தமிழருவி மஹா தர்மகுமார குருக்கள் தலைமையில் நேற்று மன்னார் நகர மண்டபத்தில் இடம் பெற்றது.

மாவட்ட ரீதியில் அறநெறி பாடசாலை மாணவர்கள் மற்றும் மாவட்ட இந்து மக்களை ஒன்றிணைத்து ஔவையார் விழா நடைபெற்றதுடன் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

மன்னார் பிரதேச செயலகத்தில் உள்ள ஔவையார் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு விருந்தினர்கள் மற்றும் மக்கள் அனைவரும் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு ஔவையார் விழா ஆரம்பமானது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மன்னார் பிரதேச செயலாளர் கனகாம்பிகை சிவசம்பு, சிறப்பு விருந்தினர்களாக சித்த ஆயுள் வேத வைத்தியர் செல்வி பூ.ரோகினி மற்றும் ஓய்வு நிலை ஆசிரியர் திருமதி.செல்வரட்ணம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அதே நேரத்தில் 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் மற்றும் சிறப்பாக செயற்பட்ட ஆசிரியர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

## செயலாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி விரோத நடவடிக்கைகளுக்காக அவ் மூவருக்கும் எதிராக ஏன் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படக் கூடாது என்பதற்கான விளக்கங்களை அடுத்து ஒரு வாரத்துக்குள் தருமாறு அந்த மூவருக்கும் உடனடியாகக் கடிதங்களை அனுப்புவது என்றும் நேற்றைய கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

ஸ்ரீகாந்தாவுடன் ரெலோவின் யாழ் மாவட்ட அமைப்பாளர் சில்வெஸ்டர் விமல்ராஜ், துணை அமைப்பாளர் ஜெயரட்ணம் ஜனார்த்தன் ஆகியோர் மீதே இந்த ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்து ஒழுக்காற்று விசாரணை நடத்துவதற்காக கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், வினோத ராதலிங்கம், ஜனா கருணாகரன் ஆகிய மூவரைக் கொண்ட விசாரணைக்குழுவும் நேற்றைய கூட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் உப தலைவரும், பதில் தவிசாளருமான இந்திரகுமார் பிரசன்னா தலைமையில் நேற்றுக் கூடிய ரெலோ கட்சியின் தலைமைக் குழுவே இந்த நடவடிக்கையை எடுத்திருக்கின்றது.

பதினைந்து பேர் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் மேற்படி ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது தொடர்பான தீர்மானம் ஏகமானதாக எட்டப்பட்டது.

கடந்த ஜனவரி 06ஆம் திகதி திருகோணமலையில் கூடிய ரெலோ கட்சியின் பொதுக் குழு ஜனாதிபதி தேர்தல் தொடர்பான முடிவை எடுக்கும் அதிகாரத்தைத் தலைமைக்குழுவுக்கு வழங்கியது.

இவ் விடயத்தை கடந்த மாதம் 6ஆம் திகதி வவுனியாவில் கூடிய ஆராய்ந்த தலைமைக்குழு, சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க முடிவு செய்தது. அந்தக் கூட்டத்தில் ஸ்ரீகாந்தாவும் பிரசன்னமாகி, கட்சியின் முடிவை உறுதிப்படுத்தி பின்னர் பத்திரிகையாளருக்குத் தாமே அதையும் அறிவித்தார்.

ஆனால், கடந்த 9ஆம் திகதிக்கு பின்னர், கட்சி முடிவை மீறிய ஸ்ரீகாந்தா, பின்பு தமது கட்சியில் இருந்தபடி ஜனாதிபதி தேர்தலில் குதித்த சிவாஜிலிங்கத்துக்கு ஆதரவாகப் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டார் எனக் கூறப்படுகின்றது.

அதற்க எதிராகவே ரெலோ தலைமைக்குழு கூடி மேற்படி தீர்மானத்தை எடுத்திருக்கின்றது.

## சிங்கள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கே அதிக தாக்கத்தை செலுத்தும் என ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு எதிர்பார்த்த அளவுக்கு மக்களின் ஆதரவு கிடைக்கவில்லை. இதற்குச் சில காரணிகள் உள்ளன. பிரதான இரண்டு வேட்பாளர்கள் குறித்து அதிக கவனம் செலுத்தப்படுகின்ற நிலையில் மூன்றாம் நபருக்கு மக்கள் ஆதரவு கிடைப்பது கடினமான ஒன்றாகும். அதேபோல் ஊடகங்களும் பிரதான இரு வேட்பாளர்கள் குறித்து மட்டுமே கவனம் செலுத்தின.

எவ்வாறு இருப்பினும் தேர்தலில் மக்கள் ஓர் ஆணையைக் கொடுத்துள்ளனர். அதற்கு அனைவரும் கட்டுப்பட்டாக வேண்டும். அடுத்த மூன்று மாதங்களில் பொதுத் தேர்தல் ஒன்று இடம் பெறும். இதில் ராஜபக்ஷ அரசு சகல விதத்திலும் அதிகாரத்தைப் பயன்படுத்தி ஐக்கிய தேசியக் கட்சியின் அரைவாசிப் பேரையாவது விலை கொடுத்து வாங்கித் தமது அரசை அமைக்க முயற்சிப்பார்கள்.

ஆகவே பலமான எதிர்க்கட்சியார் என்பதே கேள்வியாக அமையும். ஐக்கிய தேசியக் கட்சியினால் பலமான எதிர்க்கட்சியாக செயற்பட முடியுமா என்ற கேள்வி எழும். ஆகவே தேசிய மக்கள் சக்தி பொதுத் தேர்தலில் மக்களின் ஆதரவைப் பெற்ற கட்சியாக அடையாளப்படுத்த சகல நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுப்போம்.

மூன்று மாதகால இடைகால அரசில் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டவர்கள் யார் என்று பார்த்தால் இந்த அரசு எப்படிப்பட்ட என்பதைத் தெரிந்து கொள்ள முடியும்.

கடந்த காலங்களில் ஊழல் வாதிகள், நாடாளுமன்றத்தில் அராஜகமாகச் செயற்பட்டவர்கள், பல குற்றச்சாட்டுக்கள் உள்ளவர்கள், வழக்குகள் உள்ளவர்களை ஜனாதிபதி அமைச்சர்களாக நியமித்துள்ளார். இவர்களைக் கொண்டு ஊழலில்லா அரசு ஒன்று உருவாக்கப்படுமா என்ற கேள்வி எழுகின்றது.

மறுபுறம் இனவாத, மதவாத அமைப்புக்கள் அனைத்துமே இன்று அமைதியாகியுள்ளன. ஆகவே இவர்கள் அனைவரும் யாருடைய தேவைக்காகச் செயற்பட்டனர் என்பதும் தெளிவாகியுள்ளது. எனவே மக்கள் இப்போதாவது உண்மைகளை உணரவேண்டிய கட்டாயம் உள்ளது. ஆனால் மக்கள் இன்றும் அவற்றை அறிந்து கொள்ளத் தயாரில்லாத நிலையில் உள்ளனர்.

ஜனாதிபதி தனது பதவிப்பிரமாண நிகழ்வின்போதே தான் சிங்கள, பௌத்த வாக்குகளில் வெற்றி பெற்றவன் என்ற அடையாளத்தை காட்டிச் சிறுபான்மை மக்களை அச்சப்படுத்தியுள்ளார். இவர்களின் அரசையும் பௌத்த, சிங்களவாத அரசாக அமைக்கவே முயற்சிகளை எடுப்பார்கள் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

ஆகவே தமிழ், முஸ்லிம் மக்களைப் புறக்கணித்த அரசாங்கம் உருவாகினால் அதில் அதிக பாதிப்பு சிறுபான்மை மக்களையே சென்றடையும். அதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக நாம் கருதுகின்றோம். எனவே எதிர்க்கட்சியாக நாம் பலமடையவே சகல மக்களையும் சந்தித்து எமக்கான ஆதரவை கேட்போம் – என்றார். (ஐ)

## கோட்டாபயவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கிறார்.

அதில் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு:–

அண்மைக் காலங்களில் சமூக ஊடகங்களில் வெளிவந்த தகவல்களின் அடிப்படையில் ஞானசார தேரர் தன்னுடைய கடமை முடிந்து விட்டதாகவும் நடைபெறப்போகும் பொதுத் தேர்தலுடன் பொதுபல சேனாவைக் கலைத்து விடப் போவதாகவும் தெரிவித்துள்ள கருத்தின் ஊடாக அவரது சுயரூபம் வெளிப்பட்டுள்ளது.

முன்னர் ஞானசார தேரர் தலைமையில் தர்கா நகரில் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதலின்போது அதன் பின்னணியில் இவர் இருந்தார் என்பது வெளிப்படையான உண்மை.

இருந்தும் அப்போதிருந்த அரச தலைவர்கள் ஞானசார தேரருக்கு எதிராக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே சிறுபான்மை இனத்தவர்கள் மீது தனது அடாவடிகள் ஊடாக இனவாதத்தைத் தூண்டிவிட்டு தனிச்சிங்கள ஆட்சியை அமைப்பதே இவரது நோக்கம் என்பது இப்பொழுது வெளிப்படையாகி விட்டது.

மேலும் இவரது பின்னணியில் நின்று செயற்பட்டவர்களின் முகத்திரைகளும் கிழிந்துள்ளன.

அன்று தேர்தல் காலத்தில் நீராவியடிப் பிள்ளையார் ஆலயச் சர்ச்சையில் ஞானசார தேரர் மூக்கை நுழைத்து எதற்காக என்ற சந்தேகம் எழுகிறது. நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் ஏற்படுத்தப்பட்ட கலவரத்திற்கு மூலகாரணமான இவர் அதே விடயத்தை வைத்துச் சிங்கள தேசத்தை உசுப்பேற்றி விட முயன்றிருக்கின்றாரா?

ஒரு தேரருக்கு தேவையான எந்த ஓர் அடிப்படை நல்லொழுக்க விழுமியங்களும் இவரிடம் இருப்பதாகத் தெரியவில்லை. சண்டியராகச் செயற்படும் ஞானசார தேரரை வந்திருக்கும் புதிய அரசாவது கட்டுப்படுத்துமா என்பதை அரசு மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டும்.

சிங்களவர்களுக்குப் பொருத்தமான தந்தை கிடைத்துவிட்டார் என்று கூறப்படுகின்றது. அப்படியானால் சிறுபான்மை இனத்தவர்கள் அநாதைகளாக விடப்பட்டுள்ளார்களா என்ற கேள்வியை எழுப்பவேண்டிய நிலையில் நாங்கள் உள்ளோம்.

இந்த நாடு தமிழ், சிங்கள மொழி பேசும் மக்களுக்கான நாடு. இரண்டு ஆட்சி மொழிகளைக் கொண்ட நாடு. இங்கு சிங்களம் என்ற வார்த்தையை மட்டும் பேசுவது என்பது இனவாத கருத்துக்களை விதைப்பதாகும்.

உரிமைகளுக்காக போராடுபவர்கள் இனவாதிகள் அல்லர். தமிழ்மொழிக்கான அங்கீகாரத்தை வழங்க தவறினால் அதன் உலக நீதி உங்களுக்கான பாடங்களை எதிர்காலத்தில் கற்றுத் தரும். அதே போல் கடந்த காலங்களில் கற்றுக்கொண்ட பாடங்களை ஞாபகத்தில் கொள்வது நல்லது – என்றுள்ளது. (ஐ)

## மாவீரர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபைத் தவிசாளர் சுரேன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கலந்துகொண்டார். இதன்போது பொதுச்சுடர் ஏற்றப்பட்டு பொது உருவப் படத்துக்கு மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டது.

மாவீரர்களின் பெற்றோர் நெய் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினர். நிகழ்வில் மாவீரர்கள் நினைவாக மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துடிக்கின்றார்.

ஆனால், முயற்சி பலனளிப்பதாக இல்லை என்பதுதான் அவரது அவல நிலைமை.

தமது சுதந்திரக்கட்சியின் சார்பில் தேசியப்பட்டியல் மூலம் எம்.பியான யாரையாவது, அந்தப் பதவியை இராஜினாமாச் செய்ய வைத்துவிட்டு அந்த இடத்துக்குத் தாம் போகலாம் என்று நம்பியிருந்தார் அவர்.

ஆனால், தேசியப் பட்டியல் எம்.பிக்கள் யாரும் அவருக்காகத் தமது பதவியை விட்டுக் கொடுக்கத் தயாரில்லை. அதனால் எம்.பியாகும் அவர் நினைவு பகல் கனவாகி வருகின்றது.

எம்.பியாகவோ, ஜனாதிபதியாகவோ இல்லாமல் இப்படி அரசியல் சூனியத்தில் நீண்ட பல வருடங்களின் பின்னர் அவர் இப்போதுதான் சிக்குண்டிருக்கின்றார்.

தேசியப் பட்டியல் எம்.பிக்கள் எவரும் தாமாக இராஜினாமாச் செய்யாவிட்டால் யாராவது ஒரு தேசியப் பட்டியல் எம்.பி. மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, அவரைப் பதவி இழக்க வைத்து விட்டு, அந்த இடத்துக்கும் தாம் நாடாளுமன்றத்துக்குள் நுழையலாம் என்றும் அவர் ஒரு முயற்சி செய்து பார்க்கின்றார்.

அதற்காகத்தான் மூத்த சுதந்திரக்கட்சி உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌஸியைப் பலிக்கடாவாக்க அவர் பார்க்கிறார்.

பௌஸியை சுதந்திரக் கட்சியிலிருந்து நீக்கும் முடிவை மைத்திரிபால சிறிசேன தலைமையில் கடந்த வாரம் கூடிய கட்சியின் செயற்குழு எடுத்தது.

அப்படிக் கட்சியை விட்டு பௌஸி நீக்கப்பட்டு விட்டமையால் அவரை எம்.பி. பதவியிலிருந்து நீக்கும் படி நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்கும், தேர்தல் ஆணையாளருக்கும் கட்சி சார்பில் அறிவிக்கப்பட ஏற்பாடாகியிருந்தது.

ஆனால், சு.க.வின் இந்த நடவடிக்கைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க பௌஸி முடிவு செய்து அறிவித்திருக்கின்றார்.

தம்மைக் கட்சியிலிருந்து வெளியேற்றுவதற்கு எதிராக பௌஸி சட்ட நடவடிக்கை எடுப்பாராயின் அந்தத் தீர்ப்பு வரும் வரை அவர் எம்.பி. பதவியில் தொடர முடியும்.

தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் ஆகக்கூடியது இன்னும் எட்டு, ஒன்பது மாதங்கள் மட்டுமே என்பதால், அதற்கு முன்னர் பௌஸி எடுக்கும் சட்ட நடவடிக்கை தொடர்பாக நீதிமன்றத்தின் இறுதி முடிவு வரவாய்ப்பில்லை என்று தெரிகின்றது.

அதுதான் நிலைமை என்பதால் இந்த நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு அல்லது பதவிக் காலம் முடிந்து செயலிழந்து போவதற்கு முன்னர் பௌஸியின் எம்.பி பதவியைப் பறித்து, வெளியேற்றி, அந்த இடத்துக்கு மைத்திரிபால சிறிசேன எம்.பியாவது என்பது சாத்தியமேயற்றது என்கின்றன சட்டவட்டாரங்கள்.

பாவம்... மைத்திரியார்...!

தான் நாடாளுமன்றத்துக்கு எம்.பியாக வந்தால் தமக்கு சபாநாயகர் பதவியைத் தரமுடியுமா என்று மைத்திரியார் புதிய ஆட்சிப்பீடத்திடம் ஒரு கோரிக்கையை முன் வைத்திருக்கின்றார் என்றும் கூறப்படுகின்றது.

முதலில் எம்.பியாக நாடாளுமன்றத்துக்கு வாருங்கள், பின்னர் அது பற்றி யோசிக்கலாம் என்ற சாரப்பட புதிய ஆட்சிப் பீடத்திடமிருந்து மைத்திரியாருக்கு பதில் தரப்பட்டதாம்.

பாவம். பச்சாதாபத்துக்கு பெரிதும் உரியவராகிவிட்டார் மைத்திரியார்.

*“ஆடிய ஆட்டம் என்ன...?”*

– என்று தொடங்கும் கண்ணதாசன் கவிதை அடிகள்தாம் நினைவுக்கு வருகின்றன.

★ ★ ★

பெருவெற்றி மூலம் அதிரடியாக – அட்டகாசமாக – ஜனாதிபதி பதவிக்கு வந்து விட்டார் கோட்டபாய ராஜபக்ஷ. ஆனால், அதில் சந்தோஷப்பட முடியாத வகையில் சில இடர்பாடுகள் உள்ளன.

கோட்டபாய ஜனாதிபதியாகி ஒரு வாரம் கடக்கின்றது. ஆனால் எந்த நாட்டுத் தலைவர் அவரை வாழ்த்தினார்கள்?

இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, பங்களாதேஷ், ஜப்பான், சீனா, ரஷ்யா, சீசெல்ஸ் என்று நம் சுற்றுவட்டாரங்கள்தான் வாழ்த்தியுள்ளன.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மன், சுவிஸ், கனடா என்று எந்த மேற்குலகின் தலைவர்களுக்கும் அவருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பவில்லை.

ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து மற்றும் சுவீடன், டென்மார், நோர்வே அடங்கலாக நோர்ட்டிக் மற்றும் ஸ்கண்டிநேவிய நாடுகள் போன்றவற்றின் தலைவர்களிடம் இருந்தும் கூட வாழ்த்துச் செய்தியோ தேர்தல் வெற்றிக்குப் பாராட்டோ வரவேயில்லை.

கடந்த ஆண்டு இலங்கையில் 52 நாள்கள் நீடித்த அரசியல் சதிப் புரட்சியின் பின்னர் ரணில் விக்கிரமசிங்க மீண்டெழுந்து திரும்பவும் பிரதமரான போது கூட அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பிடமிருந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாழ்த்துச் செய்தி வந்தது.

கோட்டபாய விடயத்தில் – அதுவும் இத்தகைய ஒரு வெற்றியீட்டிய இலங்கைத் தலைவரின் விடயத்தில் – மேற்குலகத் தலைவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து அதீத மௌனம் காட்டுவதற்குப் பின்னால் ஆழமான ஒரு விடயம் புதைந்திருக்கின்றது.

இது, ‘கோட்டா அண்ட் கோ’வுக்குப் புரிந்தால் சரி...!

–மின்னல்–

## நாடாளுமன்றை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய நாடாளுமன்றக் கூட்டத் தொடரை முடித்துக் கொள்வதற்குத் தயார் நிலைகள் காணப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பெரும்பாலும் அடுத்த வாரமளவில், நாடாளுமன்றக் கூட்டத் தொடரை முடித்து வைப்பதற்கான அறிவித்தல் ஜனாதிபதியினால் விடுக்கப்படலாம் என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இறுதியாக நாடாளுமன்றம் கூடிய போது, அடுத்த அமர்வு எதிர்வரும் 3ஆம் திகதி இடம்பெறும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

இருப்பினும், புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளதனால், பழைய கூட்டத்தொடரை இத்துடன் முடித்துக் கொண்டு ஜனாதிபதியினால் புதிய கூட்டத் தொடர் ஆரம்பித்து வைக்கப்படும் என அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள விசேட அதிகாரங்களின் கீழ் விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் நாடாளுமன்ற கூட்டத் தொடரை அவர் முடித்து வைக்க முடியும். இதற்காக அவரால் விடுக்கப்படும் அந்த விசேட வர்த்தமானி அறிவித்தலில் இரண்டு மாதங்களுக்குள் ஏதேனும் ஒரு தினத்தில் திகதி, நேரம் குறிப்பிட்டு, நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டும் பிரகடனத்தையும் அவர் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இதனால், ஜனாதிபதியினால் வெளியிடப்படும் வர்த்தமானி அறிவித்தலில் மீண்டும் நாடாளுமன்றம் கூடும் தினமும் இடம் பெற்றிருக்கும் என்றும் கூறப்படுகின்றது.

## சங்கிலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை வீதியால் நடந்து சென்ற பெண்ணின் தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிள் சென்ற இரண்டுபேர் அறுத்துச்சென்றனர். பாதிக்கப்பட்ட பெண் யாழ். பொலிஸ் நிலையத்தில் உடனடியாக முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

இந்நிலையில் யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பொலிஸார் சம்பவம் நடை பெற்ற இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அந்தப் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமராவின் உதவியுடன் சந்தேக நபர்கள் பயன்படுத்தியதாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிள் இனம் காணப்பட்டது. வாகன இலக்கத்தின் அடிப்படையில் தங்கச் சங்கிலி அறுப்பில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் சம்பவம் நடைபெற்று சில மணி நேரத்திலேயே இருவர் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 23,27 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் உடனடியாக யாழ்ப்பாணம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## தலைமைத்துவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கு ஐ.தே.க. தீர்மானித்துள்ளது.

கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் விவகாரத்தில் ஐ.தே.க. இரண்டுபட்டு போயுள்ள நிலையில், இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறும். இதற்கு முன்னதாக கட்சியின் செயற்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. (ஐ)

## சுகாதாரத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கத்துக்கு முன்பாக கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

வடக்கு மாகாணம் முழுவதும் நீண்ட காலமாக தற்காலிக சேவையில் ஈடுபட்டு வந்த சுகாதாரத் தொண்டர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் எனக் கூறி பலமுறை ஆளுநரை சந்தித்துத் தமது பிரச்சினைகளைத் தெளிவுபடுத்தியுள்ளனர்.

இவர்களுக்கான நிரந்தர நியமனம் நேர்முகத் தேர்வின் மூலம் வழங்கப்படும் என ஆளும் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்ட நிலையில் தற்போது ஆளுநர் பதவி விலகியதை அடுத்து தமக்கான நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து இந்தக் கவனயீர்ப்பு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஆளுநர் அலுவலகத்தில் பொறுப்பு வாய்ந்த அதிகாரி ஒருவரிடம் சுகாதாரத் தொண்டர்களின் கையொப்பமிட்ட கடிதம் ஒன்று கையளிக்கப்பட்டது. (ஐ)

## மாவீரர் நாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவரும் தடைவிதிக்க முடியாது எனவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதியாக கோட்டபாய பதவியேற்ற பின்னர் மாவீரர் நாள் நினைவேந்தல் தொடர்பாக மக்கள் மத்தியில் ஒரு பதற்றமான நிலை உருவாகியிருக்கின்றது. ஆனால் அவ்வாறான ஒரு பதற்றம் தேவையற்றதாகும்.

உலகில் எங்கும் இறந்தவர்களை நினைவு கூர்வதற்குத் தடை விதிக்க முடியாது என்பதுடன் அது உலகில் பல நாடுகளில் ஒரு வழக்கமாக உள்ளது. இந்நிலையில் விடுதலைப் போரில் உயிரிழந்த எம் உறவுகளை நினைவுகூர்வதற்கு எவரும் தடைவிதிக்க முடியாது.

தென்னிலங்கையில் ஜே.வி.பி. புரட்சியில் உயிரிழந்தவர்களுக்கு கார்த்திகை வீரர்கள் தினம் என்ற ஒரு நாளில் நினைவுகூரல் நடத்த அனுமதிக்கப்பட்டிருக்கும் இலங்கையில் தமிழர்கள் மாவீரர்களை நினைவு கூர்வதில் என்ன தவறு இருக்க முடியும் ?

எனவே எந்தவொரு தடை விதிக்கப்படாலும் மாவீரர்களை நினைவு கூர்வதிலிருந்து மக்கள் தவறக்கூடாது. வல்வெட்டித்துறை தீருவில் வெளியில் மாவீரர்களுக்கான நினைவேந்தலை நடத்த பொலிஸார் சில தடைகளை விதிக்கின்றனர். ஆனால் அமைதியாக மாவீரர் நாள் நினைவேந்தல் நடக்கும்–என்றார். (ஐ–07)

## பௌசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி தீர்மானித்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ள போதிலும் அது சம்பந்தமாக தனக்கு அறிவிக்கவில்லை என ஏ.எச்.எம். பௌசி தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட்டால், அதற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப் போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த அரசுடன் இணைந்து செயற்பட்ட போதிலும் எந்தக் கட்சியிலும் இணையாமல், தொடர்ந்தும் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினராகவே இருந்து வருகின்றேன். அதற்கான சந்தாப் பணத்தையும் சரியாகச் செலுத்தியுள்ளேன். இதனால், என்னைக் கட்சியில் இருந்து நீக்க நடவடிக்கை எடுத்தால் அது சட்டவிரோதமான நடவடிக்கையாக இருக்கும்.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்துக்கு வருவதற்காக இரண்டு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பதவி விலகுமாறு கோரப்பட்டுள்ளது. அதற்கு அவர்கள் இணங்கவில்லை.

இதனால் என்னைச் சட்டவிரோதமான முறையில் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கி விட்டு, நாடாளுமன்றத்துக்கு வருவதற்கான நடவடிக்கைகளில் முன்னாள் ஜனாதிபதி ஈடுபட்டு வருகிறார்.

நான் எந்த வகையிலும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகாது மக்களுக்குச் சேவையாற்றுவேன். சுதந்திரக் கட்சி என்னைக் கட்சியில் இருந்து நீக்கினால், அதற்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பேன் – என்றார். (ஐ)

## நாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாத்திரம் 15 ஆயிரத்து 632 பேர் வரையில் டெங்கு நோய் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

இந்நிலையில் டெங்கு நோய்த் தாக்கம் மேலும் அதிகரித்துச் செல்வதைத் தடுப்பதற்காக சுற்றுச் சூழலைச் சுத்தமாக வைத்திருக்குமாறு பொதுமக்களிடம் டெங்கு நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவு கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் மாத்திரம் இவ்வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 2 ஆயிரத்து 934 பேரும், கொழும்பின் ஏனைய பகுதிகளில் 12 ஆயிரத்து 698 பேரும் டெங்கு நோய் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

அத்துடன், கொழும்பு மாநகரசபைக்கு உட்பட்ட பகுதியில் இம்மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 391 பேரும், கொழும்பின் ஏனைய பகுதிகளில் 2 ஆயிரத்து 23 பேரும் டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அந்த வகையில் கடந்த மாதத்திலேயே அதிகளவிலானோர் டெங்கு நோய் தாக்கத்திற்கு உள்ளாகியிருந்ததுடன், 11 ஆயிரத்து 213 பேரே இவ்வாறு நோய் தாக்கத்திற்கு உள்ளாகியிருந்தனர். ஆயினும் இம்மாதத்தின் இது வரையான காலப்பகுதியில் மாத்திரம் சுமார் 10 ஆயிரத்து 273 பேர் வரையில் டெங்கு நோய் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம் இது வரையில் சுமார் 73 ஆயிரத்திற்கும் அதிகமானோர் டெங்கு நோய் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர். அத்துடன், கடந்த ஏப்ரல் மாதத்தில் மாத்திரம் சுமார் 2 ஆயிரத்து 970 பேர் டெங்கு நோய் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளதுடன், அம்மாதமே இது வரையான காலப்பகுதியில் குறைந்தளவிலானோர் டெங்கு நோய் தாக்கத்திற்கு உள்ளான மாதமாக பதிவாகியுள்ளது.

கொழும்பு, கம்பஹா, கண்டி, களுத்துறை ஆகிய பகுதிகளிலேயே டெங்கு நோய்த்தாக்கம் இம்மாதத்தில் அதிகரித்த மட்டத்தில் காணப்படுகின்றது.

அந்த வகையில் முறையே, கொழும்பு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 414 பேரும், கம்பஹா மாவட்டத்தில் ஆயிரத்து 17 பேரும், கண்டி மாவட்டத்தில் ஆயிரத்து 468 பேரும், களுத்துறை மாவட்டத்தில் மாத்திரம் 695 பேர் வரையிலும் இம்மாதத்தின் இது வரையான காலப்பகுதியில் டெங்கு நோய் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

கடந்த வருடத்தில் நவம்பர் மாதத்தில் 4 ஆயிரத்து 537 பேர் வரையில் டெங்கு நோய் தாக்கத்திற்கு உள்ளாகியிருந்த நிலையில் இவ்வருடத்தில் நவம்பர் மாதத்தில் டெங்கு காய்ச்சல் பரவும் வேகம் அதிகரித்துள்ளமையை காணக்கூடியதாகவுள்ளது. (ஐ)

## இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்தல் வெளியிடுகின்றார். இவ்வாறான செயல்கள் ஊடாக அவர் சர்வாதிகாரப்போக்குடைய இராணுவ ஆட்சிக்கு வித்திடுகின்றாரா எனச் சந்தேகம் எழுந்துள்ளதாக ஜே.வி.பியின் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஜே.வி.பியின் அலுவலகத்தில் நேற்றுத் தாம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் நடைபெற்று முடிந்துள்ள ஜனாதிபதித் தேர்தலில் இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டிச் சிங்கள தேசியத்தை உசுப்பேற்றி, கோட்டாபய ராஜபக்‌ஷ பதவியைப் பெற்று குளிர் காய்ந்து வருகின்றார். அவர் ஆட்சிக்கு வந்ததும் ராஜபக்‌ஷக்களின் குடும்ப ஆட்சி மீண்டும் நடந்தேறியுள்ளது.

ஒரு சகோதரர் பிரதமர், இன்னொரு சகோதரர் முக்கிய அமைச்சர் எனக் குடும்ப ஆட்சி மெல்ல மெல்லத் தொடங்கியுள்ளது. மஹிந்த ராஜபக்‌ஷ ஆட்சியில் இருந்தபோதும் இதே நிலைமையானகுடும்ப ஆட்சியே காணப்பட்டது.

ஜனாதிபதியாகக் கோட்டாபய பதவி ஏற்று உரையாற்றும்போதே தாம் தனிச்சிங்கள வாக்குகளில் வெற்றிபெற்றார் எனவும் அனைத்து மக்களையும் தன்னுடன் இணையுமாறும் கூறியிருந்தார். இந்த உரையை இனவாத, மதவாத ரீதியாகவே நான் பார்க்கின்றேன். இது சிறுபான்மை இனங்கள் மத்தியில் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

ராஜபக்‌ஷ குடும்பம் ஆட்சிக்கு வந்து சில நாள்களிலேயே தங்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள், விசாரணைகள் போன்றவற்றில் தலையீடு செய்ய ஆரம்பித்துள்ளனர். அதன் முக்கிய சம்பவமாக நாட்டின் புலனாய்வுப் பணிப்பாளருக்கு இடமாற்றம், பதவி இறக்கம் போன்றவற்றைக் கூறலாம். இதன் ஊடாக ராஜபக்‌ஷக்கள் தங்கள் மீதான குற்றச்சாட்டுக்களை மறைக்கும் பணியில் மும்முரமாக இறங்கியுள்ளனர். இது மட்டுமல்லாது அரசின் முக்கிய உயர்பதவிகளுக்கு ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளை நியமித்து வருகின்றனர்.

அதிலும் குறிப்பாக இலங்கையில் நடைபெற்ற போரின்போது பல குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளான இராணுவ அதிகாரிகளை உயர்பதவிகளில் அமர்த்தியுள்ளார். இது நீதியை எதிர்பார்த்திருக்கும் சிறுபான்மை இன மக்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுமட்டுமல்லாது, நாடு முழுவதும் ஆயுதம் தாங்கிய பாதுகாப்புப் படையினரை நிலைநிறுத்துவதற்கான வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி வெளியிட்டுள்ளார். இந்தச் செயற்பாடானது வடக்கு – கிழக்கில் மீண்டும் இராணுவம் பலப்படுத்தப்படும் என்ற செய்தியை எடுத்துக்காட்டுகின்றது. இது வடக்கு – கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு மிகப்பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

எதிர்காலத்தில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறும் நோக்கில் ராஜபக்‌ஷ குடும்பம் சில காய்நகர்த்தல்களை முன்னெடுத்து வருகின்றது. அந்த வகையில் பொதுத்தேர்தல் நடைபெறும் வரை அமைதியாகப் பயணிக்கும் ராஜபக்‌ஷ குடும்பம், தேர்தலின் பின்னர் மீண்டும் குடும்ப ஆட்சி, அராஜக ஆட்சிப் போக்கில் களம் இறங்கும். கோட்டாபய தனிச்சிங்கள வாக்குகளினால் ஜனாதிபதியாக வந்துள்ளார்.

எனவே பொதுபலசேனா இனி இயங்கத் தேவையில்லை என ஞானசார தேரர் கூறியுள்ளார். அவர் ஏன் அவ்வாறு கூறினார் எனில் இத்தனை காலமும் பொதுபலசேனா செய்துவந்த மதவாத போக்கைத் தற்போதைய அரசு செய்கின்றது, எதிர்காலத்திலும் செய்யும் என்பதால்தான் – என்றார். (ஐ–07)

## டக்ளஸை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பதவி விலகச் சொல்லுங்கள். அதன் பின்னர் அமைச்சர் டக்ளஸ் பற்றி சிறிதரன் விமர்சிக்கலாம் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணிலைக்குள்ளார் என்று மக்கள் முன்னிலையில் கூறிவிட்டுப் பின்னர் அதே ரணிலின் பின்னால் திரிகின்றார். அவ்வாறானவருக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை விமர்சிக்கத் தகுதியில்லை.

ரணிலை எத்தனை தடவைகள் எவ்வாறு எல்லாம் விமர்சித்தீர்கள்? பின்னர் அதே ரணிலின் பின்னால் திரிகின்றீர்கள். இவ்வாறான சிறிதரன் முதலில் கண்ணாடியைப் பார்த்துவிட்டு மற்றவர்களை விமர்சிக்கவேண்டும்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தாம் விமர்சித்தவர்களின் பின்னால் ஒரு நாளும் அலைந்தவர் அல்லர்.

நாடாளுமன்ற அமர்வுகளில் சிறிதரன் மீது ஏராளமான குற்றச்சாட்டுக்களை டக்ளஸ் தேவானந்தா மீது சுமத்தி பல வினாக்களைத் தொடுத்திருந்தார். எனினும் இன்று வரை அவற்றுக்குப் பதிலைக் கூறப்பட்டதில்லை.

தமிழ் மக்களை ஏமாற்றி ரணிலின் பின்னால் வால் பிடித்துக் கொண்டு திரியும் கூட்டமைப்பினர் – முக்கியமாக சிறிதரன் போன்றோர் – முதலில் உங்களிடம் நீங்களே கேள்வி கேளுங்கள். அதன் பின்னர் மற்றவர்களை விமர்சிக்கலாம்.

நாட்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஈ.பி.டி.பி. போட்டியிடவில்லை. மாறாக பெரமுனவின் சார்பாக போட்டியிட்ட கோட்டாபய ராஜபக்‌ஷவுக்கே ஆதரவு வழங்கியிருந்தது. அவரை வடக்கு – கிழக்கு மக்கள் வேறு காரணங்களுக்கு நிராகரித்து இருக்கலாம்.

ஆனால் கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் மூன்று கட்சிகள் இணைந்து போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 154 ஆசனங்களைக் கைப்பற்றியது. எனினும் தனி ஒரு கட்சியாக ஈ.பி.டி.பி. 71 ஆசனங்களைக் கைப்பற்றியது. மக்கள் தற்போது தெளிவாகி வருகின்றனர்.

முதலில் அரசியல் தீர்வு வராவிட்டால் அரசியலில் இருந்து ஒதுங்குவேன் என அறிக்கை விட்ட கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பதவி விலகச் சொல்லுங்கள். அதன் பின்னர் மற்றவர்களை விமர்சியுங்கள் – என்றார். (ஐ–07)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## மனோ, ஹக்கீமின் தவறான கற்பிதம்

'காலம் பிந்திய ஞானம்' அல்லது 'சுடலை ஞானம்' என்பார்கள். அதுதான் சிறுபான்மை இனத்தவர்களின் சில கட்சியினருக்கு – தரப்பினருக்கு – இப்போது கிட்டியிருக்கின்றது போலும்.

எது தங்களுக்குப் பாதுகப்பானது என்று அவர்கள் தவறாகக் கற்பிதம் பண்ணி நம்பிக் கொண்டிருந்தார்களோ அதுதான் அவர்களுக்குப் பாதுகாப்பற்றது என்பதை இப்போது காலம் பிந்தித்தான் அவர்கள் பட்டறிந்திருக்கின்றார்கள்.

அதற்கு இனி நிவாரணம் தேடுவது அல்லது நடந்த தவறைத் திருத்த முயல்வது 'குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூடும் வேலை'. அல்லது 'கண் கெட்ட பின்னர் சூரிய நமஸ்க்காரம் செய்வது' போன்றது.

மனோ கணேசன் போன்ற மலையகக் கட்சிகளின் தலைவர்களும், ஹக்கீம் போன்ற முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களுக்கும் இந்த விடயத்தில் காலம் – தாழ்த்தி காலம் கடந்து – பாடம் படித்தவர்களாவர்.

இந்த நாட்டில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை குறித்து தமிழர் தேசத்துக்கு ஆரம்பம் முதலேயே தெளிவான பார்வை – உருப்படியான கணிப்பீடு – இருந்தது.

என்றோ ஒரு நாள் சிறுபான்மையினரின் உரிமைகளை – இந்தத் தீவில் அவர்களின் இருப்பியலை – காவு கொள்ளும் பிரதான காரணியாக நிறைவேற்று அதிகாரம் மாறும் என்ற கணிப்பீடு எழுபதுகளில் இந்த நிறைவேற்று அதிகார ஆட்சி முறை வந்த போதே தமிழ்த் தலைவர்களுக்கு இருந்தது.

அதனால் வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் – சந்தப்பம் வாய்த்த போதெல்லாம் – அந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழித்துக் கட்டுவதற்காகத் தமிழர் தேசிய இனம் தொடர்ந்து குரல் எழுப்பி வந்திருக்கின்றது.

ஆனால், இந்த ஆட்சி முறை ஒழிப்புக்கு தெற்கு வாழ் சிறுபான்மையினரிடமிருந்து ஆரோக்கியமான வரவேற்புக் கிடைக்கவில்லை. மனோ கணேசன், ரவூப் பஹக்கீம் போன்ற தலைவர்கள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீடிக்க வேண்டும் என அடித்துக் கூறினர்.

அந்த ஜனாதிபதித் தேர்தல் ஒன்றுக்காகத்தான் சிங்களத் தலைவர்கள் தெற்கில் பரந்து வாழும் சிறுபான்மை மக்களைத் தேடி வருகின்றனர். ஆகையால், அந்த முறைமை நீடிக்கப்பட வேண்டும் என்பதுதான் அவர்களின் புத்திபூர்வ வசனமாக இருந்தது.

2015 இல் புதிய ஜனாதியாக மைத்திரிபால சிறிசேன தெரிவு செய்யப்பட்ட பின்னர், புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. அதில் கூட இந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்கும் எத்தனங்கள் முன் நகர்த்தப்பட்டன.

எனினும், மனோ கணேசனும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமும் அந்த எத்தனத்ததைக் கடுமையாக எதிர்த்து நின்று தடுத்தனர்.

ஆனால், இப்போது என்ன நடந்திருக்கின்றது?

இந்த நாட்டின் சிறுபான்மையினரான தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் எல்லோரையும் அடியோடு ஒதுக்கித் தள்ளி வைத்து விட்டு பௌத்த, சிங்களவர்கள் தனித்து நின்றே ஆட்சியில் இருக்கும் அரசை வீட்டுக்கு அனுப்ப முடியும், புதிய நிறைவேற்று அதிகார ஜனாதிபதியையும் அவரது அரசையும் ஆட்சிக்குக் கொண்டு வர முடியும் என்பதை எல்லாம் தமிழர், முஸ்லிம் தலைவர்களுக்கு ஐயந்திரிபற எடுத்துணர்த்தியிருக்கின்றார். நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல்.

அதுவும் தொத்துப் பொறியில் அல்ல, கொஞ்சநஞ்ச வாக்குகள் வித்தியாசத்தில் அல்ல, சுமார் பதின்மூன்று லட்சத்துக்கும் அதிகமான வாக்கு வித்தியாசத்தில் ஸ்திரமான அரசியல் மாற்றம் ஒன்றை பௌத்த, சிங்களவர்கள் மட்டும் ஒன்றுபட்டு நின்று ஏற்படுத்த முடியும் என்ற பாடத்தை உறைப்பாக – சாட்டை அடியாக – இந்தத் தேர்தல் மூலம் உணர்த்தியிருக்கின்றனர் சிங்களவர்கள்.

தங்களுடைய விடுதலைப் போராட்டத்தை – உரிமைப் போராட்டத்தை – ஆயுத வழியில் மிக மோசமாக, மிகக் கோரமாக, மிகக் கொடூரமாக, மிகக் குரூரமாக – அழிப்பதற்கான அரசியல், இராணுவத் தலைமைத்துவத்தை ஈவிரக்கம் பார்க்காமல் வழங்கியது இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையும், அதிகார்ததை ஒரே இடத்தில் குவிக்கும் இந்த ஒழுங்கமைப்புத்தான் என்பதை அடையாளம் கண்டு, அதன் காரணமாக வாய்ப்புக் கிடைக்கும் போது அதனை ஒழித்துக்கட்டி நாடாளுமன்றுக்குப் பதில் கூறக் கூடிய பிரதமர் தலைமையிலான ஆட்சி முறையை ஏற்படுத்த முயலுவோம் என்று தமிழர் தரப்பு திரும்பத் திரும்ப வலியுறுத்தியது. இருந்தபோதிலும் மனோ கணேசனுத், ஹக்கீம்மும் அவர்களுடன் சேர்ந்த தலைவகளும்தான் முட்டுக் கட்டை போட்டு அந்த முயற்சிகளுக்கு ஆப்பு வைத்தனர். அவற்றை முறியடித்தனர்.

தாம் காப்பற்றிப் பேணிய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையில் ஜனாதிபதி பதவியைத் தெரிவு செய்வதில் சிறுபான்மையினரின் பங்களிப்பின் சீத்துவம் யாது என்பதை நடந்து முடிந்த தேர்தல் மனோ கணேசன், ஹக்கீம் கோனற தலைவர்களுக்கு உறைப்பாக – சூடான பாடமாக – உணர்த்தியிருக்கும் என நம்பலாம்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கு முன்னர் எடுக்கப்பட்ட முயற்சிகளை முறியடித்த பாவத்துக்கு, இப்போது படித்துக் கொண்ட பட்டறிவுக்கு அமைய, இனி ஒரு தடவை அப்படி நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும் வாய்ப்பு ஏற்பட்டால், அல்லது அதற்கான முயற்சி முன்னெடுக்கப்பட்டால், மனோ கணேசன், ஹக்கீம் போன்ற தலைவர் வாயைப் பொத்திக் கொண்டு அடங்கியிருக்க வேண்டும்.

அதுதான், இந்த முறைமையை ஒழிக்க விடாமல் தாம் செய்த பாவத்துக்கு அவர்கள் செய்யும் பாவ விமோசனமாக இருக்கும்.

# ரூ. 8 கோடி பெறுமதியான ஹெரோய்ன் யாழ்ப்பாணத்தில் முதல்முறை அழிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 24

யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக சுமார் 8 கோடிரூபா பெறுமதியான 8 கிலோகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் தீயிட்டு அழிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கரின் உத்தரவில் இந்த ஹெரோய்ன் அழிக்கப்பட்டது.

2017ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதியன்று காங்கேசன்துறை கடற்பரப்பில் வைத்து 6 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து உயிர்க்கொல்லி போதைப் பொருளான ஹெரோயின் 8 கிலோ 128 கிராம் 33 மில்லிக்கிராம் மீட்கப்பட்டதாகக் கடற்படையினர் தெரிவித்தனர்.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் இடம்பெற்று 6 இந்திய மீனவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் வழக்குத் தொடுநரால் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்படாத நிலையில் தள்ளுபடி செய்யப்பட்டது.

அதனால் இந்திய மீனவர்கள் 6 பேரையும் விடுவித்து விடுதலை செய்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் தீர்ப்பளித்தார்.



இந்த வழக்கின் சான்றுப்பொருளான 8 கிலோ 128.3 கிராம் ஹெரோயினை தீயிட்டு அழிக்குமாறு மன்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றப் பதிவாளருக்கு உத்தரவிட்டது.

இந்த நிலையில் ஹெரோய்ன் போதைப் பொருள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கரால் தெரிவு செய்யப்பட்ட இடத்தில் அவர் முன்னிலையில் நீதிமன்ற உத்தியோகத்தர்களால் தீயிட்டு எரித்து அழிக்கப்பட்டது. (ஐ – 07)

(கஞ்சா போதைப் பொருள் அழிப்புப் பற்றிய செய்தி 5 ஆம் பக்கத்தில்)

# கிளிநொச்சியில் விபத்து நான்கு பேர் படுகாயம்!




கிளிநொச்சி, நவ. 24

பூநகரி செல்விபுரம் வீதி வளைவில் இடம்பெற்ற விபத்தில் நால்வர் காயமடைந்துள்ளனர்.

இரண்டு பாரவூர்திகள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதாலேயே நேற்று சனிக்கிழமை காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

படுகாயமடைந்தவர்களில் மூவர் யாழ். வைத்தியசாலையிலும், ஒருவர் பூநகரி வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்து குறித்து வழக்கு பதிவு செய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## பொலிஸாருக்கு மிளகாய்த்தூள் தூவி விட்டு தப்பிக்க முயன்ற மரணதண்டனைக் கைதி!

கொழும்பு, நவ. 24

கொழும்பு பொது மருத்துவமனையில் பொலிஸ் காவலில் சிகிச்சை பெற்று வந்த மரணதண்டனைக் கைதியொருவர் தப்பிக்க மேற்கொண்ட முயற்சியைப் பொலிஸார் முறியடித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் நடந்தது.

இருவர் மிளகாய்த்தூளை இரண்டு பொலிஸாரின் முகத்தில் தூவி, இந்தத் தப்பிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

மிளகாய்த்தூள் வீசிவிட்டு அவர்கள் தப்பியோடியபோது, இன்னொரு பொலிஸ்காரரால் விரட்டப்பட்டு மரணதண்டனை கைதி பிடிக்கப்பட்டார். மிளகாய்த்தூள் தாக்குதலில் இரண்டு பொலிஸார் பாதிக்கப்பட்டனர்.

இரண்டு கொலைகளை புரிந்தமைக்காக மஹர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மரணதண்டனை கைதியொருவரே தப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டவர். (ஐ)

## குற்றப்புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திலகரத்ன

கொழும்பு, நவ. 24

குற்றப்புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.திலகரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர இதனைத் தெரிவித்துள்ளார்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, குற்றப்புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக இதுவரை கடமையாற்றிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகரவுக்கு உடன் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

காலி பிரதிப் பொலிஸ் மா அதிபரின் பிரத்தியேக உதவி அதிகாரியாக அவருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.




**நாளை**
25.11.2019
திங்கட்கிழமை
நட்சத்திரம்: சதுர்த்தசி மு.இ. 10.58 வரை
திதி : சுவாதி அமிர்தம் மு.ப.11.21 வரை
இராகுகாலம் : 07.42 – 09.12
சுப நேரம் : 12.12 – 01.42

# ஆயிரம் கிலோ கஞ்சாவுக்கு யாழ்ப்பாணத்தில் தீ வைப்பு!





யாழ்ப்பாணம், நவ 24

சுமார் 10 கோடி ரூபா பெறுமதியான ஆயிரம் கிலோ கிராம் கேரளக் கஞ்சா போதைப்பொருள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் எரித்து அழிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கரின் உத்தரவில் அவரது முன்னிலையில் இந்தச் சான்றுப்பொருள்கள் எரித்து அழிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்துக்கு அண்மையாகவுள்ள வெற்றுக் காணியில் இந்தச் சான்றுப்பொருள்கள் எரித்து அழிக்கும் பணி நேற்றுச் சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் கடந்த ஒரு வருடத்துக்குள் இடம்பெற்று முடிந்த கஞ்சா போதைப்பொருள் குற்றத்துகான 20 வழக்குகளின் சான்றுப்பொருள்களை எரித்து அழிக்குமாறு மன்று உத்தரவிட்டிருந்தது.

அதனடிப்படையில் அவற்றை எரித்து அழிப்பதற்கான நடவடிக்கைகளை மேல் நீதிமன்ற பதிவாளர் மீரா வடிவேற்கரசன் முன்னெடுத்தார்.

யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்துக்கு அண்மையில் உள்ள வெற்றுக் காணியில் சுமார் ஆயிரம் கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருள் பொதிகளும் உடைத்து குவிக்கப்பட்டன.

மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் முன்னிலையில் அவை தீயிட்டு அழிக்கப்பட்டன.

இதேவேளை, கடந்த மூன்று வருடங்களில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் 2 ஆயிரத்து 500 கிலோக் கிராமுக்கு அதிகமான கஞ்சா போதைப்பொருள் எரித்து அழிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மின்தடை

யாழ்ப்பாணம், நவ.24

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**வவுனியா பிரதேசத்தில் -**

மறக்கறம்பளை, கரம்பன் ஆகிய பிரதேசங்களில் – மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## தேவைப்பட்டால் ஆயுதப் படையினரை பணியில் ஈடுபடுத்த கோட்டா உத்தரவு

கொழும்பு, நவ. 24

அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இல்லாத நிலையில், தேவைப்பட்டால், ஆயுதப்படையினரை பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்துவதற்கான உத்தரவை ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷ மீளவும் நடைமுறைப்படுத்தினார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் வழங்கப்பட்ட கட்டளை கடந்த வியாழக்கிழமையுடன் நிறைவடைந்த நிலையில் மீளவும் நடைமுறைப்படுத்தும் உத்தரவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன் தினம் வர்த்தமானி அறிவிப்பு ஊடாக வழங்கினார்.

பொது பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்கு முறைகளுக்கு அமைய, ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு, அனைத்து மாவட்டங்களிலும் தேவைப்பட்டால் ஆயுதப் படைகளின் உதவியைப் பெற முடியும் என, ஜனாதிபதியின் அதிசிறப்பு வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அவசரகாலச் சட்ட பிரகடனத்தைப் போல, இந்த ஒழுங்குமுறைக்கு நாடாளுமன்ற ஒப்புதலைப் பெறத் தேவையில்லை.

பொது பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ், ஜனாதிபதியிடம் உள்ள அதிகாரங்களின் அடிப்படையில் இந்த ஒழுங்குகளை நடைமுறைப்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தன்னை தீண்டிய பாம்பின் தலையை கடித்துத் துண்டாக்கினார் இளைஞன்!

கொழும்பு, நவ. 24

குருநாகல் ஹெட்டிப்பொல, நாகொல்லாகொட பகுதியில்,தன்னைத் தீண்டிய பாம்பின் தலையைக் கடித்துத் துண்டாக்கினார் இளைஞன் ஒருவர்.

இதனையடுத்து சுகயீனமடைந்த இளைஞனை அவரது உறவினர்கள் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். அவரால் கடித்து துண்டாக்கப்பட்ட பாம்பையும் உறவினர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

அந்த இளைஞர் நண்பர்களுடன் இணைந்து மதுபானம் அருந்திவிட்டு வீடு திரும்பும் வழியிலேயே அவரைப் பாம்பு தீண்டியுள்ளது. பாம்பு தன்னைத் தீண்டிய கோபத்தில் போதையிலிருந்த அந்த இளைஞர் அந்தப் பாம்பைப் பிடித்து அதன் தலையைக் கடித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஆசன ஒதுக்கீடு ஏற்பாடுகள் நிறைவு

கொழும்பு, நவ. 24

நாடாளுமன்றத்தில் புதிய அரசின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஆசன ஒதுக்கீடு செய்யும் நடவடிக்கை நிறைவடைந்துள்ளது.

படைகல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ இதனைத் தெரிவித்துள்ளார். புதிய அரசில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களின் சிரேஷ்டதுவத்துக்கு அமைய ஆசன ஒதுக்கீடு செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன என அவர் குறிப்பிட்டார். (ஐ)

## சிங்களம் வடக்கிலும் ஆதிக்கம்!



கொழும்பு, நவ. 24

வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வவுனியா பிராந்திய அலுவலகத்துக்கு முன்பாகச் சிங்கள மொழியில் மாத்திரம் அச்சிடப்பட்ட பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்பாக இந்தப் பகுதியில் சஜித் பிரேமதாஸவைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் தமிழ், சிங்கள மொழிகளில் பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

தேர்தல் முடிவடைந்துள்ள நிலையில் தற்போது விமல் வீரவன்ஸ, மஹிந்த ராஜபக்ஷ, பஸில், கோட்டாபய ராஜபக்ஷவின் புகைப்படங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமையுடன், அவற்றில் தனிச்சிங்கள மொழியில் வசனங்கள் அச்சிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

PCP northern PC PARK



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

# சட்டவிரோத பண பரிமாற்றக் குற்றம்: லண்டனில் பத்து இந்தியர்கள் கைது

லண்டன்,நவ.24

சட்டவிரோத பண பரிமாற்றம் செய்தனர் என லண்டனில் 10 இந்தியர்கள் கைது செய்யப்பட்டனர்.

இங்கிலாந்து தலைநகர் லண்டனில் 5 இந்தியர்களும், 5 வெளிநாடு வாழ் இந்தியர்களும் போதைப் பொருள்கள் கடத்தல், அமைப்பு ரீதியிலான குடியேற்றக் குற்றம் ஆகியவற்றின் மூலம் சட்டவிரோதப் பண பரிமாற்றம் செய்தனர் என எழுந்துள்ளது.

இதையொட்டி இங்கிலாந்தின் தேசிய குற்ற முகமை (என்.சி.ஏ) விசாரணை நடத்தியது.அதைத் தொடர்ந்து குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ள 10 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் சரண்சிங், வல்ஜீத் சிங், ஜஸ்பீர் சிங் டால், சுந்தர் வெங்கடாச்சலம், ஜஸ்பீர் சிங் மல்கோத்ரா, மன்மோகன் சிங் கபூர், பிங்கி கபூர் உள்ளிட்டோர் ஆவர். கைது செய்யப்பட்டவர்களில் ஒரு பெண்ணும் அடங்குவார்.

10 பேரும் நீதிபதி முன் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டனர்.

# சசிகலா சிறையிலிருந்து வெளியே வந்ததும் அ.தி.மு.கவினர் அவரிடம்தான் செல்வார்கள்

## இப்படி ஆருடம் கூறுகிறார் சுப்ரமணியன் சுவாமி



கட்சியை நல்ல முறையில் நடத்தும் திறமை சசிகலாவுக்கு உள்ளது. அவர் வெளியே வந்தவுடன் அ.தி.மு.கவினர் அவரிடம்தான் செல்வார்கள் என சுப்பிரமணியன் சுவாமி கூறி உள்ளார்.

ரஜினி தனது பட விளம்பரத்திற்காக மட்டுமே அரசியல் பேசுகிறார் என பா.ஜ.க. மூத்த தலைவர் சுப்ரமணியன் சுவாமி விமர்சித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் பாரதீய ஜனதா மூத்த தலைவர் சுப்ரமணியன் சுவாமியிடம் ரஜினியின் அரசியல் வருகை குறித்து நிருபர்கள் கேட்டபோது, "நடிகர்கள் தமிழகத்திற்காக எதுவும் செய்யப்போவதில்லை, சினிமா படங்கள் வெளிவர உள்ளமையால் சிலர் விளம்பரத்திற்காக ஏதாவது பேசலாம். சினிமா வசனங்களை கேட்டு, கேட்டு அலுத்துப் போய்விட்டது" - எனக் கூறினார்.

மராட்டிய அரசியலில் ஏற்பட்டுள்ள திருப்பம் குறித்து கேட்டபோது அதுபற்றி தனக்கு தெரியாது என்றார் அவர். சசிகலா இன்னும் ஒன்று அல்லது ஒன்றரை ஆண்டுக்குள் விடுதலையாகி வருவார். கட்சியை நல்ல முறையில் நடத்த சசிகலாவுக்கு திறமை உள்ளது. அவர் வெளியே வந்தவுடன் அ.தி.மு.கவினர் அவரிடம் தான் செல்வார்கள் என எதிர்பார்க்கிறேன் - என கூறினார்.

# மராட்டிய அரசியலில் நேற்று அதிரடித் திருப்பம் திடீரென பா.ஜ.க. கூட்டணி அரசு பதவியேற்றது

## சிவசேனா - காங்கிரஸ் - தேசியவாத காங்கிரஸ் கூட்டரசு அமைப்பது கடைசி நேரத்தில் முறியடிப்பு

மும்பாய்,நவ.24

சட்டசபைத் தேர்தலை அடுத்து ஆட்சியைப் பங்கு போடுவதில் கூட்டணிக் கட்சிகள் இடையே ஏற்பட்ட பிளவால் ஆட்சி நிறுவப்படாமல் இழுபறிப்பட்ட மராட்டியத்தில் அடுத்தடுத்து அதிரடி அரசியல் திருப்பங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

கொள்கை ரீதியாக முட்டி மோதிக்கொண்டிருந்த சிவசேனாவுடன், காங்கிரஸும் தேசியவாத காங்கிரஸும் உடன்பாடு கண்டு, மாற்று அரசமைப்பதற்கு இதோ தயார் என்ற நிலைமை வந்தபோது, தேசியவாத காங்கிரஸின் தலைவர் சர்த்பவாரின் மருமகன் அஜித் பவார் நேற்றுக் காலை திடீரென பாரதீய ஜனதாக் கட்சி பக்கம் பாய்ந்தார்.

இதையடுத்து மராட்டிய முதலமைச்சராக பாரதீய ஜனதாக் கட்சியின் தேவேந்திர பட்னாவிஸ் மற்றும் துணை முதல் மந்திரியாக அஜித் பவார் திடுதிப்பென நேற்றுக் காலை பதவியேற்றுக் கொண்டனர்.

288 உறுப்பினர்களை கொண்ட மராட்டிய சட்டசபைக்கு கடந்த மாதம் 21 ஆம்திகதி தேர்தல் நடந்தது. 24 ஆம் திகதி வெளியான தேர்தல் முடிவு பெரும் அரசியல் மாற்றத்துக்கு வித்திட்டது.

ஆட்சி அமைக்க 145 இடங்கள் தேவை என்ற நிலையில், பாரதீய ஜனதா, சிவசேனா கூட்டணி 161 இடங்களில் வெற்றி பெற்றிருந்தது.

முதலமைச்சர் பதவியை சுழற்சி முறையில் தலா இரண்டரை ஆண்டுகள் பகிர்ந்து கொள்வது எனத் தேர்தலுக்கு முன்பே பேசி முடிவு செய்யப்பட்டதாக சிவசேனா கூறியதை பாரதீய ஜனதா திட்டவட்டமாக மறுத்தது. இதனால் அக்கட்சிகள் இடையே ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து, ஏற்பட்ட அரசியல் குழப்பங்களால், எந்தக் கட்சியும் ஆட்சி அமைக்க முடியாமல் போனதால் கடந்த 12 ஆம் திகதி மராட்டியத்தில் ஜனாதிபதி ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்த நிலையில் பாரதீய ஜனதாவுடன் சுமார் 30 ஆண்டு கால கூட்டணி உறவை முறித்துகொண்ட சிவசேனா தனது தலைமையில் புதிய அரசு அமைப்பதற்காக காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸுடன் பேச்சு நடத்தியது. இந்துத்வா கொள்கையை கடைப்பிடித்து வரும் சிவசேனா, மதசார்பற்ற கொள்கை கொண்ட காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸுடன் ஆட்சி அமைக்க முற்பட்டமை புதிய அரசியல் திருப்பத்தை ஏற்படுத்தியது.

இந்நிலையில் நேற்று மாலை 3 கட்சி தலைவர்களும் ஆட்சி அமைப்பது குறித்து இறுதி முடிவு எடுக்கத் தென்மும்பையில் உள்ள நேரு அரங்கத்தில் சந்தித்துப் பேசினார்கள். இந்தக் கூட்டத்தில் சிவசேனா சார்பில் உத்தவ் தாக்கரே, சஞ்சய் ராவத், ஏக்நாத் ஷிண்டே, சுபாஷ் தேசாய் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காங்கிரஸைச் சேர்ந்த மூத்த தலைவர்கள் மல்லிகார்ஜுன கார்கே, கே.சி.வேணுகோபால், அவினாஷ் பாண்டே, மாநில காங்கிரஸ் தலைவர் பாலசாகேப் தோரட், முன்னாள் முதலமைச்சர் பிரிதிவிராஜ் சவான் மற்றும் தேசியவாத காங்கிரஸ் சார்பில் சரத்பவார், முன்னாள் மத்திய மந்திரி பிரபுல் படேல், முன்னாள் துணை முதலமைச்சர் அஜித் பவார், மாநில தலைவர் ஜெயந்த் பாட்டீல் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இந்தச் சந்திப்புக்கு பின்னர் தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறுகையில், சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே (முதல் - மந்திரி) தலைமையில் புதிய அரசு அமைக்க மூன்று கட்சிகளிடையே ஒருமித்த கருத்து ஏற்பட்டு உள்ளது. எனவே அரசுக்கு தலைமை வகிப்பது யார்? என்ற பிரச்சினை முடிவுக்கு வந்து விட்டது. இனி மற்ற வியங்கள் குறித்து பேசப்படும் என்றார்.

இந்த நிலையில், மராட்டியத்தில் திடீர் திருப்பம் ஏற்பட்டு உள்ளது. மராட்டிய முதல் மந்திரியாக தேவேந்திர பட்னாவிஸ் மற்றும் துணை முதல் மந்திரியாக அஜித் பவார் நேற்றுக் காலை பதவியேற்று கொண்டனர். அவர்களுக்கு ஆளுநர் பகத்சிங் கோசியாரி பதவிப்பிரமாணம் செய்து வைத்துள்ளார்.

காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் மற்றும் சிவசேனா ஆகிய 3 கட்சிகளும் இணைந்து மராட்டியத்தில் ஆட்சி அமைக்கும் என கூறப்பட்ட நிலையில், தேசியவாத காங்கிரஸ் கட்சியானது பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்து ஆட்சி அமைக்கப்பட்டு உள்ளது.

இதுபற்றி பட்னாவிஸ் செய்தியாளர்களிடம் கூறும் பொழுது, "தொடர்ந்து மராட்டியத்தில் குடியரசு தலைவர் ஆட்சி நீடிப்பது நல்லதல்ல. அதனால் இந்த முடிவை எடுத்துள்ளோம். இது கிச்சடி கூட்டணியில்லை. நீண்ட நாள்களாக பேச்சு நடத்தி அதில் ஒப்புதல் ஏற்பட்டு இந்த முடிவை எடுத்துள்ளோம்" - எனக் கூறினார். இதனை அடுத்து மராட்டியத்தில் கடந்த 10 நாள்களாக நீடித்து வந்த குடியரசுத் தலைவர் ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது.

# சரத் பவாரின் கட்சியும் குடும்பமும் பிளவுபட்டு விட்டன என்கிறார் மகள்

## கணவரின் அதிரடிக் குத்துக்கரணத்தினால் அவர் திரிசங்கு சொர்க்கதின் நிலைமையில்

புனே,நவ.24

கட்சியும், குடும்பமும் பிளவுபட்டு விட்டது என சரத்பவாரின் மகள் சுப்ரியா சுலே கருத்துக் கூறி உள்ளார்.

சிவசேனா மற்றும் காங்கிரஸ் கட்சிகளுடன் சேர்ந்து மாராஷ்டிரத்தில் ஆட்சி அமைப்பதற்கு தேசியவாத காங்கிரஸ் இணங்கி அது பற்றி அறிவிக்க மூன்று கட்சிகளும் தயாரான சமயத்தில், திடீரென தேசியவாத காங்கிரஸ் கட்சித் தலைவர் சர்த் பவாரின் மருமகன் அஜித் பவார் பாரதீய ஜனதாக் கட்சிப் பக்கம் சாய்ந்து காதும் காதும் வைத்தால் போல அவசர அவசரமாக வேறு கூட்டமைப்பு ஆட்சியை ஏற்படுத்திக் கொண்டுவிட்டார்.

இந்தத் திடீர் அரசியல் திருப்பத்தின் போது நேற்றுக் காலை முதலமைச்சராக தேவேந்திர பட்னாவிஸும் மற்றும் துணை முதலமைச்சராக அஜித் பவாரும் பதவி யேற்றுக் கொண்டனர். இது குறித்துக் கேட்ட போதே சுப்ரியா சுலே மேற்கண்டவாறு கூறினார்.



எனினும், தேசியவாத காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரான பிரபுல் பட்டேல், இது எங்கள் கட்சியின் முடிவல்ல. இதற்கு சரத் பவாரின் ஆதரவு இல்லை என்று கூறியுள்ளார்.

இதுபற்றி தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார் மற்றும் சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே நேற்று மதியம் செய்தியாளர்களைச் சந்திக்கவிருந்தனர்.

இந்நிலையில், சரத்பவாரின் மகள் மற்றும் நாடாளுமன்றவாதியான சுப்ரியா சுலே வெளியிட்டுள்ள 'வாட்ஸ்அப்' தகவலில் -

"வாழ்க்கையில் யாரை (நீங்கள்) நம்புவது? இதுபோன்று உணர்ந்ததே இல்லை. என்னுடைய வாழ்க்கையில் மோசம் போய்விட்டேன். அவரைப் பாதுகாத்தேன். அன்பு செலுத்தினேன். அதற்கு திரும்ப என்ன கிடைத்தது?" - எனத் தெரிவித்து உள்ளார். கட்சியும், குடும்பமும் பிளவுபட்டு விட்டது என்றும் அவர் மற்றொரு பதிவில் தெரிவித்து உள்ளார்.

சிவசேனா தலைவர் சஞ்சய் ராவத், "அஜித் பவார் எங்களது முதுகில் குத்தி விட்டார்"- எனக் கூறியுள்ளார்.

"நேற்றிரவு(வெள்ளி இரவு) 9 மணி வரை எங்களுடன் அமர்ந்து ஆலோசனையில் ஈடுபட்டார் அஜித் பவார். திடீரென அவரைக் காணவில்லை. அவரை போனில் தொடர்பு கொள்ளவும் முடியவில்லை"- என நேற்று சனிக்கிழமை காலையில் கூறினார்.

# அமெ. அதிபர் டிராம்ப் தலையிட்டிருக்காவிட்டால் 14 நிமிடங்களில் ஹொங்கொங் அழிந்திருக்குமாம்!



ஹொங்கொங்கில் போராட்டத்தை நசுக்க சீனா தனது படைகளை அனுப்பிய நிலையில், தாம் தலையிட்டிருக்கா விட்டால் 14 நிமிடங்களில் ஹொங்கொங் முழுவதுமாக அழிக்கப்பட்டு இருக்கும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த டிரம்ப், ஹொங்கொங்கில் ஜனநாயகத்திற்காக நடைபெறும் போராட்டத்திற்கு ஆதரவு அளிக்கும் அதே நேரத்தில், சீனாவின் நிலைப்பாட்டையும்ஆதரிப்பதாக தெரிவித்தார்.

அதிபர் ஷி ஜின்பிங் தமது மிகச்சிறந்த நண்பர் என்று கூறிய டிரம்ப், ஹொங்கொங் பிரச்சினைக்கு சீனா தீர்வு காணும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

பல லட்சம் சீன வீரர்கள் ஹொங்கொங்கில் நுழையத் தயாராக இருந்தபோது, அதனைத் தாம் தடுத்து நிறுத்தினார் எனக் கூறிய டிரம்ப், இது மிகப்பெரிய தவறான நடவடிக்கை என்றும் அமெரிக்க - சீன வர்த்தக உறவுகளைப் பாதிக்கும் என்றும் சீனாவைத் தாம் எச்சரித்தார் எனவும் கூறினார்.

# செவ்வாய்க் கிரகத்தில் உயிரினம்? புதிய படங்கள் வழங்கும் நம்பிக்கை

வொஷிங்டன்,நவ.24

'கியூரியாசிட்டி ரோவர்' அனுப்பிய படங்களை ஆய்வு செய்ததில் அவை செவ்வாய்க் கிரகத்தில் உயிர்கள் வாழும் சான்றுகளைக் காட்டுகின்றன என விஞ்ஞானி எமரிட்டஸ் வில்லியம் ரோமோசர் கூறி உள்ளார்.

பூமியில் இருந்து சுமார் 22 கோடி கிலோ மீற்றர் தொலைவில் உள்ள செவ்வாய் கிரகத்தைப் பற்றிய ஆராய்ச்சியில் அமெரிக்கா, ரஷ்யா, இந்தியா, சீனா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன.

செவ்வாய் கிரகத்தில் இறங்க. கடந்த 8 வருடங்களாக, மாதிரிகளில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்ட கியூரியாசிட்டி ரோவர், செவ்வாய் கிரகம் தொடர்பான பல அறிவியல் உண்மைகளைக் கண்டறிந்து பூமிக்கு அனுப்பி உள்ளது.

செவ்வாய் கிரகத்தை சுற்றும் ரோவர் மூலம் பூச்சிகள் வாழ்வதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன என அமெரிக்காவின் ஒஹாயோ பல்கலைக்கழகத்தைச் சார்ந்த பூச்சியியல் ஆய்வாளர்கள் சமீபத்தில் தெரிவித்துள்ளனர்.

செவ்வாய் கிரகங்களின் புகைப்படங்களை ஆராய்ந்த பேராசிரியர் எமரிட்டஸ் வில்லியம் ரோமோசரின் ஆராய்ச்சியில் பூச்சிகள் போன்ற வடிவங்கள் செவ்வாயில் இருந்ததமைக்கு ஏராளமான எடுத்துக்காட்டுகள் கிடைத்தன. அவை தேனீக்களைப் போலவே கட்டமைக்கப்பட்டன, அதே போல் ஊர்வன போன்ற வடிவங்களும் புதைபடிவங்கள் மற்றும் உயிரினங்கள் இருந்தன.

பல புகைப்படங்களில் ஆர்த்ரோபாட் உடல் பகுதிகள், கால்கள், ஆண்டெனாக்கள் மற்றும் இறக்கைகள் ஆகியவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து எடுக்கப்பட்ட தோற்றங்கள் காணப்படுகின்றன.

வெளிச்சம், மாறுபாடு, செறிவு, தலைகீழ்போன்றபுகைப்படஅளவுருக்கள் மாறுபடும் போது அந்த புகைப்படங்கள் கவனமாக ஆய்வு செய்யப்பட்டன. உள்ளடக்கம்எதுவும்சேர்க்கப்படவில்லை, அல்லது அகற்றப்படவில்லை.



இதுகுறித்து வில்லியம் ரோமோசர் கூறியவை வருமாறு: -

செவ்வாய்க்கிரகத்தில்உயிர்உள்ளது. அங்குள்ள படங்கள் புதைபடிவ மற்றும் உயிருள்ள உயிரினங்களைக் காட்டுகின்றன. செவ்வாய் பூச்சி போன்ற விலங்கினங்களிடையே வெளிப்படையான பன்முகத்தன்மை உள்ளது, அவை டெர்ரான் பூச்சிகளைப் போன்ற பல அம்சங்களை மேம்பட்ட குழுக்களாக இருக்கின்றன.

செவ்வாய் கியூரியாசிட்டி ரோவர், கரிம செயல்பாட்டின் குறிகாட்டிகளைத் தேடிக்கொண்டிருக்கும்போது, பூச்சிகள் மற்றும் ஊர்வன போன்ற வடிவங்களை தெளிவாக சித்தரிக்கும் பல புகைப் படங்கள் உள்ளன.

பூமியில் 'பூச்சி' என்று அடையாளம் காண மூன்று உடல் பகுதிகள், ஒரு ஜோடி ஆண்டெனாக்கள் மற்றும் ஆறு கால்கள் பாரம்பரியமாக போதுமானவை. செவ்வாய் கிரகத்தில் ஒரு உயிரினத்தை பூச்சி போன்றதாக அடையாளம் காண இந்த பண்புகள் செல்லுபடியாகும். இந்த தளங்களில், ஆர்த்ரோபோடன், பூச்சி போன்ற வடிவங்களை செவ்வாய் ரோவர் புகைப்படங்களில் காணலாம்.

இங்கு வழங்கப்பட்ட செவ்வாய் கிரகத்தின் வாழ்வின் சான்றுகள் பல கூடுதல் முக்கியமான உயிரியல் மற்றும் சமூக மற்றும் அரசியல் கேள்விகளுக்கு வலுவான அடிப்படையை வழங்குகிறது. - எனக் கூறி உள்ளார்.

ஆனால் இதனை மற்ற ஆராய்ச்சியாளர்கள் மறுத்து உள்ளனர். செவ்வாய்க் காட்சி பிழை உருவங்களாக காட்டப்படுகின்றன என அவர்கள் கூறி உள்ளனர்.

# கொலம்பியாவில் தீவிரமடைகிறது அரசுக்கு எதிரான போராட்டங்கள்

தென்அமெரிக்கநாடானகொலம்பியாவில் அரசுக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமாக வலுப்பெற்று வருகின்றன.

வேலைவாய்ப்பின்மை, பொருளாதார சீர்திருத்தங்கள், பாதுகாப்பற்ற சூழ்நிலை போன்றவற்றுக்கு எதிராக கிளர்ச்சிகள் அதிகரித்த வண்ணம் உள்ள நிலையில், பொகோடா வீதிகளில் அரசுக்கு எதிரான பேரணிகள் நடைபெற்றன. தேசிய கீதத்தைப் பாடியபடி பல்லாயிரக்கணக்கானோர் திரண்ட பேரணியில் பெரும் வன்முறை மூண்டது.



கடைகள், வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. பொலிஸார் தடியடி நடத்தியும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியும் கும்பலாய் வந்தவர்களைக் கலைக்க முயற்சித்தமையால் அப்பகுதி கலவர பூமியாகக் காட்சியளித்தது.

வெளிநாட்டவருக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்படக்கூடாது என்பதற்காக எல்லைகளை அடைக்கும் போராட்டம் நடத்தப்படுகிறது. இதே கோரிக்கையை வலியுறுத்தி, ஈக்வடார், சிலி, வெனிசுலா, பொலிவியா ஆகிய நாடுகளிலும் பெரும் போராட்டங்கள் வெடித்துள்ளன.

# சமைக்காத இறைச்சியைச் சாப்பிட்டவரின் மூளை, நுரையீரல், மார்பு வரை நாடாப்புழு

## கிழக்கு சீனாவில் பரிதாபம்



ஹாங்க்சோ,நவ. 24

சமைக்காத இறைச்சியை உட்கொண்டவருக்கு மூளை, நுரையீரல், மார்பு வரை 700 நாடாப் புழுக்கள் பரவின.

கிழக்கு சீனாவின் ஹாங்க்சோ பகுதியை சேர்ந்தவர் 43 வயதான ஸு ஸோங் என்பவர். ஒரு மாதமாக தலைவலி, வலிப்பு என அவதிப்பட்டு வந்துள்ளார். அதுவரை மருத்துவமனை செல்லாமல் வலியின் தீவிரம் அதிகரித்தபின் மருத்துவரை நாடிய அவர், தலைவலி தானேமாத்திரைகொடுத்து அனுப்பி விடுவார்கள் என்றுநம்பினார். ஆனால் சிகிச்சைக்குச் சென்றவருக்கு மிகப்பெரிய அதிர்ச்சி காத்திருந்தது.

ஆரம்பகட்டப் பரிசோதனைகள் முடிந்த பின்னர், பின் ஜியாங் ரோங் என்ற தொற்று நோய் மருத்துவரிடம் ஸோங் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். அப்போதுதான் அவருக்கு நாடாப் புழுக்களால் அஜீரண கோளாறு ஏற்பட்டுள்ளது என்று கண்டுபிடிக் கப்பட்டுள்ளது.

பின் தீவிர சிகிச்சை அளித்து உடலின் ஒவ்வொரு பகுதியாக ஸ்கேன் செய்யப்பட்டுள்ளது. அப்போதுதான் அவருடைய மூளை, மார்புப் பகுதி, நுரையீரல் என 700க்கும் மேற்பட்ட நாடாப் புழுக்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இப்படி ஒவ்வொரு உறுப்புகளாக நாடாப் புழுக்கள் ஆக்கிரமித்திருப்பது நோயாளிக்கு பேரதிர்ச்சியாக இருந்துள்ளது.

சமைக்காத இறைச்சிகளில் நாடாப்புழுக்களின் முட்டைகள் வாழும். அதை நீங்கள் அப்படியே சாப்பிடும் போது, சமைக்காத இறைச்சி மூலம் புழுக்கள் உடலில் ஊடுருவிப் பரவித் தொற்றுகளைப் பரப்பும் என்று மருத்துவர் கூறியுள்ளார். (உ)

# சீனாவுடனான வர்த்தக வழித்தடம்; பாகிஸ்தானுக்கு அமெ. எச்சரிக்கை

வொஷிங்டன்,நவ.24

சீனாவுடனான வர்த்தக வழித்தடம் பாகிஸ்தானுக்கு நீண்ட காலப் பொருளாதார வீழ்ச்சியை ஏற்படுத்தும் என்று அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

பலுசிஸ்தானின் குவாடர் துறைமுகம் வரை சீனா - பாகிஸ்தான் பொருளாதார வழித்தட திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதற்கு அமெரிக்கா ஆரம்பம் முதலே எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

இந்நிலையில், வொஷிங்டனில் நிகழ்ச்சி ஒன்றில் அந்நாட்டின் தெற்காசிய விவகாரத்துறை துணை செயலாளர் அலைஸ் வெல்ஸ் பேசியபோது, பொருளாதார வழித்தடத்தால் சீனாவுக்கு தான் அதிக லாபம் என்றார். மேலும் இந்தத் திட்டத்தால் பாகிஸ்தான் பொருளாதாரம் நீண்ட காலப் பாதிப்பை சந்திக்கும் என்று கூறிய அவர், கோடிக்கணக்கான டொலர்கள் முதலீடு செய்து வழித்தடத்தை பாகிஸ்தானில் சீனா அமைத்தாலும் கட்டுமானப் பணிகளுக்கு தனது சொந்த நிறுவனங்களையும், தொழிலாளர்களையும் மட்டுமே அனுப்பி வைப்பதை பாகிஸ்தான் புரிந்து கொள்ள வேண்டும் என்றும், பாகிஸ்தானில் வேலைவாய்ப்பின்மை அதிகரித்து வரும்போது, அந்த நாட்டுப் பணியாளர்களை வேலைக்கு அமர்த்தாமல் சீனா தங்கள் தொழிலாளர்களுக்கே அந்த வாய்ப்புகள் அளிப்பதாகவும் அவர் கூறினார்.

# யாழ்ப்பாணத்தில் டெங்கு பரவல் தீவிரம் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளோ மந்தம்!

## டெங்கு தீவிர நிலை அறிவிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 24

யாழ். மாவட்டத்தில் உயிர்கொல்லி டெங்குநோயின்தாக்கம்தீவிரம்பெற்றுள்ள நிலையில், அதைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதாரத்துறை மற்றும் அரச உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு போதுமானதாக இல்லை எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் டெங்கு நோய் மரணங்கள் அதிகரித்துள்ள நிலையில், டெங்கு தீவிர நிலை அறிவிக்கப்பட்டுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் துரிதப்படுத்த வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை, தெல்லிப்பழை, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலைகள் மற்றும் பிரதேச வைத்தியசாலைகளில் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நோயாளர்கள் நிரம்பி வழிகின்றனர். விடுதிகளில் இடம் இல்லாமையில் விடுதிக்கு வெளியே, நுழைவாயில்களில் பாய்களை விரித்து நோயாளர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

டெங்கு நோய் காரணமாக இதுவரை இரு மரணங்களே இடம்பெற்றுள்ளன எனக் கூறப்படுகின்றபோதிலும் நிமோனியா போன்று காய்ச்சலுடன் தொடர்புடைய நோய்களால் பலர் உயிரிழந்திருக்கின்றனர். 9 வயதுப் பிள்ளை ஒன்றும் இளம் தாய் ஒருவரும் டெங்கு நோயினால் உயிரிழந்துள்ளனர். இந்த மரணங்களின் எண்ணிக்கை அடுத்துவரும் நாள்களில் மேலும் உயரலாம் எனக் கவலை வெளியிடப்பட்டுள்ளது.

நிலைமை இவ்வாறிருக்கையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் விடுதிகளுக்கு வைத்தியர்களைப் பங்கீடு செய்வதற்கு வைத்தியசாலைப் பணிப்பாளர் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வழமைபோன்று வைத்தியசாலை விடுதிகளில் தங்கிநின்று பணியாற்றும் மருத்துவர்களே பெரும் கஷ்டத்தின் மத்தியில் நோயாளர்களைக் கவனித்து வருகின்றனர். ஏனையோர், சில மணிநேரம் கடமையாற்றிவிட்டுச் செல்கின்றனர் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனினும், யாழ்.மாவட்டத்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரிகள் இவ்விடயத்தில் காத்திரமான பங்களிப்பை வழங்கிவருகின்றனர். நாளாந்தம் அவர்கள் பிரதேச மட்டங்களிலும் யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும் தீவிர டெங்கு கட்டுப்பாட்டு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோய் அதிகரித்துள்ள நிலையில், இதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்க முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து சுகாதாரப் பிரிவினர் வருகைதந்திருக்கின்றனர்.

ஆனால், யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும் வீடுகளிலும் டெங்கு நுளம்பு பெருகுவதைக் கட்டுப்படுத்துவதற்கான பொறிமுறை பின்பற்றப்படவில்லை. இதேபோன்று ஏனைய இடங்களிலும் நகர சபைகள், பிரதேச சபைகள் மற்றும் பொதுமக்களின் ஒத்துழைப்புகள் போதுமானவையாக இல்லை எனவும் டெங்கு கட்டுப்பாட்டில் ஈடுபட்டுள்ளவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

மேலும், பிரதேச செயலகங்கள் உள்ளிட்ட அரசதிணைக்களங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, யாழ். மாவட்டத்தில் டெங்கு நோய் தீவிரத்தன்மை அறிவிக்கப்பட்டு, மாநகர சபை, நகர, பிரதேச சபைகள், அரச உத்தியோகத்தர்கள் அனைவரும் விசேடமாக டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைக்கு களமிறக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அரசியலை விட்டு ஒதுங்கும் ரணில்?



கொழும்பு, நவ. 24

முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க அரசியலில் இருந்து ஓய்வு பெறத் தீர்மானித்துள்ளார் எனத் தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து ரணில் தனது நெருக்கமானவர்களிடம் கூறியுள்ளார். முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த 1977ஆம் ஆண்டு முதன் முதலாக அரசியலில் பிரவேசித்திருந்தார். அந்த வகையில் தனது 42 வருட அரசியலுக்கு எதிர்வரும் டிசெம்பரில் விடைகொடுக்க அவர் தயாராகிவிட்டார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

# தமிழ் அரசியல் கைதிகளையும் அரசு உடன் விடுவிக்கவேண்டும்

## தாய்நாட்டுக்கான இராணுவத்தினர் அமைப்பு கோரிக்கை



கொழும்பு, நவ. 24

பல்வேறு குற்றச்சாட்டுக்களில் கைதாகிச் சிறை வைக்கப்பட்டுள்ள இராணுவம், புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கினால் சிறைகளில் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளுக்கும் பொதுமன்னிப்பை வழங்குமாறு தாய்நாட்டுக்கான இராணுவத்தினர் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

கருணா அம்மான், குமரன் பத்மநாதன் உள்ளிட்டவர்கள் இன்று வெளியே சுதந்திரமாக இருக்கின்ற நிலையில், ஏன் விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களையும் வெளியே அனுமதிக்க முடியாது என்று அந்த அமைப்பின் இணைப்பாளரான மேஜர் அஜித் பிரசன்ன கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் தாய்நாட்டுக்கான இராணுவத்தினர் அமைப்பு ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தியிருந்தது. இதில் கலந்துகொண்டு பேசிய அந்த அமைப்பின் இணைப்பாளரான மேஜர் அஜித் பிரசன்ன –

சுனில் ரத்நாயக்க, புலனாய்வுத் துறையின் மேஜர் டிக்ஷன் மற்றும் கோப்ரல் பிரியந்த ராஜகருணா ஆகியோருக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு அளிக்கப்போகிறார் செய்திகள் வெளியாகியிருந்தன.

அநுராதபுரத்தில் ஜனாதிபதி தனது முதலாவது பிரசாரக் கூட்டத்தின்போது இவர்களுக்குப் பொதுமன்னிப்பு அளிப்பதாக உறுதியளித்திருந்தார். இன்னும் அது நடக்கவில்லை. ஆனால் சமூகவலைத்தளங்களில் அந்த நபர்கள் விடுதலை செய்யப்படவுள்ளனர் எனத் தகவல்கள் பரவிவருகின்றன. இது சிறந்த விடயம். ஆனாலும் 30 வருடப் போர் செய்து எமது பக்கமும் அவர்களுடைய பக்கமும் ஆயிரக் கணக்கானவர்கள் உயிரிழந்தார்கள்.

வடக்கிலும் விதவைகள் உள்ளனர். தெற்கிலும் அதே நிலைமை உள்ளது. அவர்கள் துரோகி என நாங்களும், நாங்கள் துரோகி என அவர்களும் கூறுகின்றோம். எனினும் விதவைகளும், பிள்ளைகளுமே இறுதியில் துன்பப்படுகின்றனர்.

போர்ச் சட்டத்தின்படி உலகில் இரு தரப்பினரும் கைதிகளைப் பரிமாறிக் கொண்டமை நடந்திருக்கிறது. ஈழப் போர், மனிதாபிமான நடவடிக்கை என்று கூறிப் போர் செய்திருந்தாலும் இறுதியில் இருதரப்பினரும் உயிரிழந்தார்கள். காயமடைந்தார்கள். இருதரப்பினரிலும் மரண தண்டனை பெற்றவர்கள், தண்டனை பெற்றவர்கள் சிறைகளில் உள்ளனர். அவர்களில் சுனில் ரத்நாயக்க உள்ளிட்டவர்களும் இருக்கின்றார்கள்.

ஆகவே சுனில் ரத்நாயக்க, டிக்ஷன் ராஜமந்திரி மற்றும் பிரியந்த ராஜகருணா உள்ளிட்டவர்களுக்கு பொதுமன்னிப்பு அளித்தால், தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர்களுக்கும் விடுதலையைக் கொடுங்கள் என்று ஜனாதிபதியிடம் கோருகின்றேன்.

கருணா அம்மான், கே.பி உள்ளிட்டவர்கள் வெளியே சுதந்திரமாகப் பிரச்சினையின்றி இருப்பார்கள் என்றால் இவர்களுக்கும் மன்னிப்பு கொடுக்க முடியும் – என்றார். (ஐ)




# இலங்கையின் புதிய ஆட்சியாளர்களிடம் இருந்து கருணை எதனையும் தமிழர் எதிர்பார்க்க முடியாது

## நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் உருத்திரகுமாரன் தெரிவிப்பு



கொழும்பு,நவ.24

இலங்கையின் புதிய ஆட்சியாளர்களிடம் இருந்து கருணை எதனையும் தமிழ் மக்கள் எதிர்பார்க்க முடியாது. இலங்கையின் புதிய அரசதலைவரும், அவரின் கீழ் அமைந்துள்ள மஹிந்த ஆட்சியும் தமிழர் தாயகத்தைக் கபளீகரம் செய்யும் வேலைகளையே வேகப்படுத்துவார்கள். இலங்கை என்பது ஒரே மக்களைக் கொண்ட நாடு என்ற கொள்கையின் கீழ் சிங்கள மேலாண்மைக்குள் தமிழ்,முஸ்லீம் மக்களைச் சிறைப்பிடிக்க முனைவார்கள்.

தமிழ் தாயகத்தை சிங்களக் குடியேற்றங்களால் நிறைப்பார்கள். அனைத்துலக அரசுகளுடன் நலன் சாரந்த உறவுகளைப் பேணி அவர்களைத் திருப்திப்படுத்திக் கொண்டு தமது திட்டங்களை முன்னெடுப்பார்கள். இத்தகையதொரு சூழலில் தமிழர் தேசத்தை பாதுகாப்பதற்காகத் தமிழ்த் தேசியப் பேரியக்கம் ஒன்றைக் கட்டியெழுப்ப நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அறைகூவல் ஒன்றை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்த அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

இலங்கை அதிபர் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ சிங்கள மக்களின் வாக்குகளால் பெருவெற்றியடைந்திருப்பது சிங்கள,பௌத்த தேசியவாதம் சிங்களதேசத்தில் ஆழமாக வேருன்றியிருப்பதனை நன்கு வெளிப்படுத்துகிறது. சிங்கள மக்களது வாக்குகளால் மட்டும் என்னால் வெற்றிகொள்ளமுடியும், தமிழ், முஸ்லீம் மக்களது வாக்குகள் எனக்குத் தேவையுமில்லை எனத் திடமாகக் கூறி அதன் வாறே கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்றிருப்பதும்கூட இலங்கையை முன்னிருந்ததை விடத் தீவிரமான இனவாதத்தின் ஒரு தோற்றமாகவே வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கை அரசு சிங்கள, பௌத்த இனவாத நிறுவனமாக இவ்வாறு இறுகிப்போயிருக்கும் நிலையில், புதிய அரச அதிபரின் செயற்பாடுகள் இலங்கை அரசை மேலும் சிங்கள பௌத்தமயப்படுத்தும் வகையில்தான் அமையும்.

எல்லாளனைத் தோற்கடித்த பின்னர் துட்டகைமுனுவால் கட்டப்பட்டதாகக் கூறப்படும் ருவான் வெலிசாய விகாரை வளாகத்தில் பதவிப்பிரமாணம் செய்தமையின் ஊடாக கோட்டாபய தன்னைத் தமிழர்களை வெற்றி கொண்ட நவீன துட்டகைமுனுவாக சிங்கள மக்கள் மனதில் பதிய வைக்க முயல்கிறார் என்றுதான் நாம் பார்க்கிறோம்.

ஓர் இனவழிப்புக் குற்றவாளியை அந்த இன வழிப்புக்குத் துணைபோன மக்கள் கூட்டம் ஆதரித்து நிற்பதனால் மட்டும் அவர் புனிதராகி விட முடியாது. உலகத் தமிழ் மக்களின் ஆன்மபலத்துடன், உலகில் நீதிக்காகப் போராடும் தோழமைகளுடன் இணைந்து, தமிழின அழிப்புக் குற்றவாளி கோட்டாபய ராஜபக்ஷவை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்திலும் (ஐசிசி), இலங்கை நாட்டை ஐக்கிய நாடுகள் மன்றத்தின் உலக நீதிமன்றிலும் (International Court of Justice) நிறுத்தும் போராட்டத்தை நாம் வீச்சாக முன்னெடுப்போம்.

சர்வதேச குற்றிவியல் நீதிமன்றத்துக்கு முன்னால், அரசு அதிபருக்கான விலக்கு( head of state immunity) என்ற திரைக்கு பின்னால் கோட்டாபயவும், சிறிலங்கா நாடு என்ற வகையில் உலக நீதிமன்றத்தின் முன்னால் இறைமைக்கான விலக்கு (sovereign immunity) என்ற திரைக்கு பின்னாலும் ஒளித்து கொள்ள முடியாது எனச் சுட்டிக்காட்டுகின்றோம்.

எமது இந்தப் பிரகடனம் எமது தார்மீகக் கோபத்தில் இருந்து மட்டுமல்ல, ஒரு இனஅழிப்புக் குற்றவாளி அரச தலைவராக இருக்கும் நிலையினை உலக மனச்சாட்சிக்குச் சுட்டிக்காட்டும் நோக்கத்தினையும் தன்னகத்தே கொண்டது. இவ்வேளையில் நடைமுறை யதார்த்தத்துக்கு இசைவாக நடந்து கொள்ள வேண்டும் என்றும் சிலர் எண்ணலாம்.

இவ்விடத்தில் நாம் ஒரு விடயத்தைத் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறோம். தமிழ் மக்கள் தமது தேசத்தைப் பாதுகாக்க வேண்டுமானால் தமிழ்த் தேசியப் பேரியக்கமொன்றைக் கட்டியெழுப்பி அர்ப்பணிப்பு மிக்க ஜனநாயகவழிப் போராட்டங்களுக்குத் தம்மைத் தயார் படுத்திக் கொள்ள வேண்டிய காலம் வந்து விட்டது. புதிய ஆட்சியாளர்களிடம் இருந்து கருணை எதனையும் தமிழ் மக்கள் எதிர்பார்க்க முடியாது. சிறிலங்காவின் புதிய அரசதலைவரும், தொடர்ந்து அமைந்துள்ள மஹிந்த ஆட்சியும் தமிழர் தாயகத்தைக் கபளீகரம் செய்யும் வேலைகளை வேகப்படுத்துவார்கள். இலங்கை என்பது ஒரே மக்களைக் கொண்ட நாடு என்ற கொள்கையின் கீழ் சிங்கள மேலாண்மைக்குள் தமிழ் முஸ்லீம் மக்களைச் சிறைப்பிடிக்க முனைவார்கள். தமிழ் தாயகத்தை சிங்களக் குடியேற்றங்களால் நிறைப்பார்கள். அனைத்துலக அரசுகளுடன் நலன் சாரந்த உறவுகளைப் பேணி அவர்களைத் திருப்திப்படுத்திக் கொண்டு தமது திட்டங்களை முன்னெடுப்பார்கள்.

இத்தகையதொரு சூழலில் தமிழ் மக்களுக்கு இரு தெரிவுகள் மட்டுமே இருக்கும்.

ஒன்று - யதார்த்தம் என்று கூறி புதிய ஆட்சியாளர்களுடன் நல்லுறவைப் பேண முயன்று சிங்கள மேலாண்மைக்குள் அமிழ்ந்து போவது.

அடுத்தது - நமது சக்தி அனைத்தையும் திரட்டி, நம்மைத் தேசமாக ஒருங்கிணைத்து நமது இருப்புக்கும் உரிமைக்காகவும் போராடுவது.

முதலாவது தெரிவு மிகவும் அவமானகரமானது. இது இனஅழிப்புக்கு வழிகோலும். இதனை நாம் தெரிவு செய்ய முடியாது. தமிழ் மக்கள் இரண்டாவது தெரிவினை மேற்கொண்டேயாக வேண்டும். இதனைத் தமிழ் மக்களின் தேசிய அரசியற் தலைவர்களாகத் தம்மை அடையாளப்படுத்துவோர் தாமே முன்னின்று எடுத்துச்செல்ல வேண்டும். அரபு வசந்தம், பிரான்சின் மஞ்சள் அங்கிப் போராட்டம் மற்றும் தற்போது நடைபெறுகின்ற ஹொங்கொங் மக்கள் போராட்டம், பொலிவியா மக்கள் போராட்டம், ஈரான் மக்கள் போராட்டம் ஆகியன மக்கள் போராட்டங்களின் வலிமையினை எடுத்தியம்புகின்றன.

எமது பார்வையில் தமிழ் மக்கள் போராடினால் தான் வாழ்வு என்ற கட்டத்தை அடைந்துள்ளார்கள் என்றே கருதுகிறோம். இது சவால் நிறைந்த காலகட்டமாகவே இருக்கும். இதனைத் தமிழ் மக்கள் எதிர்கொள்வது நெருப்பாற்றை நீந்திக் கடப்பது போன்றதாகவே அமையும். இருந்த போதும் இது தான் யதார்த்தமாக அமையப் போகிறது. இந்த யதார்த்தத்தை எதிர்கொள்ளத் தாயகத் தமிழ் மக்கள், புலம்பெயர் தமிழ் மக்கள், தமிழ்நாடு மக்கள், உலகத் தமிழ் மக்கள் என அனைவரும் இணைந்து செயற்பட வேண்டியது அவசியமாக இருக்கும்.

இலங்கையின் தமிழின அழிப்பாளிகளை அனைத்துலக அரங்கில் நீதியின் முன் நிறுத்தும் தமிழ் மக்களின் போராட்டத்துக்கு கோட்டாபய ராஜபக்ஷ அரசதலைவராகத் தேர்வு செய்யப்பட்டமை தார்மீகத் தளத்தில் பலம் சேர்க்கும். நீதியின் பக்கம் நிற்கும் உலக மக்களின் ஆதரவை எமக்குப் பெற்றுத் தரும். தொடர்ச்சியான மக்கள் போராட்டத்தை நடத்தும் வகையில் தமிழ் தேசம் மாவீரர்கள் நினைவுடன் தன்னை உயிர்ப்பித்துக் கொள்ள வேண்டும். - என பிரதமர் வி.உருத்திரகுமாரன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# மாணவியைக் கடத்திச் சென்றவர்களை கைது செய்வதில் பொலிஸார் அசமந்தம்!

கிளிநொச்சி, நவ. 24

கிளிநொச்சியில் மாணவியைக் கடத்தியவர்களைக் கைது செய்வதில் பொலிஸார் அசமந்தம் காட்டுகின்றனர் எனப் பாதிக்கப்பட்ட மாணவியின் பெற்றோர் மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளனர்.

கடந்த மாதம் 18 ஆம் திகதி பாடசாலை மேலதிக வகுப்புக்காக சென்று கொண்டிருந்த மாணவி, காரில் வந்த சிலரால் கடத்தப்பட்டார். சுமார் 3 மணி நேரத்தின் பின்னர் அவர் விடுவிக்கப்பட்டிருந்தார். இது குறித்து கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதன்போது கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட கார் இலக்கம், கடத்திய நபர் ஒருவரின் புகைப்படம், தொலைபேசி இலக்கம் என்பன பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. எனினும் போதுமான ஆதாரங்கள், தடயங்கள் இருந்தும் கடத்தலுடன் சம்பந்தப்பட்ட எவரும் சம்பவம் நடந்து ஒரு மாதமாகியும் கைது செய்யப்படவில்லை.

இது குறித்து தாம் பொலிஸாரிடம் வினவியபோதும் அவர்கள் அலட்சியமாக பதில் தருகின்றனர் எனவும் பாதிக்கப்பட்ட மாணவியின் பெற்றோர் தெரிவித்தனர்.

இந்நிலையில், உரிய நடவடிக்கை எடுக்கத்தவறிய பொலிஸாருக்கு எதிராக யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் பாதிக்கப்பட்ட மாணவியின் பெற்றோர் முறையிட்டுள்ளனர். (ஐ)

# ஷானி அபேசேகரவின் இடமாற்றம் அரசியல் உள்நோக்கம் கொண்டது!

## சுமந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, நவ. 24

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளராக இருந்த ஷானி அபேசேகரவின் இடமாற்றம் அரசியல் உள்நோக்கம் கொண்டது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டர் பக்கத்தில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

கடந்த ஆட்சிக்காலத்தில் ஊடகவியலாளர்களான லசந்த விக்கிரமதுங்க, பிரகீத் எக்னலிகொட, கீத் நோயர் உட்பட ஊடகவியலாளர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டமை, கடத்தப்பட்டமை, காணாமல் போகச்செய்யப்பட்டமை போன்ற வழக்கு விசாரணைகளை துரிதமாக அணுகி வந்தவர் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக இருந்த ஷானி அபேசேகர. ஆட்சி மாற்றம் ஏற்பட்டதை அடுத்து, ஷானி அபேசேகர இடமாற்றம் செய்யப்பட்டார்.

இது குறித்து எம்.ஏ.சுமந்திரன் தனது டுவிட்டர் பக்கத்தில் கூறியுள்ளவை வருமாறு: - மனித உரிமை மீறல்கள் தொடர்பான பல விசாரணைகள் ரனி அபேசேகரவினால் முன்னெடுக்கப்பட்டு வந்தது. குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திலிருந்து, அதன் பணிப்பாளரான ஷானி அபேசேகர இடமாற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில், பிரதான எதிர்த்தரப்பான ஐக்கிய தேசியக் கட்சி எங்கு சென்றுள்ளது எனக் கூறியுள்ளார். (ஐ)




# கொலைஞர்,கொள்ளையர்கள் மீள இணைந்து ஜனநாயகப் போர்வையில் ஆட்சி அரியாசனம்!

தமக்கு வாக்களித்த சிங்கள, பௌத்த மக்களுக்கு பகிரங்கமாக கோட்டாபய நன்றி கூறியமை போன்று அதிகூடிய வாக்குகளை தமக்கு அள்ளிக்கொட்டிய தமிழ் முஸ்லிம் மக்களுக்கு சஜித் பிரேமதாஸ நன்றி கூறாது மௌனம் காப்பதன் மர்மம் என்ன? கோட்டாபயவை தோற்கடிக்க வேண்டுமென்றே இவர்கள் தமக்கு வாக்களித்தபடியால் எதற்காக இவர்களுக்கு நன்றிகூற வேண்டுமென நினைக்கிறாரா இந்த நன்றிகெட்ட அரசியல்வாதி?

இலங்கையின் ஏழாவது ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தல் கடந்த 16ஆம் திகதி நடைபெற்று, ராஜபக்ஷ குடும்ப ஆட்சியை ஐந்தாண்டுகளின் பின்னர் மீண்டும் அரியாசனத்தில் ஏறியுள்ளது.

எது நடக்கக்கூடாதென்று சிறுபான்மையின மக்கள் –, முக்கியமாக வடக்கு, கிழக்கு மக்கள் – விரும்பினார்களோ அதுவே நடந்தேறிவிட்டது.

தேர்தல் முடிவடைந்து ஒரு வாரம் முடிவதற்குள் எதிர்பார்த்த அத்தனையும் அடுத்தடுத்து இடம் பெறுகின்றன.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவி வகித்த பத்தாண்டுகாலமும் பாதுகாப்புச் செயலாளராக விருந்த கோட்டாபய ராஜபக்ஷவின் யுத்த பிராந்திய எடுபிடிகளாகச் செயற்பட்ட இராணுவ அதிகாரிகள் வெளிக்கிளம்ப ஆரம்பித்துள்ளனர்.

ஜெனீவாவில் இனப்படுகொலையாளியென அடையாளம் காட்டப்பட்ட மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா புதிய இராணுவத் தளபதியாக கோட்டாபயவுக்கு அனுசரணையாக மைத்திரிபால சிறிசேனவால் முற்கூட்டியே நியமிக்கப்பட்டு அப்பதவியில் தொடர்கிறார்.

வன்னி யுத்தத்தின்போது 53வது இராணுவப் பிரிவின் தளபதியாகவும் வன்னிப் படைத்தலைமையக பிரதம தளபதியாகவும் இருந்த மேஜர் ஜெனரல் கமல் குணரட்ணவை புதிய பாதுகாப்புச் செயலாளராக ஜனாதிபதி கோட்டாபய நியமித்துள்ளார். தமது ஜனாதிபதி பதவியோடு முப்படைகளின் தளபதி என்ற பதவி யையும் தமக்குத்தாமே கோட்டாபய நியமனம் செய்திருப்பதையும் இங்கு கவனிக்க வேண்டும்.

என்னைத் தெரிவு செய்தவர்கள் சிங்கள, பௌத்தர்களே என்று இறுமாப்புடன் தெரிவித்த கோட்டாபய தமது பதவியேற்புக்கான இடமாக அனுராதபுரத்தின் பிரதான பௌத்த விகாரையைத் தெரிந்தெடுத்தமையும் தம்மை எல்லாளனைக் கொலை செய்த துட்டகெமுனுவாக அடையாளப் படுத்தியமையும் அவரது வளர்கால நிகழ்ச்சி நிரலின் குறியீடாகவே பார்க்க வேண்டும்.

தேர்தல் முடிவுகளை தேர்தல் ஆணையாளர் அறிவிக்கும் நிகழ்வில் முன்வரிசையில் கோட்டாபயவுடன் பௌத்த பிக்குகளுக்கே இடமளிக்கப் பட்டது. அதேபோன்று அவரது பதவியேற்பு வைபவத்திலும் பிக்குகள் பட்டாளம் ஒன்று அமர்த்தப்பட்டிருந்தது.

இதுவரை காலமும் நடைபெற்ற இவ்வாறான அரச வைபவங்களில் ஆகக்குறைந்தது சர்வதேச சமூகத்தின் பார்வைக்காகவாவது இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ மதப்பிரமுகர்கள் அழைக்கப்பட்டு உரிய ஆசனத்தில் அமர வைப்பது வழக்கமாகவிருந்தது.

ஆனால் கோட்டாபயவின் அதிகாரபூர்வ வைபவங்களில் இது கடைப்பிடிக்கப்படவில்லை. ஆரம்பத்திலேயே இது சிங்கள பௌத்த தேசத்துக்கான நிகழ்வுகள் என்பதை அவர் அடையாளம் காட்டியுள்ளார்.

எனக்கு வாக்களிக்குமாறு தமிழர்களையும் முஸ்லிம்களையும் வேண்டினேன். ஆனால் அவர்கள் எனது கோரிக்கையை நிராகரித்துவிட்டனர். சிங்கள மக்களின் வாக்குகளே என்னை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தன. ஆயினும் எனக்கு வாக்களிக்காத வர்களையும் இலங்கையர்களாக மதித்து நான் பணி புரிவேன் என்று பதவியேற்பின்போது உறுதியளித்த கோட்டாபய நடைமுறையில் மற்றைய மதங்களை உதாசீனம் செய்து நடந்து கொண்டமை அவரது உடலில் ஓடும் இராணுவ இரத்தத்தைத் தெரிய வைக்கிறது.

தமது தந்தையான டி.ஏ. ராஜபக்ஷ நினைவுமண்டபம் கட்டுவதற்கு 33.9 மில்லியன் ரூபாவை அரச நிதியில் மோசடி செய்த வழக்கை எதிர்கொண்டிருந்த கோட்டாபய கடந்த புதன்கிழமை விடுதலை செய்யப் பட்டுள்ளார்.

இப்போது ஜனாதிபதியாகி விட்டமையால் அவருக்கு சட்டபூர்வமாக வழக்குகளிலிருந்து விலக்களிக் கப்படும் நியமத்தின் கீழ் விடுதலை வழங்கப்பட்டமை வ்நீதிக்கு உட்பட்டதா என்ற கேள்வி பலரிடம் மௌனமாக எழுந்துள்ளது.

மஹிந்த ஆட்சிக்காலத்தில் அவரது நிதியமைச்சின் செயலாளராகவிருந்த சமயம் பல பில்லியன் ரூபா மோசடியில் சம்பந்தப்பட்டவர் என்று கூறப்படும் பி.பி.ஜெயசுந்தர இப்போது மீள அழைக்கப்பட்டு கோட்டாபயவின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதி செயலகத்தின் பிரதான அதிகாரியாக இருந்த காமினி சேனரட்ண சமகாலத்தில் மக்கள் வங்கி, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் தலைவராகவிருந்தவர். அங்கு இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில் கைதாகி விளக்கமறியலில் இருந்தவர். அந்த வழக்குகள் இன்னும் முடிவடையாத நிலையில் இப்போது பிரதமராகப் பதவியேற்றுள்ள மஹிந்த வின் செயலாளராகப் பதவியேற்றுள்ளார்.

இவ்வாறு மீண்டும் பதவியேற்ற இன்னொருவர் பல மோசடிகளில் பிடிபட்டு பதவியிழந்திருந்த ஆட்டிகல என்பவர். இந்த நியமனங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ள ஆங்கில ஊடகமொன்று பழைய கொள்ளையர் மீண்டும் வருகின்றனர் (**Old crooks are coming back**) என்று எழுதியுள்ளது.

மஹிந்த ஆட்சிக்காலக் கொள்ளைகள் மற்றும் மோசடிகள் பற்றிய விசாரணைகளை மேற்கொண்ட புலனாய்வுப் பிரிவின் தலைமைப் பொலிஸ் அதிகாரியான சானி அபேசேகரவை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் கோட்டாபய பதவி நீக்கம் செய்துள்ளார். புதிய ஜனாதிபதியின் முதலாவது அரசியல் பழிவாங்கலாக இதனைக் கொள்ளலாம்.

இலங்கையின் தேசிய கீதம் இனிமேல் சிங்கள மொழியில் மட்டுமே பாடப்பட வேண்டுமென கோட்டாபய உத்தரவிட்டார் என் ஒரு செய்தி வெளியானது. இதற்குப் பலத்த கண்டனம் கிளம்ப மறுகணமே அப்படியொரு உத்தரவையும் கோட்டாபய பிறப்பிக்கவில்லையென அடுத்த செய்தி வந்தது.

இதுதான் மஹிந்த பாணி. பிரச்சனைக்குரிய விடயங்களை ஊடகங்களுக்கு மெதுவாகக் கசிய விட்டுப்பார்ப்பார்கள். அதற்கு எதிர்ப்புக் கிளம்பினால் அப்படியாக எதுவும் தீர்மானிக்கப்படவில்லையென்று அறிக்கை வாயிலாகத் தெரிவித்து

தப்பி விடுவார்கள். தேசிய கீதம் விடயத்திலும் இது தான் நடந்திருக்கிறது போலும். தற்போதைய அரசியல் நிலைவரத்தை இனி நோக்கலாம். கோட்டாபயவையும் மஹிந்தவையும் தனித்தனியாகச் சந்தித்து உரையாடியமையை அடுத்து ரணில் விக்கிரமசிங்க தமது பிரதமர் பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சிக்குள் தமக்கு எதிராக சஜித் குழுவினர் தலைமைப் பதவியைப் பறிக்க ஆரம்பித்த புதிய நடவடிக்கைக்கு இதுவே அவருக்கு சுலபமான வழியாகவிருந்தது.

ரணிலின் ராஜினாமாவைத் தொடர்ந்து இடைக் காலப் பிரதமராக தமது அண்ணர் மஹிந்தவை கோட்டாபய நியமித்துள்ளார்.

1994இல் ஜனாதிபதியாகத் தெரிவான சந்திரிகா குமாரதுங்க முதல் நான்காண்டு காலத்துக்கு பிரதமராக தமது தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்கவை நியமித்தமையை இப்போது நினைவிற் கொள்ளலாம்.

22ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலையில் இடைக்கால அமைச்சரவை ஜனாதிபதி கோட்டாபய முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துள்ளது. எதிர்வரும் பெப்ரவரி 17ஆம் திகதி தற் போதைய நாடாளுமன்றத்தின் முதல் நான்கரை வருடங்கள் முடியும்போது அது கலைக்கப்பட்டு அடுத்த பொதுத் தேர்தல் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அதுவரை இடைக்கால எதிர்க்கட்சித் தலைவராக ரணில் பதவியேற்கும் வாய்ப்புண்டு. கட்சித் தலைவர் பதவியை தக்க வைத்துக் கொண்டால் – ஆட்சியிலிருந்தால் பிரதமர்; ஆட்சியிழந்தால் எதிர்க்கட்சித் தலைவர் பதவி – என்ற சூத்திரம் ரணி லுக்குத் தெரியுமென சில வாரங்களுக்கு முன்னர் நான் குறிப்பிட் டது ஞாபகமிருக்கலாம். எனினும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை சஜித்துக்கு பெற்றுக் கொடுக்க உட்கட்சிப் போராட்டம் நடை பெறுவதையும் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

இறுதியில் இத்தேர்தலின் வாக்களிப்பின்போது இலங்கைத் தேசம் இரு துருவங்களாக மாற்றம் பெற்றதைக் கவனிக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கின் ஐந்து மாவட்டங்களிலும் சஜித்தே வெற்றி பெற்றார். ஆறாவது மாவட்டமாக நுவரெலியா சஜித்துக்கு கை கொடுத்தது. (1982ஆம் ஆண்டின் முதலாவது ஜனாதிபதித் தேர்தலின்போது நுவரெலியா மாவட்டத்திலேயே ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன அதிகூடிய வாக்குகள் பெற்றமையை இவ்வேளை நினைவு கூருவது பொருத்தமானது). மிகுதிப் பதினாறு மாவட்டங்களிலும் கோட்டபயவே அமோக வெற்றி பெற்றார்.

வன்னி யுத்தக் காயத்திலிருந்தும் – அதன் வலியிலிருந்தும் – தமிழ் மக்கள் இன்னமும் ஆறவில்லையென்பதை இத்தேர்தலின் வாக்களிப்பினூடாகத் தமிழர்கள் தெரியப்படுத்தியுள்ளனர். சஜித்துக்கு வாக்களிக்குமாறு கூட்டமைப்பு வேண்டியிருக்காவிடினும் தமிழ் மக்கள் கோட்டாபய தோற்கடிக்கப் பட வேண்டுமென்பதற்காக சஜித்துக்கே வாக்களித்திருப்பர் என்பதே யதார்த்தம்.

இந்த வாக்களிப்புத் தொடர்பாக கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தமது அறிக்கையில் தெரிவித்திருக்கும் ஒரு பகுதி முக்கியமானது.

தங்கள் உரிமைகள் தொடர்பான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதில் தொடர்ந்தும் தமிழ் மக்கள் உறுதியாக இருப்பதை ஒன்றுபட்டு இலங்கை ஆட்சியாளருக்கும் பன்னாட்டுச் சமூகத்துக்கும் ஒரு செய்தியாக தங்கள் வாக்குகள் வாயிலாகத் தெரிவித் துள்ளனர் – என்ற சம்பந்தனின் கருத்தும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியது.

ஆனால் இங்கு மனதை உறுத்தும் ஒரு விடயமுண்டு. தனக்கு வாக்களித்த சிங்கள, பௌத்த மக்களுக்கு பகிரங்கமாக கோட்டாபய நன்றி கூறியமை போன்று அதிகூடிய வாக்குகளை தமக்கு அள்ளிக் கொட்டிய தமிழ், முஸ்லிம் மக்களுக்கு சஜித் பிரேமதாஸ நன்றி கூறாது மௌனம் காப்பதன் மர்மம் என்ன?

கோட்டாபயவை தோற்கடிக்க வேண்டுமென்றே இவர்கள் தனக்கு வாக்களித்தபடியால் எதற்காக இவர்களுக்கு நன்றிகூற வேண்டுமென நினைக்கிறாரா இந்த நன்றிகெட்ட அரசியல்வாதி? அரசியல் என்றால் இதுதான் போலும்!

நன்றி - பதிவு



# சபரிமலை ஐயப்பனைத் தரிசிக்க

# பதினெட்டு படிகள் எதற்காக?

பிரம்மச்சரிய கடவுளான சபரிமலை ஐயப்பனை தரிசிப்பதற்கு தினமும் ஆயிரக்கனக்கானோர் சென்று வருகின்றனர். இவர்களில் பெயரளவுக்கு விரதம் இருந்து தரிசிப்பவர்கள் இருக்கிறார்கள். துளசி மற்றும் ருத்ராட்சம் இணைந்த மாலையணிந்து 41 நாள்கள் முறையாக கடுமையான விரதமிருந்து, பூஜைகள் மேற்கொண்டு, இருமுடி தாங்கி, மலையேறி வந்து ஐயப்பனை தரிசிப்பவர்க ளும் உண்டு.

ஐயப்பனை யார் வேண்டுமானாலும் தரிசிக்கலாம் என்று இருந்தாலும், விரதமிருந்து இருமுடி கட்டியவர்கள் மட்டுமே பதினெட்டு படிகளையும் தொட்டு வணங்கி, பின்பு தர்ம சாஸ்தாவாக விளங்கும் சபரிமலை ஐயப் பனைத் தரிசிக்க முடியும் என்பது காலங்காலமாக கடைபிடிக்கப்பட்டு வரும் ஐதீகம். இதில் சிறிதும் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை. அப்படி பதினெட்டு படிகளையும் பயபக்தியோடு வணங்கி ஐயப்பனை தரிசிப்பவர்கள் அனைவருமே தாங்கள் பிறவிப்பயனை அடைந்துவிட்டதாகவே மெய்சிலிர்ப் பதுண்டு.

## பதினெட்டு படிகள்




எவ்வளவு பெரிய வி.ஐ.பியாக இருந்தாலுமே, இருமுடி கட்டிக்கொண்டு வந்தால் மட்டுமே, இந்த பதினெட்டு படிகளையும் தரிசித்து இதன் வழியாக மேலேறி சென்று ஐயப்பனை தரிசிக்க முடியும். மற்றவர்களெல்லாம், புறவாசல் எனப்படும் பின் வாசல் வழியாக வந்து தான் ஐயப்பனை தரிசிக்க முடியும்.

இந்த பதினெட்டு என்ற எண்ணுக்கு என வரலாற்று சிறப்புகளும் உண்டு. கிராமப்புறங்களில் குல தெய்வமாகவும், காவல் தெய்வமாகவும் விளங்கும் கருப்பசாமி அமர்ந்திருப்பது, பதினெட்டு படிளையும் தாண்டி தான். அதனால் தான் அவரை பதினெட்டாம் படி கருப்பசாமி என்று அழைக்கிறோம்.

## பதினெட்டின் தத்துவம்

மஹாபாரதப் போர் நடைபெற்றது 18 நாள்கள் தான். ராமாயணத்தில் ராமருடைய படையினருக்கும் அரக்கனான இராவணனுக்கும் இடையில் 18 மாதங்கள் போர் தொடர்ந்து நடைபெற்றது. இதன் காரணமாகவே 18 என்ற எண் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. இந்துக்களின் வாழ்வில் முக்கிய அம்சமாகக் கருதப்படுவது 9 கிரஹங்கள். அதுபோலவே 9 அதி தேவதைகள். இவை இரண்டும் சேர்ந்ததே 18 படிகளாக சபரிமலையில் அமைந்திருக்கின்றன.

இவைகள்தான் இருமுடி தாங்கி படியேறும் பக்தர்களை எந்தவிதமான தோஷங்களும் அணுகாமல் காத்து அருள்புரிகின்றன. அதோடு, ஐயப்பனும், சின்முத்திரை தாங்கி, யோக நிலையில் அமர்வதற்கு முன்பு, தன்னுடைய கவசமாக இருந்த 18 ஆயுதங்களையும், பதினெட்டு படிகளோடு ஐக்கியாகும்படி அருளாசி வழங்கினாராம். இதனால் இந்த 18 படிகளையும் தரிசித்து மேலேறி வந்து தன்னை தரிசிக்கும் பக்தர்களுக்கு இந்த 18 ஆயுதங்களும் சூழ்ந்து எவ்வித ஆபத்தும் வராமல் காக்கும் என்பது ஐதீகம். அதோடு, இந்த 18 படிகளும் நம்முடைய வாழ்க் கைக்கு உதவும் 18 வகையான தத்துவங் களையும் உணர்த்துகின்றன.அவைஎன்னவென்பதை நாம் பார்க்கலாம்.

## முதல் இரண்டு படிகள்

மோகமும் கோபமும் ஒருவருக்கு கூடாது. நம்முடைய துன்பத்திற்கு காரணம் பாசம், பற்று ஆகியவை தான். இவற்றில் மோகம் ஏற்பட்டால் புத்தி கெட்டு நம் வாழ்க்கை நாசமாகிவிடும் என்பதை உணர்த்துகிறது. குரோதம் ஒருவனை அழிப்பதோடு, அவன் சுற்றத்தாரையும் சேர்த்து அழித்துவிடும் என்பதை முதல் இரண்டு படிகள் உணர்த்துகின்றன.

## பேராசை, பற்றற்ற தன்மை

ஆசையே துன்பத்திற்கு காரணம். பேராசைக்கு இடமளித்தால், நம்மை முழுமையாக நாசம் செய்துவிடும். ஆண்டவனை அடைய முடியாது என்பதை மூன்றாம் படி உணர்த்துகிறது. எதன் மீதும் பற்று வைக்காமா லும், பாவ புண்ணியங்களைப் பற்றி கவலைப்படா மலும், இறைவனை அடையும் வழியில் நம்முடைய கவனத்தை செலுத்த வேண்டும் என்பதைநான்காம்படிஉணர்த்துகிறது.

## பொறாமை, வீண் பெருமை

மற்றவர்களை கெடுக்க வேண்டும் என்ற பொறாமையை மனதில் நினைத்து வாழ்பவனுக்கு அந்த பொறாமையே அவனுடைய வாழ்க்கையை அழித்து விடும் என்பதை ஐந்தாம் படி உணர்த்துகிறது. வீண் பெருமை பேசுவது என்பது நம்முடைய மனதில் அரக்க குணத்தை உண்டாக்கிவிடும். ஆகவே அந்த அசுரை குணத்தை நம்முடைய மனதில் அண்டவிடக்கூடாது என்பதை ஆறாவது படி உணர்த்துகிறது.

## அகந்தை, அகங்காரம்

ஒருவன் தான் என்ற அகந்தை கொண்டு திரிந்தால், அவன் எப்போதுமே வாழ்க்கையில் முன்னேற முடியாது என்பதை ஏழாவது படியும், விருப்பு வெறுப்பின்றி தன்னுடைய கடமையை சிரமேற் கொண்டு செய்ய வேண்டும் என்பதை எட்டாவது படியும் உணர்த்துகிறது. ஒருவன் அகங்காரம் கொண்டு எந்த கருமத்தையும் கடமையையும் செய்தல் கூடாது என்பதை ஒன்பதாவது படி உணர்த்துகிறது.



## ஞானம், மனம்

ஒருவன் மது, மதி போன்ற மயக்கத்தால், அற்ப புத்தியுன் செயல்பட்டு தன்னைச் சுற்றி இருப்பவர்களுக்கு கெடுதல் செய்யக்கூடாது என்பதை பத்தாம்படி உணர்த்துகிறது. நமக்கு மேல் ஒருவன் இருக்கிறான் என்று உண்மையை உணர்ந்து கொண்டு, தன்னுடைய கடமையைச் செய்வதை பதினொன்றாம் படி உணர்த்துகிறது. மற்றவர்களின் மனம் நோகாமல் வாழவேண்டும். இறைவன் நினைப்பே எப்போதும் மனதில் இருக்கவேண்டும் என்பதை பனிரெண்டாம் படி உணர்த்துகிறது.




## உண்மையான பரம்பொருள்

உண்மையான பரம் பொருளாக இருக்கும் இறைவனை அறிய முடியாமல், நம்முடைய மனதை மறைத்து நிற்கும் இருளை பதிமூன்றாம்படி உணர்த்துகிறது. இறைவனை புறக்கண் மட்டுமல்லாது அகக்கண்ணான தூய மனதைக் கொண்டும் தரிசிக்க வேண்டும் என்பதை பதினாங்காம் படி உணர்த்துகிறது.

## பக்திக்கடல்

இறைவனின் பரிசுத்தமான குணங்களை செவிகள் குளிர கேட்டு, பக்திக் கடலில் மூழ்க வேண்டும் என்பதை பதினைந்தாம் படி உணர்த்துகிறது. இறைவன் குடிகொண்டுள்ள ஆலயத்திலிருந்து வெளிப்படுகின்ற தூய்மையான நறுமணத்தை மட்டுமே நுகர வேண்டும் என்பதை பதினாறாம் படி உணர்த்துகிறது. யாரையும் சுடு சொற்களால் பேசக்கூடாது என்பதை பதினோழாம் படி உணர்த்துகிறது

## பதினெட்டாம்படி

இறைவனை வணங்கும் போது, நம்முடைய மெய்யான உடம்பானது பூமியை தொடும் படி, இருகரம் கூப்பி தரிசனம் செய்ய வேண்டும் என்பதை பதினெட்டாம் படி உணர்த்துகிறது.

மேற்கண்ட பதினெட்டு வகையான குணநலன்களையும் ஆராய்ந்து தீயவற்றி விட்டொழித்து, நல்ல குணநலன்களை மட்டுமே பின்பற்றி வாழ்க்கை என்னும் படிக்கட்டுகளை மிதித்து மேலே ஏறிச்சென்றால் இறைவனின் அருள் நமக்கு பூரணமாக கிடைக்கும் என்பதே பதினெட்டு படிக் கட்டுகள் உணர்த்தும் பாடமாகும்.

## இளையோர் கடவுளின் புதிய வளமான நிலம்

'இளையோராகிய நாங்கள்' – புனித நிலம் – கடவுளின் இன்றைய மக்கள் என்ற தலைப்பில் பெரு நாட்டில் நடைபெறும் 20 ஆவது கூட்டத்தில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகளுக்கு செய்தி அனுப்பியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் இளையோர் கடவுளால் வழங்கப்பட்ட வளமான புதிய பூமி என்கிறார். இலத் தீன் அமெரிக்கா கரீபியன் பகுதியின் நாடுகளிலிருந்து ஏறத்தாழ 150 பிரதிநிதிகள் இதில் கலந்து கொள்கின்றனர்.

காலைக்கதிர் Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவான்:18:37
ஆசிரியர் : அருள்திரு லூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## இளையோர் நமக்கு சவாலாக உள்ளனர்

இளையோர் நம்மிடம் பேசுகின்றனர் 'மற்றும் நமக்குச் சவாலாக உள்ளனர்' அவர்கள் தங்களின் ஆர்வத்தால் இக்காலத்தின் சவால்களுக்குப் பதிலளிக்க நம்மை ஊக்கப்படுத்துகின்றனர். இளையோரின் ஆளுமையை வளர்க்கும் முயற்சியில் அவர்களை விசுவாசத்திலும் ஆழப்படுத்துங்கள். இளையோர் மறைப்பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கென பெரு நாட்டு கூட்டத்தில் கலந்துகொள்வோரிடம் இயேசுவின் நட்பில் கிடைக்கும் மகிழ்வை இளையோர் அனுபவிக்க அவர்களை வழிநடத்துமாறும் கேட்டுக்கொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## நூறாவது பிறந்த நாளை கனடாவில் கொண்டாடினார் மடுத்தீன் பாக்கியநாதர்



திரு.தொ. மடுத்தீன்பாக்கியநாதர் மண்டைதீவைப் பிறப்பிடமாக கொண்டு தற்போது கனடா ரொறென்ரோவில் வசித்து வருபவர். மண்டைதீவில் வசித்து வந்த காலத்தில் 50களில் மண்டைதீவு றோமன் கத்தோலிக்க பாடசாலையில் அதிபர் பணி புரிந்து ஓய்வு பெற்றவர். ஆர்மோனியம் வாசிப்பதில் வல்லவரான இவர் ஆலய வழிபாடுகளில் விருப்புடன் ஆர்மோனியம் வாசித்து இசைப் பணியாற்றியவர்.

இவர் தனது 100 ஆவது பிறந்த நாளை 15 நவம்பர் 2019 அன்று கனடா ரொறென்ரோவில் கொண்டாட இறைவன் அருள் பாலித்திருக்கிறார். அன்றைய தினம் மண்டைதீவுப் பங்குத்தந்தை மனுவேற்பிள்ளை டேவிற் அடிகளார் தலைமையில் பங்கு மக்கள் இணைந்து இறைவன் இவருக்கு வழங்கிய 100 வருடங்களுக்காக நன்றிப்பலி ஒப்புக்கொடுத்து மகிழ்ந்தனர்.

எல்லோரிற்கும் கிடைக்காத ஓர் அரிய இறைகொடை இதுவாகும். இவரின் நல்ல முன்மாதியான கிறிஸ்தவ வாழ்வுக்காகவும் ஆற்றிய நல்ல பணிகளுக்காகவும் இறைவன் இந்த அருளை இவர்மேல் பொழிந்துள்ளார். கிடைத்தற்கரிய இந்த வாய்ப்பை வழங்கிய இறைவனுக்கு நன்றி கூறிக்கொண்டு திரு.தொ. மடுத்தீன் பாக்கியநாதர் அவர்களுக்கு காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களின் பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

# தாய்லாந்தில் திருத்தந்தையின் 32ஆவது வெளிநாட்டுப் பயணம்



திருத்தந்தை பிரான்சிஸ் தனது 32 ஆவது வெளிநாட்டுத் திருத்தூதுப் பயணமாக 19 நவம்பர் 2019 அன்று தாய்லாந்து மற்றும் ஜப்பான் நாடுகளுக்குப் புறப்பட்டார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தனது ஏழு நாள்கள் கொண்ட இத்திருத்தூதுப் பயணத்தில் நவம்பர் 20 – 23 வரை தாய்லாந்திலும் நவம்பர் 23 –26 வரை ஜப்பானிலும் பயணம் மேற்கொள்கிறார். இப்பயணம் திருத்தந்தை ஆசியாவுக்கு மேற்கொள்ளும் நான்காவது திருத்தூதுப் பயணமாகும். இவர் நவம்பர் 26ஆம் திகதி ஜப்பானிலிருந்து உரோம் திரும்புவார்.

உரோம் பியுமிச்சினோ பன்னாட்டு விமான நிலையத்திற்குக் காரில் புறப்பட்ட திருத்தந்தை பிரான்சிஸ் தன்னை வழியனுப்ப விமான நிலையத்திற்கு வந்திருந்த இத்தாலிய அரசு மற்றும் திருஅவை அதிகாரிகளை வாழ்த்தினார். தாய்லாந்திற்குத் தான் பயணம் மேற்கொள்ளவிருந்த 'ஆல் இத்தாலியா யு330' விமானப் படிகளில் தனது வழக்கமான கறுப்புநிற கைப்பையுடன் ஏறிய திருத்தந்தை விமானத்தில் தனது இருக்கையில் அமர்வதற்கு முன்னர் 58 வயது நிரம்பிய விமானியையும் அல்பேட்ரோ அவர்களையும் ஏனைய மூன்று இணை விமானிகள் மற்றும் ஆறு விமானப் பணிப்பெண்களையும் வாழ்த்தினார்.

பாங்கொக் நகர் நோக்கிச் சென்ற இவ்விமானப் பயணத்தில் தன்னுடன் பயணம் செய்த ஏறத்தாழ எழுபது பன்னாட்டு செய்தியாளர்களின் பணிகளுக்கு நல்வாழ்த்தை தெரிவித்த திருத்தந்தை மேற்கிலிருந்து வெகு தொலைவிலுள்ள இந்த கலாச்சாரங்களை மற்ற மக்கள் அறியும்படி செய்வது நல்லது என செய்தியாளர்களிடம் கூறினார்.

இந்த நீண்ட விமான பயணத்தில் தான் கடந்து சென்ற குரோவேசியா – போஸ்னியா – எர்செகொவினா – செர்பியா – மொந்தெனெக்ரோ – பல்கேரியா– துருக்கி – ஈரான் – ஆப்கானிஸ்தான் – பாகிஸ்தான் – இந்தியா மற்றும் மியான்மார் நாடுகளின் தலைவர்களுக்கு அந்தந்த நாடுகளைக் கடந்து செல்கையில் தந்திச் செய்திகளையும் திருத்தந்தை அனுப்பினார். அந்நாடுகளில் அமைதியும் வளமையும் நலமும் நிரம்ப இறைவனிடம் மன்றாடுவதாக அச்செய்திகளில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்.

தாய்லாந்து நாட்டுத் தலைநகர் பாங்கொக் பன்னாட்டு விமான நிலையத்தை 20 நவம்பர் 2019 அன்று சேர்ந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை தாய்லாந்து அரச அவையின் பிரதிநிதிகள், தாய்லாந்து அரசின் ஆறு அதிகாரிகள் மற்றும் அந்நாட்டு ஆயர் பேரவையின் உறுப்பினர்கள் வரவேற்றனர்.

தாய்லாந்தில் வாழ்கின்ற கத்தோலிக்கரைக் குறிக்கும் விதமாக 11 சிறார் மரபு உடைகளில் திருத்தந்தையை மலர் கொத்துக் கொடுத்து வரவேற்றனர். விமான நிலையத்தில் இராணுவ அணிவகுப்பு மரியாதையும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

பின்னர் அங்கிருந்து 34.5 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள, பாங்கொக் திருப்பீடத் தூதரகத்திற்குக் காரில் சென்று மதிய உணவருந்தினார் திருத்தந்தை. 11 மணி 30 நிமிடங்கள் கொண்ட இந்த விமானப் பயண களைப்பைப் போக்க ஓய்வெடுத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

1984ஆம் ஆண்டு திருத்தந்தை புனித 2ஆம் ஜோன் போல் அவர்கள் தாய்லாந்து நாட்டில் திருத்தூதுப் பயணம் மேற்கொண்ட 35 ஆண்டுகளுக்குப் பின் திருத்தந்தை ஒருவர் தாய்லாந்தில் மேற்கொள்ளும் திருத்தூதுப் பயணமாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இப்பயணம் அமைந்துள்ளது.

தாய்லாந்தில் ஏறத்தாழ நான்கு லட்சம் கத்தோலிக்க மக்கள் வாழ்கின்றனர். தாய்லாந்தில் ஏறத்தாழ 95 விழுக்காட்டினர் புத்த மதத்தினராக இருந்தாலும் ஏனைய மதத்தவரும் இங்கு மதிக்கப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தாய்லாந்தில் (சியாமில்) 1669ஆம் ஆண்டு சியாம் அப்போஸ்தலிக்க ஆட்சிப்பீடம் நிறுவப்பட்டதன் 350 ஆம் ஆண்டு நிறைவையொட்டி திருத்தந்தையின் இப்பயணம் நடைபெறுகின்றது.

# தேசிய மட்ட ஆங்கில நாடகப் போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி சாதனை!

தேசிய மட்டத்தில் நடைபெற்ற ஆங்கில மொழி உரையாடல் நாடகப் போட்டியில் கனிஸ்ர பிரிவில் யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்கள் இரண்டாம் இடத்தைபெற்றுசாதனைபடைத்துள்ளனர்.

இப்போட்டியின் சிறந்த நடிகராக தரம் 9 மாணவன் செல்வன் யோண்சன் இராஜ்குமரர் அபிசேக் தெரிவு செய்யப்பட்டுள்ளார். சிறந்த நடிப்பை வெளிப்படுத்திய செல்வன் யோண்சன் இராஜ்குமார் எல்லோராலும் பாராட்டப் பெற்றார்.

ஆசிரியப்பணிபுரியும் இவரின் தந்தை யோண்சன் இராஜ்குமரர் திருமறைக் கலாமன்ற பிரதித்தலைவர் – சிறந்த நாடகக் கலைஞர் – நாடக நெறியாள்கையாளர் – எழுத்தாளர் எனப்பல



துறைகளில் பணிபுரிபவர் என்பது அறிந்ததே.

இந்நாடகத்தை கல்லூரி ஆசிரியர் திருமதி சிவனியா வரதாபரன் நெறிப்படுத்தியுள்ளார். தேசிய மட்டத்தில் நடைபெற்ற ஆங்கில மொழி உரையாடல் நாடகப் போட்டியில்கனிஷ்டபிரிவில்இரண்டாம்இடத்தைபெற்றுசாதனை படைத்துள்ள யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்களையும் இவ்வெற்றிக்கு வழிகாட்டிய அதிபர் ஏ. திருமகன் அடிகளார் மற்றும் இந்நாடகத்தை நெறிப்படுத்திய கல்லூரி ஆசிரியர் திருமதி சிவனியா வரதாபரன் ஆகியோரை



யும் காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களின் சார்பாக வாழ்த்துகிறோம்.

# டெங்குவை ஒழிப்போம்!




## டெங்கு காய்ச்சலை தடுப்பதற்கான வழிகள் என்ன?

வெய்யில் காலம் முடிந்து மழைக் காலம் வந்தாலே இன்னொரு பயம்டெங்குகாய்ச்சலாகத்தான் இருக்கும். வெறும் வைரஸ் காய்ச்சலாக இருந்தால் சமாளித்துக் கொள்ளலாம்.

உயிரை குடிக்கும் இந்த காய்ச்சலை வரவிடாமல் காப்பது உங்கள் கையில் தான் உள்ளது. ஏனெனில் இதில் சுகாதாரத்தை விட விழிப்புணர்வு மிக முக்கியமாக வேண்டும்.

### எவ்வாறு டெங்கு வைரஸ் உருவாகிறது?



ஏட்ஸ் அல்போபிக்டஸ் என்ற கொசு தேங்கியிருக்கும் சுத்தமான நீரிலிருந்து உருவாகிறது. இவை அசுத்த நீரிலோ சாக்கடைகளிலோ உருவாவதில்லை என்பதை நினைவில் கொள்க. இது டெங்கு வைரஸை பரப்பும் ஒட்டுண்ணி.

இது இரண்டுவிதமாக காய்ச்சலை பரப்பும். ஒன்று உயிருக்கு ஆபத்து தராத கடுமையான டெங்கு காய்ச்சல் மற்றொன்று இரத்த இழப்பை ஏற்படுத்தும் காய்ச்சல்( dengue haemorrhagic fever - DHF). இதில் இரண்டாவது வகை உயிரை பறித்து விடும் ஆபத்து நிறைந்தது.



### இந்த கொசுக்கள் எப்படி உருவாகும்?

இதன் நுண்புழுக்கள் செடியின் இலைகளில், வீட்டில் அலங்காரமாக வைக்கும் நீர் நிறைந்த மலர் பானைகளில், நீர் தேங்கிய வீணான டயர்களில், நிறைய நாள்கள் சேமித்து வைக்கபட்டிருக்கும் நீர் தொட்டிகளில், வீட்டு விலங்குகளுக்கு வைக்கப்படும் நீர் பாத்திரங்களில், மழை நீர் தேங்கும் பாட்டில்கள் ஆகியவற்றில் உருவாகும். முக்கியமாய் நீரினை சேர்த்து வைக்காமல் அவ்வப்போது உபயோகப் படுத்த வேண்டும்.

### எப்போது இந்த கொசுக்கள் கடிக்கும்?

மலேரியா போலவே, இந்த கொசுக்களும் பகலில் கடிக்கும். முக்கியமாய் காலை 5 மணியிலிருந்து 8 மணி வரை மற்றும் மாலை 3 - 6 மணி வரை இந்த கொசுக்கள் கடிக்கும். ஆகவே அந்த சமயங்களில் மிக பத்திரமாய் இருந்து கொள்ள வேண்டும்.

### எப்படி பரவும்?

இது ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு பரவாது. கொசுக்களின் மூலமாக மட்டுமே பரவும். ஆனால் ஒரு இடத்தில் டெங்கு கொசுக்கள் உருவாகினால், அவைகளின் எண்ணிக்கை வேகமாக மற்றொரு இடத்திற்கு பரவும் அபாயம் உள்ளது.

### டெங்கு காய்ச்சலின் அறிகுறி என்ன?

குழந்தைகளுக்கு கடுமையான காய்ச்சலுடன் உடல் முழுவதும் சிவந்து பொறி பொறியான அலர்ஜி ஏற்படும். பெரியவர்களுக்கு லேசான தடிப்புடன் சிவந்து, காய்ச்சல் கூடிய தலைவலி, கண் எரிச்சல், வாந்தி, உடல் வலி ஆகியவை ஏற்படும்.

### முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்:

உங்கள் சுற்றுப்புறத்தை நீர் தேங்கா தவாறு சுத்தமாகப் பார்த்துக் கொள்வது அவசியம். எல்லா சாக்கடை குழாய்களில் அடைப்பு இல்லாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் சுற்றுப்புறத்தில் எங்கேயாவது பாட்டில்களில் டயர் , அல்லது காலி இடங்களில்நீர்தேங்கியிருந்தால், தயக்கமேயில்லாமல் அவற்றை கட்டாயமாக அப்புறப்படுத்தவேண்டும். திறந்திருக்கும் நீர்த் தொட்டிகளை மூடி வைத்திருங்கள்.

வீட்டில் கொசுவராமல் இருக்க கொசு மருந்து, கொசுவர்த்தி சுருள் ஆகியவயற்றை உபயோகப்படுத்த வேண்டும். முக்கியமாய் உடலில் கொசு கடிக்காமல் தடுக்கும் க்ரீம்களை தடவிக் கொள்ளுங்கள். பகலில் உடல் முழுவதும் மூடியிருக்கின்ற முழுக்கை முழுக்கால் சட்டைகளை உபயோகப்படுத்துங்கள்.



# டெங்கு நோயாளிக்கு ஊட்டச்சத்து உணவுகள்



**உங்களுக்கு டெங்கு காய்ச்சலா? அப்படின்னா இந்த 10 உணவுகளை சாப்பிடுங்கள்.**

கடந்த சில ஆண்டுகளாக டெங்கு காய்ச்சல் மக்களிடையே பெரும் அச்சத்தையும், பீதியையும் கிளப்பி வருகிறது. இந்தக் காய்ச்சல் காரணமாக பலர் இறந்து போயுள்ளனர். கொசுக்கள் கடிப்பதால் பரவும் ஒரு வகை வைரஸ் காரணமாக டெங்கு காய்ச்சல் வருகிறது.

இது எலும்புகளை மோசமாகத் தாக்கி வலி ஏற்படுத்துவதால் 'எலும்பு உடைக்கும் காய்ச்சல்' என்றும் அழைக்கப்படுகிறது. தெருக்களிலும், வீடுகளின் பின்னும் ஆங்காங்கே தேங்கி நிற்கும் நீரில் தான் கொசுக்கள் நிறைய உற்பத்தியாகின்றன. எத்தனையோ அரசு அமைப்புகளும், தன்னார்வத் தொண்டு அமைப்புகளும் முயற்சித்த போதிலும் கொசுக்களை மட்டும் ஒழிக்கவே முடியவில்லை.



இருப்பினும், கொசுக்களிலிருந்து விலகி இருந்தால் மட்டுமே, டெங்கு காய்ச்சலிலிருந்து தப்பிக்க முடியும் என்று கூறப்படுகிறது. டெங்கு காய்ச்சலால் அவதிப்படுபவர்கள் நல்ல உணவுகளை சாப்பிட்டால் தான் அந்த வைரஸிலிருந்து தப்பிக்க முடியும்.

அந்தக் காய்ச்சலிலிருந்து விரைவில் விடுபடவும் முடியும். டெங்கு காய்ச்சலில் இருந்து தப்பிக்க எந்தவிதமான உணவுக் கட்டுப்பாடும் தேவையில்லை. ஆனாலும் டெங்கு காய்ச்சல் இருக்கும் போது, இந்த 10 உணவுகளைச் சேர்த்துக் கொள்வது உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது. டெங்கு காய்ச்சலா? வீட்டு மருந்துவம் கை கொடுக்கும்!



### தோடம்பழம்

தோடம்பழத்தில் நிறைய வைட்டமின்களும், இதர சத்துக்களும் காணப்படுகின்றன. செரிமானத்திற்கும், நன்றாக சிறுநீர் போவதற்கும் தோடம்பழம் உதவுவதால் டெங்கு காய்ச்சலிலிருந்து விரைவில் விடுபட முடியும்.

### பப்பாளி

கனிகளைக் கொடுத்த பப்பாளி மரத்தின் இலைகள் டெங்கு காய்ச்சலுக்கு சிறந்தது என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். அதற்கு 2 பப்பாளி இலைகளை நன்றாக நசுக்கிப் பிழிந்து சாறெடுத்துக் கொள்ள வேண்டும். தினமும் காலையிலும் இரவிலும் இந்தச் சாற்றை 2 ஸ்பூன் குடித்து வந்தால் டெங்கு காய்ச்சல் விரைவில் ஓடிப் போகும்.



### கஞ்சி

டெங்கு காய்ச்சலால் உயிருக்கே போராடிக் கொண்டிருப்பவர்களுக்கு கஞ்சிதான் மிகமிகச் சிறந்த உணவாகும். கஞ்சி குடிப்பதால் உடலுக்கு நிறைய சக்தி கிடைக்கும். அதைக் குடிப்பதும் மிகவும் எளிது.

### மூலிகை டீ

டெங்கு காய்ச்சலைக் குறைப்பதில் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது மூலிகை டீ. அதிலுல், இஞ்சி டீ அல்லது ஏலக்காய் டீ குடிப்பது மிகவும் நல்லது

### இளநீர்



இளநீரை நிறையக் குடிப்பதாலும் டெங்கு காய்ச்சல் விரைவில் குணமாகும். கனிமச்சத்துக்கள், எலெக்ட்ரோலைட் டுகள் உள்ளிட்ட நீர்ச்சத்துக்கள் இதில் நிறைந்துள்ளன.

### காய்கறி ஜூஸ்

கேரட், வெள்ளரி உள்ளிட்ட பசுமை நிறைந்த காய்கறிகளைக் கொண்டு தயாரிக்கப்படும் சுத்தமான ஜூஸ்களைக் குடிப்பதால் டெங்கு காய்ச்சல் குணமாகும்.



### பழச்சாறு

நிறையப் பழச்சாறுகளைக் குடிப்பதாலும் டெங்கு காய்ச்சலிலிருந்து தப்பிக்கலாம். அதிலும் வைட்டமின் சி அதிகமுள்ள ஸ்ட்ராபெர்ரி, கொய்யா, கிவி, பப்பாளி உள்ளிட்ட பழங்களின் சாற்றைக் குடிக்கலாம். இதனால் நோயெதிர்ப்பு சக்தியும் அதிகமாகிறது.

### புரோட்டின் உணவுகள்



புரோட்டீன் அதிகமுள்ள உணவுகளை உண்பதாலும் டெங்கு காய்ச்சலை விரட்டலாம். பால், முட்டை, மீன், சிக்கன் ஆகியவற்றை சாப்பிடுவது நலம்.

### சூப்புகள்

பல வகையான சூப்புகளைச் சாப்பிடுவது டெங்கு நோயாளிகளுக்கு மிகவும் நல்லது. உடம்பிற்குத் தெம்பு கிடைக்கவும், எலும்புகள் வலுப் பெறவும் சூப்புகள் உதவுகின்றன. அவை பசியைப் போக்குவதோடு, நாவிற்குச் சுவையையும் தருகின்றன.



### எலுமிச்சைச் சாறு

எலுமிச்சைச் சாறு சிட்ரிக் அமிலம் நிறைந்து இருப்பதால், எலுமிச்சையும் டெங்கு காய்ச்சலை விரட்டுவதில் முக்கியப் பங்குவகிக்கிறது. தேவையில்லாத வித்தை முறிக்கும் தன்மை எலுமிச்சைக்கு உண்டு. தோடம் பழத்தைப் போலவே, எலுமிச்சையும் செரிமானத்திற்கும் நிறைய சிறுநீர் வெளியேறுவதற்கும் உதவுகிறது.



# இந்திய அணியின் தெரிவு குறித்து கடும் விமர்சனம்!



மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான ஒருநாள் மற்றும் ரி - 20 தொடருக்கான இந்திய அணித் தேர்வு குறித்து கடும் விமர்சனம் எழுந்துள்ளது.

மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணி, அடுத்த மாதம் இந்தியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் மற்றும் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடவுள்ளது.

இந்த நிலையில் இந்த இரு தொடர்களுக்குமான இந்திய அணி, அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் இத்தொடருக்கான அணித் தேர்வு குறித்து கடும் விமர்சனம் எழுந்துள்ளது.

இத்தொடருக்கான அணியில், எந்தவித போட்டிப் பயிற்சியும் இல்லாமல் கடந்த காலங்களில் மோசமாக விளையாடிவரும் சகலதுறை வீரர் கேதார் ஜாதவ்வை ஒருநாள் அணியில் தேர்வு செய்துள்ளமை விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, உள்ளூர்ப் போட்டிகளில் சிறப்பான திறமையை வெளிப்படுத்தி, இந்தியா மண்ணில் அண்மையில் நடைபெற்ற பங்களாதேஷ் அணிக்கெதிரான தொடரில் வாய்ப்பளிக்கப்பட்ட விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரர் சஞ்சு சாம்சனுக்கு விளையாட வாய்ப்பளிக்காமலேயே ஒதுக்கப்பட்டுள்ளமையானதும் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், அண்மைக்காலமாக மந்தமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திவரும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஷிகர் தவானும், இரு அணிகளிலும் இடம்பெற்றுள்ளமை காரசாரமான விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது.

இந்த மூவரின் தேர்வும் பலரினதும் மத்தியில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியிருந்தாலும், இது குறித்து இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையோ, தேர்வுக் குழுவோ எவ்விதமான விளக்கத்தையும் அளிக்கவில்லை.

# ரி – 20 போட்டிகளில் மட்டும் பந்துவீச மத்தியூஸ் திட்டம்!

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னணி வீரரான அஞ்சலோ மத்தியூஸ், ரி - 20 கிரிக்கெட் போட்டிகளில் மட்டும் பந்துவீசத் தாம் தீர்மானித்துள்ளார் எனக் கூறியுள்ளார்.




இலங்கை கிரிக்கெட் அணியில் ஒருகால கட்டத்தில் அசைக்க முடியாத சகலதுறை வீரராக வலம் வந்த மத்தியூஸ், தொடர் உபாதைகளால் அணியில் நீடித்து விளையாட முடியாமல் தடுமாறி வருகின்றார்.

இந்த நிலையில், நியூசிலாந்துக்கு எதிராக கடந்த ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற டெஸ்ட் தொடரை தொடர்ந்து, அணியில் இடம்பெறாத மத்தியூஸ் தற்போது ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்றுவரும் ரி - 10 தொடரில் விளையாடி வருகின்றார்.

இதற்கிடையில், இலங்கை கிரிக்கெட் சபையிடம் மத்தியூஸ், தனது எதிர்காலம் குறித்து பல விடயங்களை பகிர்ந்துக் கொண்டுள்ளார்.

இதன்போது அவர் கூறியதாவது, 'சுமார் இரண்டரை மாதங்களுக்குஎனக்கு இடைவெளி கிடைத்தது. நான் உடல் ரீதியாக ஆரோக்கியமாக இருக்க அந்த ஓய்வைப் பயன்படுத்தினேன்.

நான் துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சிலும் கடுமையாக உழைத்தேன். நியூசிலாந்து சுற்றுப்பயணத்திற்குப் பிறகு மீண்டும் பந்துவீச்ச தொடங்கியுள்ளமையுடன், அதனால் கடந்த இரண்டரை மாதங்களாக நான் பந்து வீச்சுப் பயிற்சி செய்து வருகிறேன்.

அத்துடன் நான் நீண்ட காலமாக போட்டிகளில் விளையாட வரவில்லை. ஆனால் நான் பாகிஸ்தான் போட்டிக்கு நன்கு தயாராக இருக்கிறேன். இந்த போட்டிக்கான நாங்கள் (இலங்கை அணி) இதுவரை ஒன்றாக பயிற்சி தொடங்கவில்லை. ஆனால் எல்லோரும் தங்கள் சொந்த பயிற்சியில் ஈடுபட்டு வருகிறோம்.

2009ஆம் ஆண்டு நடந்த பயங்கரவாதத் தாக்குதல்களுக்குப் பிறகு நாங்கள் பாகிஸ்தானுக்குச் செல்கிறோம். இந்த நிலையில் எங்கள் ஒருநாள் மற்றும் ரி-20 அணிகள் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்தன.

இதேவேளை, டெஸ்ட் அணி சுமார் 10 ஆண்டுகளில் பாகிஸ்தானுக்கு புறப்படவுள்ளது. ஆகையினால் தனிப்பட்ட முறையில், நான் சுற்றுப் பயணத்திற்கு நன்கு தயாராக இருக்கிறேன்.

பாகிஸ்தானுடான டெஸ்ட் சுற்றுப் பயணத்தை தொடர்ந்து எங்களுக்கு அதிகளவான தொடர்கள் உள்ளன. ஆகவே அதற்கு தயாராக வேண்டும். எதிர்வரும் 2023ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள சர்வதேச ஒருநாள் உலகக் கிண்ணத் தொடர்வரை விளையாடுவதே எனது குறிக்கோள்'- என்று கூறினார்.

32 வயதான அஞ்சலோ மத்தியூஸ், இலங்கை கிரிக்கெட் அணிக்காக, 82 டெஸ்ட் போட்டிகளிலும், 214 ஒருநாள் போட்டிகளிலும், 72 ரி - 20 போட்டிகளிலும் விளையாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலங்கை அணிக்கு புதிய பயிற்சியாளர்கள்!

இலங்கை கிரிக்கெட் அணிக்கு, சிம்பாப்வே மற்றும் அவுஸ்திரேலியா அணிகளின் முன்னாள் வீரர்கள் பயிற்சியாளர்களாக நியமிக்கப்படவுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி, இலங்கை அணியின் புதிய துடுப்பாட்டப் பயிற்சியாளராக சிம்பாப்வேயின் முன்னாள் வீரர் அன்டி பிளவரும் பந்து வீச்சுப் பயிற்சியாளராக ஆஸ்திரேலியாவின் டேவிட் சகெரும் நியமிக்கப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

எனினும், இந்த நியமனம் இதுவரை உத்தியோகபூர்வமாக இலங்கை கிரிக்கெட் சபையினால் அறிவிக்கப்படாதபோதும், அடுத்த மாதம் இருவரும் அணியுடன் இணைந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதில், சிம்பாப்வேயின் முன்னாள் வீரர் அன்டி பிளவர், அண்மையில் இங்கிலாந்து கிரிக்கெட் சபையுடன் பேணி வந்த 12 ஆண்டுகால உறவினை முடித்துக் கொண்டிருந்தார்.

சிம்பாப்வேயின் முன்னணி துடுப்பாட்ட வீரராகவும், முன்னாள் அணித்தலைவராக விளங்கிய அன்டி பிளவர், சிம்பாப்வே ஜனாதிபதியின் நிறவெறிக் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சிம்பாப்வே தேசிய அணியில் இருந்து ஓய்வு பெற்றார்.

பின்னர் இங்கிலாந்து கிரிக்கெட் சபையுடன் இணைந்துகொண்டு, இங்கிலாந்து தேசிய அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளர், துணைப்பயிற்றுவிப்பாளர், துடுப்பாட்டப் பயிற்றுவிப்பாளர் என தனது பணியைத் தொடர்ந்திருந்தார்.

இவரின் பயிற்சியின் கீழேயே இங்கிலாந்து அணிக்கு முதல் ஐ.சி.சி. உலகக்கிண்ணமான 2010ஆம் ஆண்டின் 'ரி - 20' உலகக் கிண்ணம் கிடைத்தது.

அதுபோல, 1986 - 87ஆம் ஆண்டு பருவ காலத்திற்கு பின்னராக 2010 - 11ஆம் ஆண்டு பருவகாலத்தில் இங்கிலாந்து அணி ஆஸ்திரேலியாவில் ஆஷஸ் தொடரை வென்றிருந்தது.

2013 - 14ஆம் ஆண்டு பருவகாலத்தில் ஆஸ் தொடரில் ஏற்பட்ட பெரு வீழ்ச்சியைத் தொடர்ந்து அன்டி பிளவர் இங்கிலாந்து அணியின் பயிற்சியாளர் பதவியில் இருந்து விலக்கப்பட்டார்.

பின்னர் இங்கிலாந்து லயன்ஸ் கழக அணிக்காக தொழில்நுட்ப இயக்குராகக் கடமையாற்றினார்.

இதேபோல, ஆஸ்திரேலியாவின் விக்டோரியாவை சேர்ந்த முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான டேவிட்சகெர் இங்கிலாந்து, ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர்களின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளார்.

இங்கிலாந்தின் பந்துவீச்சுப் பயிற்சியாளராகப் பணியாற்றியுள்ள அவர் இங்கிலாந்தின் மிகச்சிறந்த வேகப்பந்து வீச்சாளர்கள் அணியை உருவாக்குவதில் முக்கியபங்களிப்பை வழங்கினார் என பாராட்டப்படுகின்றார். (ஐ)

# டெஸ்ட் போட்டிகளில் கோஹ்லி புதிய மைல்கல்!

அணித் தலைவராக குறைந்த இன்னிங்ஸில் 5,000 டெஸ்ட் ஓட்டங்களை எடுத்த வீரர் என்ற சாதனையை இந்திய அணித்தலைவர் விராட் கோஹ்லி படைத்துள்ளார்.




இதன்மூலம், குறைந்த இன்னிங்ஸில் 5000 ஓட்டங்களை எட்டிய வீரர் என்ற பெருமையையும் அவர் பெற்றார்.

இந்தியா மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி பகலிரவு ஆட்டமாக கொல்கத்தாவின் ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி, 106 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

இந்நிலையில், இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸைத் தொடங்கி விளையாடி வருகிறது. இதில் துடுப்பெடுத்தாடிய விராட் கோஹ்லி 32 ஓட்டங்களை எடுத்த நிலையில் இந்தப் புதிய மைல்கல்லை எட்டியுள்ளார்.

இந்த வரிசையில், விராட் கோஹ்லி 86 டெஸ்ட் போட்டிகளில் இந்த மைல்கல்லை எட்டியுள்ளார். அதே போல், ரிக்கி பொண்டிங் 97, கிளைவ் லொய்ட் 106, கிரீம் ஸ்மித் 110, ஆலன் போர்டர் 116 மற்றும் ஸ்டீபன் பிளெமிங் 130 டெஸ்ட் போட்டிகளில் 5000 ஓட்டங்கள் என்ற மைல் கல்லை எட்டியுள்ளனர்.

இதேவேளை, அணித்தலைவராக குறைந்த இன்னிங்ஸில் (65 இன்னிங்ஸ்) 4000 டெஸ்ட் ஓட்டங்களை எடுத்த வீரர் என்ற சாதனையையும் விராட் கோஹ்லி தன்வசப்படுத்தியுள்ளார்.

# பொடுகு தொல்லையை தீர்க்கும் இஞ்சி

மருத்துவ குணம் நிறைந்தது இஞ்சி என்பது அறிந்ததே. இது பொடுகு மற்றும் தலையில் ஏற்படும் அரிப்பு ஆகிய பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமைகிறது. மேலும் இஞ்சியை உரிய முறையில் சரும பராமரிப்பிற்கும் பயன்படுத்த முடியும்.

இஞ்சியில் ஆன்டி பாக்டீரியல் அதிகம் உள்ளமையால் செரிமான கோளாறு, சளி மற்றும் இருமல் ஆகியவற்றுக்கும் பயன்படுத்த முடியும். அத்தோடு இஞ்சி வலி நிவாரணியாகவும், தூக்கத்தை அதிகரிக்கவும் உதவுகிறது. ஆசிய சமையலில் பயன்படுத்தப்படும் முக்கியமான பொருளாகக் கருதப்படும் இஞ்சி, உடலில் ஏற்படும் ஒவ்வாமையையும் தடுக்க உதவுகிறது. பொடுகு மற்றும் தலைஅரிப்பை நீக்க இஞ்சி எவ்வாறு பயன்படுகிறது என்பதற்கு மருத்துவர் ஒருவர் அளித்த விளக்கம் வருமாறு:-



இஞ்சியை எடுத்து பொடி பொடியாக வெட்டியோ அல்லது துருவியோ வைக்கவும். பின்னர் அதனை தண்ணீர் ஊற்றி மிதமான சூட்டில் அடுப்பில் அவிய விட வேண்டும். சிறிது நேரத்தில் மஞ்சள் நிறத்தில் தண்ணீரின் நிறம் மாறத்தொடங்கியதும் அடுப்பை அணைத்து விட்டு அந்த நீரை வடிக்கட்டி தனியே எடுத்து வைத்துக் கொள்ளுங்கள்.

பின் இந்த இஞ்சி சாற்றின் சூடு தணிந்த பின் சின்ன ஸ்பிரே பாட்டிலில் வைத்து நேரடியாக தலை முடியின் வேர்க்கால்களில் படும் விதமாக பயன்படுத்துங்கள்.

இது 1 மணி நேரம் வரை தலையில் இருக்கும் விதமாக வைத்து விட்டு ஷாம்பு தேய்த்து தலை முடியையை கழுவுங்கள்.

இவ்வாறு வாரம் ஒரு முறை செய்யுங்கள். இப்படி செய்வதன் மூலம் தலை அரிப்பு குறைந்து விடும். மேலும் அன்றாடம் தலைக்கு எண்ணெய் வைத்து மசாஜ் செய்வதும் மிகவும் அவசியம். இப்படி செய்தால் பொடுகு தொல்லையில் இருந்து இயற்கையாகவே விடுதலை பெறலாம்.

# எண்ணெய் சருமத்தினால் சோர்வடைந்து விடீர்களா?



சரும பராமரிப்பு என்பது மிகவும் முக்கியமானஒன்று. உங்கள் சருமத்தினை நீங்கள் சரியாகப் பராமரிக்காமல் விட்டால் சருமம் விரைவிலேயே வயதான தோற்றத்தினை அடைந்து விடும். எனவே இதற்கு உங்களின் நேரத்தைச் சற்று செலவழித்து சருமத்தைப் பாதுகாக்க வேண்டும்.

எண்ணெய் சருமத்தைச் சரி செய்வதில் கிரீன் டீ மிகவும் சிறந்த ஆக்ஸிஜனேற்ற பண்புகளைக் கொண்டுள்ளது. இத்துடன் அரிசிமாவு சேர்த்து எவ்வாறு பேஷ் மாஸ்க் போடலாம் என்பதைப் பற்றிப் பார்க்கலாம்

## உங்களுக்கான தீர்வு!

### தேவையான பொருட்கள்

இரண்டு தேக்கரண்டியளவு அரிசி மா, ஒரு தேக்கரண்டியளவு கிரீன் டீ தூள் மற்றும் ஒரு தேக்கரண்டி எலுமிச்சை சாறு எடுத்து ஒன்றாகக் கலந்து கலவையாக்கிக் கொள்ளுங்கள். அதனை உங்கள் முகத்தில் பூசிக்கொள்ளுங்கள். ஆனால் கலவையைக் கண்கள் மற்றும் வாய் பகுதியைச் சுற்றி பூசாதீர்கள். இந்த கலவையை முகத்தில் 15 நிமிடங்கள் அல்லது கலவை காயும் வரை வைத்து பின்னர் குளிர்ந்த நீரில் அலசுங்கள். இதனை வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறை செய்யலாம்.

### எலுமிச்சை சாறு



எலுமிச்சை சாறு சருமத்தில் எண்ணெய் உற்பத்தியைக் கட்டுப்படுத்த உதவும். எலுமிச்சை சாறு முகப்பருவுக்குத் தீர்வளித்து முகத்தில் இருக்கும் வடுக்களைச் சரி செய்யவும் உதவுகிறது. உங்களுக்கு எலுமிச்சை சாறு கிடைக்க விட்டால் தேன் பயன்படுத்தலாம்.

### அரிசி மாவு

அரிசி மாவு சருமத்தில் இருக்கும் எண்ணெய் உறிஞ்சும் பண்புகளைக் கொண்டுள்ளது. எண்ணெய் சருமத்திற்கு ஓர் அற்புதமான எக்ஸ்போலியேட்டராக அரிசி மாவு உதவும். மேலும் முகத்தில் இருக்கும் டனை அகற்றுவதற்கு அரிசி மாவு சிறந்த தீர்வாகும். அரிசி மாவு வைட்டமின் பி இன் மூலமாக இருப்பதால் சருமத்தில் உள்ள இறந்த செல்களை அகற்றி புதிய செல்களை ஊக்குவிக்கிறது



### கிரீன் டீ

கிரீன் டீயைப் பயன்படுத்துவதன் மூலம் சரும ஆரோக்கியம் மற்றும் உடலின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தையும் மேம்படுத்த முடியும். ஏனெனில் இது உடலில் உள்ள நச்சுகளை அகற்றுகிறது. ஃபேஸ் பேக்குகளில் கிரீன் டீயை பயன்படுத்தும் போது உங்கள் சருமத்தை ஒளிரச் செய்து பளபளக்கச் செய்கிறது. கிரீன் டீ சருமத்தில் ஆரோக்கியமான செல்களை உருவாக்குகிறது. இதனால் எளிதில் அல்லது இளம் வயதில் ஏற்படும் வயதான தோற்றத்தினை தடுக்கிறது. கிரீன் டீயில் டானின்கள் மற்றும் ஆக்ஸிஜனேற்றங்கள் உள்ளமையால் கண்களுக்குக் கீழ் ஏற்படும் கரு வளையங்கள் மற்றும் கண்களைச் சுற்றியுள்ள வீக்கத்தைக் குறைக்க உதவு கின்றன. கிரீன் டீயில் இருக்கும் பாக்டீரியா எதிர்ப்பு பண்புகள் முகப்பருவைக் குறைத்து வடுக்களைத் தடுக் கின்றன. கிரீன் டீ பயன்படுத்தி ஃபேஸ் பேக் போடும் போது சருமத்தில் இருக்கும் சிறு சிறு துளைகளைச் சரி செய்கிறது.



### ஃபேஸ் பேக்

நீங்கள் ஃபேஸ் பேக் போடுவதற்கு முன்பு உங்கள் முகங்களை முதலில் நன்றாகக் கழுவிச் சுத்தப்படுத்துங்கள். இது உங்கள் முகத்தில் இருக்கும் துளைகளில் கலவை சேர்வதற்கு உதவும். இப்போது கலவையை முகத்தில் அப்ளை செய்து காய்ந்த பிறகு குளிர்ந்த நீரைப் பயன்படுத்திக் கழுவுங்கள்.





# தேங்காய் எண்ணெய் தேய்க்க பிடிக்கலையா?

## தேங்காய்ப்பால் ஸ்பிரே யூஸ் பண்ணி பாருங்க!

தேங்காய் எண்ணெய் என்பது அழகு சாதனப் பொருள்களில் ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் தலையில் தேங்காய் எண்ணெய் தேய்க்க வேண்டும் என்றாலே நமக்குச் சற்று எரிச்சல் ஏற்படும். ஏனெனில் இது சற்று நேரத்திலேயே முகத்தில் வடிந்து முகத்தின் அழகையே கெடுத்து நம்மைச் சோர்வாகக் காட்சியளிக்க வைக்கும்.

எனவே தேங்காய் எண்ணெயை தேய்க்க நமக்கு விருப்பம் இருக்காது. உங்களுக்காகத் தேங்காய்ப் பால் ஸ்பிரே உள்ளது. இது உங்கள் தலைமுடியை வலுவாக மற்றும் அடர்த்தியாக வளரச் செய்ய உதவுகிறது. இவற்றை எப்படி வீட்டிலேயே தயாரித்துப் பயன்படுத்துவது என்பதைப் பார்க்கலாம்.

### தேங்காய்ப் பால்

இதில் அதிக அளவு கொழுப்புகள், புரதங்கள் மற்றும் வைற்றமின் ஈ நிறைந்துள்ளன. இவை முடியின் வேர்கள் முதல் நுனி வரை சென்று முடியை வலுப்படுத்துகின்றன. மேலும் மெல்லிய முடி, பூச்சி வெட்டுகள், உலர்ந்த மற்றும் சேதமடைந்த முடியைச் சரி செய்கிறது.

### அத்தியாவசிய எண்ணெய்

ஆர்கான் எண்ணெய் முடிக்கு மாய்ஸ்சரைசராகவும், ஃபிரிஸைக் கட்டுப்படுத்தி மந்தமான கூந்தலுக்குப் பிரகாசத்தைச் சேர்க்க உதவுகிறது. ஜோஜோபா எண்ணெய் சருமத்தையும், முடியையும் ஆரோக்கியமாகவும், நீரேற்றத்துடன் வைப்பதற்கு உதவுகிறது. தேங்காய் எண்ணெய் முடி மற்றும் சருமத்தில் முக்கிய பங்கினை ஆற்றுகிறது.

இதனை நீங்கள் ஹேர் ஸ்பிரேயில் சேர்த்துப் பயன்படுத்தலாம். ரோஸ்மேரி எண்ணெய், லாவெண்டர் எண்ணெய், மிளகுக்கீரை போன்றவை உங்கள் முடியை வலுப்படுத்த உதவும். தேங்காய்ப் பால் ஸ்பிரே பாட்டில் எடுத்து மேலே குறிப்பிடப்பட்ட எண்ணெய்களில் ஏதேனும் ஒன்றைத் தேர்வு செய்து கொள்ளுங்கள். உங்கள் முடியின் வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டுமென்றால் கண்டிப்பாக அத்தியாவசிய எண்ணெயை சேர்க்க வேண்டும்.



தேங்காய் எடுத்து அரைத்து தேங்காய்ப்பால் தயாரித்து கொள்ளுங்கள். இப்போது தேங்காய்ப்பால் மிகவும் திக்காக இருக்கும். அதனை எடுத்து வடிகட்டி மென்மையானதாக மாற்றிக் கொள்ளுங்கள். மீதமுள்ள தேங்காய் பாலுடன் சியா விதைகளைச் சேர்த்து பருகலாம். உங்களிடம் கூடுதல் எண்ணெய் இருந்தால் அதனை லிப் - பாம் அல்லது லோஷனாக பயன்படுத்தலாம். ஹேர் மாஸ்க் கண்டிஷனிங் ஆகவும் உபயோகிங்கள்.



### பயன்படுத்தும் முறை

ஸ்ப்ரே பாட்டில் எடுத்து தேங்காய் பால் சேர்த்து அத்தியாவசிய எண்ணெய் மற்றும் தேங்காய்ப்பால் இரண்டும் ஒன்றோடு ஒன்றாகச் சேரும் வரை குலுக்குங்கள். இதனை பிரிட்ஜில் வைக்க விரும்பினால் பயன்படுத்தி விட்டு பிரிட்ஜில் சேகரித்து வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் அடுத்த முறை உபயோகிக்கும் போது நன்றாக குலுக்கி விட்டுப் பயன்படுத்த வேண்டும்.

காலைக்கதிர் Kalaikathir





# பட்டினியின்றி தொப்பையை குறைக்க இயற்கை முறைகள்!!


நம் உடலின் தேவைக்கு மேல் நாம் உண்ணும் கலோரிகள் ட்ரைகிளிசரைடுகள் (Triglyceride) என்னும் மற்று மொரு கொழுப்பு வகையாக உடலில் சேர்த்து வைக்கப்படுகிறது. ட்ரைகிளிசரைடு இரத்த அளவு மற்றும் இதய நோய்க்கு இடையில் உள்ள உறவு கொழுப்பு இரத்த அளவுக்கு குறைவான வெளிப்படையானதாக உள்ளது. இருப்பினும், உயர்ந்த ட்ரைகிளிசரைடு அளவு மற் றும் உயர்ந்த இதய நோய்க்கு இடையில் தெளிவான தொடர்பு இருப்பதாக ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

வாழ்க்கை முறைக் காரணிகள் ட்ரைகிளிசரைட்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எனவே மருத்துவர்கள் மருந்துகளைப் பரிந்துரைப்பதற்கு முன்பு, அவற்றை இயற்கையாகவே குறைக்க முயற்சிக்கலாம். உங்கள் ட்ரைகிளிசரைட்டின் அளவு உயர்ந்துள்ளதா? அதை வீழ்த்தி உங்கள் இதயத்தை ஆரோக்கிய பாதையில் கொண்டு செல்ல பல்வேறு வழிகள் உள்ளன. அவற்றை பற்றி தெரிந்து கொள்ளலாம்.

### ட்ரைகிளிசரைடுகள் என்றால் என்ன?

கொழுப்பு அமிலங்கள் முக்கியம் என்பதால் இது உடலின் தேவைகளுக்கு எரிபொருளாக எரித்துவிடும் கொழுப்புகள் ஆகும். எரிபொருள் தேவைப்படும் கொழுப்பு அமிலங்களை சேமிப்பதற்கும், போக்குவரத்து செய்வதற்கும் ட்ரைகிளிசரைடுகள் உதவுகின்றன.

கொழுப்பு உணவுகள் ட்ரைகிளிசரைடுகளை



அதிகரிக்கச் செய்கிறது. ட்ரைகிளிசரைடுகள் அதிகமானால் உடல்பருமன் அதிகரிக்கும். மேலும், இதய பாதிப்புகள், நீரிழிவு நோய் ஏற்படவும் இது முக்கிய காரணியாக இருக்கிறது.

### ட்ரைகிளிசரைடுகள் எங்கிருந்து வருகின்றன?

நாம் இரண்டு மூலங்களிலிருந்து ட்ரைகிளிசரைட்களைப் பெறுகிறோம். உணவை உண்பதன் மூலமாகவும், அவற்றை உற்பத்தி செய்வதிலிருந்தும் பெறுகிறோம். நாம் சாப்பிடும் பெரும்பாலான கொழுப்பு – விலங்குகள் அல்லது தாவரங்களிலிருந்து பல்வேறு ட்ரைகிளி சரைட்களின் தொடர்பு உள்ளது. நம் குடல்கள் ட்ரைகிளி சரைட்களை உறிஞ்ச முடியாது, அதனால் செரிமான செயல்பாட்டில், நம் உணவில் உள்ள ட்ரைகிளிசரைடுகள் கிளிசெரால் மற்றும் கொழுப்பு அமிலங்களாக பிரிக்கப்படுகின்றன. பின்னர் இவை இரண்டும் நம் குடல் வளைவுகளின் செல்களால் உறிஞ்சப்படலாம்.

ட்ரைகிளிசரைடுகள் கல்லீரலில் மற்றும் கொழுப்பு செல்கள் மூலம் ஒருங்கிணைக்கப்படுகின்றன. உதாரணமாக, நாம் அதிகப்படியான கார்போஹைட்ரேட் சாப்பிடும் போது, அதிகப்படியான கார்போஹைட்ரேட்டுகள் ட்ரைகிளிசரைடுகளாக மாற்றப்படுகின்றன. ட்ரைகிளிசரைடுகள் உடலில் பயன்படுத்தப்படுகின்றன

குடல் செல்களில் உள்ள ட்ரைகிளிசரைடுகள் மீண்டும் இரத்த சிவப்பணுக்களாகவும், மற்றும் உட்கொண்ட கொழுப்பு சேர்த்து, தொகுப்புகள் என்றழைக்கப்படும் நுண் கொழுப்பு குமிழ்கள் (chylomicrons). உடலின் திசுக்கள், சுழற்சிகளிலான சலோமிகிரான் களிலிருந்து ட்ரைகிளிசரைடுகளை அகற்றி, சக்தியை எரிக்க அல்லது கொழுப்பாக சேமித்து வைக்கின்றன. பொதுவாக ஓர் உணவுக்குப் பிறகு, சில மணிநேரங்களுக்கு இரத்த ஓட்டத்தில் உள்ள சைலோமைக்ரான்களின் அடர்த்தி அதிகரிக்கிறது.

### ட்ரைகிளிசரைடுகள் உயர்வதால் ஏற்படும் விளைவுகள்

உயர்ந்த ட்ரைகிளிசரைடு அளவுகள் இதய நோய்க்கு அதிகமான ஆபத்தோடு தொடர்புடையவை. மேலும் அதிக ட்ரைகிளிசரைடு அளவுகள் கணையச் சுருக்கத்தை (கணையத்தில் வலி மற்றும் சில நேரங்களில் ஆபத்தான வீக்கம்) உருவாக்கும்.

நீரிழிவு நோய், கல்லீரல் நோய், வளர்சிதை மாற்ற நோய்த்தாக்கம் மற்றும் தைராய்டு நோய் போன்ற பிரச்சனைகள் ஏற்பட ட்ரைகிளிசரைட்கள் அதிகமாக இருப்பது காரணம் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

### இயற்கையான வழிமுறைகள் வருமாறு:-

அதிக நார்ச்சத்து நிறைந்த உணவுகள்

சர்க்கரையின் அளவை குறைத்துக் கொள்ளுதல்

ஆல்கஹால் அளவை குறைப்பது

ஆரோக்கியமற்ற கொழுப்புகளைத் தவிர்க்கவும்

ஆரோக்கியமான கொழுப்புகளை உட்கொள்ளுங்கள்

ஒமேகா – 3

சிறுதானிய உணவுகள்

குறைவான கலோரிகளை எடுத்துக் கொள்ளல்.

### எடை குறைப்பு

தவறாமல் சாப்பிடுவது

நார்ச்சத்து நிறைந்த உணவுகள்

நம் உடலுக்கு நார்ச் சத்து என்பது மிகவும் முக்கியமானது. நார்ச்சத்தில் எளிதில் கரையும் மற்றும் கரையாத நார்ச்சத்து என்று இரண்டு வகை உள்ளது. ஜூஸ் மற்றும் காய்கறி, பழங்கள் மற்றும் தானியங்கள் உள்ளிட்டவைகளில் நார்ச்சத்துக்கள் நிறைந்துள்ளன.

சிவப்பு அரிசி

கொண்டை கடலை

முழு தானியங்கள்

தேங்காய்

பாட்டானி

ஆப்பிள்

சாத்துக்குடி

பீன்ஸ்

ஆரஞ்சு

### சர்க்கரையின் அளவு

சாக்லேட் போன்ற இனிப்புகள் நிறைந்த திண்பண்டங்களில் சர்க்கரையின் அளவு அதிகமாக இருக்கும். இவற்றை உட்கொள்வது உடலுக்குத் தீங்கு விளைவிக்கும், மேலும் இனிப்பு நிறைந்த பானங்கள் பருகும் போது சர்க்கரையின் அளவு மிகவும் முக்கியம். இதனால் சர்க்கரை நோய் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம்.

### ஆரோக்கியமற்ற கொழுப்பு உணவுகள்

கெட்ட கொழுப்பு கெட்ட கொலஸ்ட்ராலை கொண்டுள்ளது. ஆரோக்கியமற்ற கொழுப்பு உடலில் பல பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. ஆரோக்கியமற்ற கொழுப்பு உணவுகளை நாம் தவிர்க்க வேண்டும்.

தோலுடன் இருக்கும் கோழிக்கறி

கொழுப்பு நிறைந்த பால்

வெண்ணெய், பாமாயில், சீஸ்



ஐஸ் க்ரீம், பீட்சா வகைகள்

பொரித்த உணவுகள்

### ஆரோக்கியமான கொழுப்பு உணவுகள்

நாம் அனைவரும் ஆரோக்கியமற்ற கொழுப்பு உணவைத் தவிர்த்தால் மட்டும் போதாது. ஆரோக்கியமான கொழுப்பு நிறைந்த உணவுகளை உட்கொள்ள வேண்டும். இதனால் –

உடலுக்குச் சக்தி கிடைக்கும்.

உடல் உஷ்ணம் சீராக இருக்கும்.

திசுக்களை பாதுகாக்கிறது.

தலை முடி வளரும்.

சருமம் பொழிவு பெரும்.

ஹார்மோன்கள் உருவாகும்.

மூளையின் திசு வளர்ச்சிக்கு உதவுகிறது.



# சீதாப்பழக் கொட்டைகளின் அதிசயமான குணங்கள்!!

சீதாப்பழ கொட்டைகளுக்கு இருக்கும் இந்த குணங்கள் உங்கள கண்டிப்பாக ஆச்சரியப்படுத்தும் . சீதாப்பழம் என்பது அனைவரும் விரும்பக்கூடிய மிகவும் பிரபலமான ஒரு பழமாகும். சீதாப்பழத்தின் சுவை பற்றியும் அதன் மருத்துவ குணங்கள் பற்றியும் நாம் நிறைய கேள்விப்பட்டிருப்போம், ஆனால் ஒருபோதும் அதன் கொட்டைகளில் இருக்கும் நன்மைகளை பற்றி கேள்விப்பட்டிருக்க மாட்டோம். பல்வேறு பழங்களின் விதைகளை நாம் பயனற்றவை என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

நீங்கள் குப்பையில் எறியும் பழங்களின் விதைகள் உங்களுக்கு பல வகைகளில் உதவக்கூடும். அந்த வகையில் நீங்கள் வீணென்று நினைக்கும் சீதாப்பழத்தின் விதைகள் உங்களுக்கு நம்பமுடியாத நன்மைகளை வழங்கக்கூடும். இந்த வகையில் சீதாப்பழத்தின் கொட்டைகள் வழங்கும் நன்மைகள் என்னென்ன என்று பார்க்கலாம்.

### தலைப்பேனை நீக்குகிறது

பேன் மற்றும் ஈறுகளால் தலையை சொரிந்தே நீங்கள் சோர்வடைகிறீர்களா? இதை போக்க கடைகளில் கிடைக்கும் ஷாம்பூ மற்றும் எண்ணெய்களால் எந்த பயனும் கிடைக்கவில்லையா? இந்த தொல்லையைப் போக்க சீதாப்பழ கொட்டைகளை பயன்படுத்துங்கள். இதனை தூளாக அரைத்து தண்ணீருடன் சேர்த்து பசை போல செய்து கொள்ளவும். இதனை தலையில் தடவி 10 நிமிடங்கள் ஊறவைக்கவும், பின்னர் குளிர்ந்த நீரில் அலசவும். இந்த செயல்முறையை மாதத்திற்கு இரண்டு அல்லது மூன்று முறை செய்தால், பேன் தொல்லைகளில் இருந்து நிரந்தரத் தீர்வை பெறலாம்.

### பூச்சிகளை விரட்டும்

உங்கள் வீட்டில் பூச்சிகள் மற்றும் எறும்புகள் தொல்லை அதிகமாக இருந்தால் அதனை சரிசெய்ய இந்த கொட்டைகளை பயன்படுத்தலாம். கொட்டைகளை அரைத்து நீரில் ஊறவைத்து அதனை மூன்று நாள்கள் ஊறவிடுங்கள், பின்னர் அந்த கலவையை உங்கள் வீட்டில் பூச்சிகள் அதிகமிருக்கும் இடங்களில் வைக்கவும். இதனால் கிடைக்கும் பலன்கள் அற்புதமானவையாக இருக்கும்.

### பூச்சிக்கொல்லி மற்றும் களைக்கொல்லி

இந்தக் கலவையை நீங்கள் பூச்சிக்கொல்லியாகவும் பயன்படுத்தலாம். தாவரங்களை உண்ணும் பூச்சிகளை விரட்ட 10 அல்லது 15 நாள்களுக்கு ஒருமுறை இதனை செடிகளுக்கு தெளிக்கவும். இது உங்கள் செடிகளை பூச்சிகளிடம் இருந்து பாதுகாக்கும்.

### மருந்துகளில் பயன்பாடு

இந்த பழத்தின் விதைகள் மருந்து நிறுவனங்களால் மருத்துவரீதியாகப் பரிசோதிக்கப்பட்ட அபோர்டிஃபேசியண்ட் பண்புகள் காரணமாக பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. கருக்கலைப்பிற்கு பயன்படுத்தப்படும் மருந்துகளில் இந்த விதைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

### வியாபார வேளாண்மை பூச்சிக்கொல்லிகள்

சீதாப்பழ கொட்டைகளும், வேப்பங்கொட்டைகளும் சேர்த்து தயாரிக்கப்படும் பூச்சிக்கொல்லிகள் சக்திவாய்ந்த நச்சு பூச்சிக்கொல்லிகளாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த விதைகளிலிருந்து தயாரிக்கப்படும் பூச்சிக்கொல்லி இயற்கையானது மற்றும் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாதது மாகும். இந்த விதைகளில் இருந்து விதைகளிலிருந்து தயாரிக்கப்படும் பூச்சிக்கொல்லியின் பயன்பாடு மனிதகுலத்தின் ஆரோக்கியத்திற்கு மிகவும் நன்மை பயக்கும்.

### இயற்கை எரிவாயு உற்பத்தி


ஜேர்மனி போன்ற ஐரோப்பிய நாடுகளில் இந்த சிறிய விதைகளை வணிக நோக்கத்தின் பொருட்டு இயற்கை உற்பத்திக்காக பயன்படுத்துகிறது. இந்த பழத்தின் விதைகளில் மீதில் – எஸ்டர் நிறைந்த முக்கிய கொழுப்பு அமிலங்கள் உள்ளன, அவை வாயு உற்பத்தியைத் தூண்டுகின்றன.

### பிற பயன்கள்

பல நாடுகளில் இந்த விதைகள் அவற்றின் நச்சுத்தன்மை காரணமாக மீன்களைப் பிடிக்க பயன்படுத்தி வருகிறார்கள். இதனைக் பயன்படுத்தும் போது அதிகளவு மீன்கள் கிடைப்பதாக மக்கள் கூறுகிறார்கள்.

### எச்சரிக்கைகள்

சீதாப்பழம் பல ஊட்டச்சத்துக்கள் நிறைந்ததுதான், ஆனால் இந்த விதைகள் இயற்கையில் மிகவும் நச்சுத்தன்மையுடையவை மற்றும் இதன் தற்செயலான நுகர்வு கருக்கலைப்பை ஏற்படுத்தும். ஏனெனில் அவற்றில் சிறிதளவு விஷம் உள்ளது. இந்த விதைகளில் இருந்து தயாரிக்கப்படும் பூச்சிக்கொல்லிகள் கண்களில் படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் இது தற்காலிக பார்வையிழப்பை ஏற்படுத்தும். எனவே இதனை எச்சரிக்கையுடன் பயன்படுத்தவும்.


வடமாகாண
மரநடுகை மாதம்
கார்த்திகை 1 - 30
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல,
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

# உங்களது கனவுகளை நனவாக்கிட பயணித்திடுங்கள்

## Study in Australia | UK Canada | New Zealand




## ENTRANCE IS FREE

- Scholarships available
- Free consultation & visa guidance
- Post-study work options
- IELTS could be waived off
- Free IELTS classes
- Credit exemptions

*Conditions Apply

***HIGH VISA SUCCESS RATE***

## ICBT STUDY ABROAD

077 344 2628 | 076 877 0405 | 076 643 9102

# புதுடில்லிப் பயணத்தில் வெறும் 10 பேர் மட்டுமே!

## கோட்டாபய அதிரடி முடிவு!

கொழும்பு, நவ. 24

ஜனாதிபதி கோட்டாபய முதலாவது வெளிநாட்டுப் பயணமாக இம்மாதம் 29ஆம் திகதி இந்தியாவுக்குச் செல்கிறார். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பில் இந்தியா செல்லும் அவரது பயணம் பரவலான கவனத்தை ஈர்த்துள்ளது.

இந்தப் பயணத்தில் வெறும் 10 பேரைக் கொண்ட குழுவையே தன்னுடன் அழைத்துச் செல்கிறார் கோட்டாபய.

அரச நிதியை வீண் விரயம் செய்யும் திட்டங்களை அதிரடியாக நிறுத்தி வரும் கோட்டாபய, வெளிநாட்டுப் பயணத்திலும் தேவையற்ற ஆளணியை நீக்கியுள்ளார்.

இந்தப் பயணத் தில் எந்தவொரு அமைச்சரும் இடம்பெறமாட்டார்கள் எனத் தெரிகிறது.

ஆனால், நிதி, வெளியுறவு, பாதுகாப்பு



அமைச்சுக்களின் செயலாளர்கள் தூதுக்குழுவில் இடம்பெறவுள்ளனர்.

ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பின்னர், அரச நிதியை வீண் விரயம் செய்யும் திட்டங்களைக் கோட்டாபய நிறுத்தி வருவது பலரதும் கவனிப்பை பெற்றுள்ளது. (ஐ)

# ஐ.தே.க. விரைவில் மறுசீரமைப்பு கரு – நவீனுக்கு உயர்ந்த பதவிகள்





கொழும்பு, நவ. 24

ஐக்கிய தேசியக் கட்சியில் மறுசீரமைப்பைச் செய்யத் தீர்மானித்துள்ள கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கட்சியில் தற்போது எழுந்துள்ள நெருக்கடியை தணிப்பதற்காக தலைவர் பதவியை தற்காலிகமாக சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு வழங்க ஆலோசித்து வருகிறார்.

சபாநாயகர் பதவிக்கு வாசுதேவ நாணயக்கார எம்.பியை நியமிக்க ஆளுங்கட்சி ஆலோசித்து வரும் நிலையில், ரணில் இவ்வாறு கருவைத் தற்காலிகத் தலைவராக நியமிக்கப் பரிசீலனை செய்து வருகிறார்.

அதேபோல் கட்சியில் வகிக்கும் பதவிகளை இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ள எம்.பிக்களுக்கு மீளவும் அந்தப் பதவிகளை வழங்காதிருக்கவும் ரணில் உத்தேசித்துள்ளார்.

இதன்படி சஜித் ,கபீர் ஹாசிம் ஆகியோருக்கு அவர்கள் வகித்த பதவிகள் மீள வழங்கப்படுமா என்பதில் இழுபறி நிலைமை ஏற்பட்டுள்ளது .

இதற்கிடையில் நவீன் திஸாநாயக்கவுக்கு பிரதித் தலைவர் பதவியையும் ரவி கருணாநாயக்க அல்லது தயா கமகேவுக்குத் தவிசாளர் பதவியையும் வழங்குவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க – ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக மாற்று அரசியல் அணியொன்றை உருவாக்கும் முயற்சிகளுக்கு ஆதரவை வழங்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களுக்கு எதிர்வரும் தேர்தல்களில் போட்டியிட அனுமதி வழங்காதிருக்கவும் ரணில் தீர்மானித்துள்ளார் என அறியமுடிந்தது.

# மன்னாரில் 200 கிலோ கஞ்சாவுடன் இரண்டு பேர் பொலிஸாரால் கைது



மன்னார், நவ. 24

மன்னாரில் இரண்டு கோடி பெறுமதியான கேரளக் கஞ்சா பொதிகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் – மன்னார் பிரதான வீதி, மாந்தை சந்தியில் வைத்து நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து சுமார் 200 கிலோ கிராம் கேரளக் கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்ட பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் விரைந்து செயற்பட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் இந்தக் கேரளக் கஞ்சாப் பொதிகளைக் கைப்பற்றினர்.

வாகனத்தில் மீன் ஏற்றிச் செல்லும் றெஜிபோம் பெட்டிகளில் கஞ்சா மறைத்து வைத்துக் கொண்டு செல்லப்பட்டது.

இதன்போது நானாட்டான் மற்றும் பேசாலையைச் சேர்ந்த 40 வயதுடைய இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சாப் பொதிகள் மற்றும் வாகனம் மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட இரு சந்தேகநபர்களும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். (ஐ)

# தமிழரசுக் கட்சி அரசியல் குழு இன்று திருமலையில் கூடுகிறது

திருமலை, நவ. 24

இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் அரசியல்குழு கூட்டம் இன்று கூடுகிறது.

திருகோணமலையில் இன்று முற்பகல் 10.30 மணிக்கு இந்தக் கூட்டம் இடம்பெறும். தமிழரசுக் கட்சியின் அரசியல்குழுவில் 9 பேர் அங்கம் வகிக்கிறார்கள். தேர்தலின் பின்னரான நிலைவரங்கள் குறித்து ஆராயவே, இந்தக் கூட்டம் இடம்பெறுகின்றது. (ஐ)

# மஹிந்த தலதா மாளிகையில் வழிபாடு



கொழும்பு, நவ. 24

கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பௌத்தர்களின் புனிதத் தலமான தலதா மாளிகைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

நேற்றுக் காலை அங்கு விஜயம் மேற்கொண்ட அவர், மகா நாயக்கர்களை சந்தித்து அவர்களது ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டமையுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று முன்தினம் காலை நிதி, பொருளாதார மற்றும் கொள்கை திட்டமிடல், புத்தசாசன, கலாசார விவகாரங்கள், மத விவகாரங்கள், நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீட்டுவசதி அமைச்சராக பிரதமர் மஹிந்த சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ரணிலுக்கு வழங்கப்பட்டுவந்த எஸ்.ரி.எவ். பாதுகாப்பு நீக்கம்!

கொழும்பு, நவ. 24

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்பட்டு வந்த விசேட அதிரடிப்படை பாதுகாப்பு திரும்பப் பெறப்பட்டுள்ளது.

புதிய ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷ, பல்வேறு அதிரடி நடவடிக்கைகள தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றார்.

அந்தவகையில் தற்போது ரணில் உள்ளிட்ட பல ஐ.தே.க. பிரமுகர்களின் விசேட அதிரடிப்படை பாதுகாப்பு விலக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர்கள் மலிக் சமரவிக்ரம, திலக் மாரப்பன ஆகியோரின் விசேட அதிரடிப் படை பாதுகாப்பும் விலக்கப்பட்டுள்ளது. ஆனாலும் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் விசேட அதிரடிப்படைப் பாதுகாப்பு விலக்கப்படவில்லையெனக் குறிப்பிடப்படுகிறது.

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
WesternUnion WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தினை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உலகெங்குமிருந்து உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை
No.303, K.K.S. Road, Jaffna. Srilanka.Tel: 021 222 2670/5392 Fax: 021 222 3214
Email: srimurugan09@gmail.com srimurugan303@gmail.com

# வெளிவிவகார அமைச்சை உடனே சுத்தப்படுத்துங்கள்

## உலக இலங்கை மன்றம் வேண்டுகோள்

கொழும்பு, நவ. 24

ஜெனீவா பிரேரணைகளுக்கு ஆதரவு வழங்கியவர்களை வெளிவிவகார அமைச்சிலிருந்து வெளியேற்றி அமைச்சைச் சுத்தப்படுத்துமாறு உலக இலங்கை மன்றம் புதிய வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவர்கள் ஜெனீவா பிரேரணைகளுக்கு ஆதரவு வழங்கியதன் ஊடாக நாட்டைக் காட்டிக் கொடுத்துள்ளனர் எனவும் அந்த அமைப்பின் இஸ்ரேல் நாட்டுக்கான பிரிவின் செயலாளர் ஜனெத் விமல குற்றம்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த காலத்தில் இந்த அதிகாரிகள் செயற்பட்ட விதத்தை நாம் அவதானித்தோம். இவர்கள் புலம்பெயர் புலி ஆதரவாளர்களுக்கு வேண்டிய பிரகாரமே செயற்பட்டனர். நாம் ஜெனீவா சென்று புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுக்கு எதிராகச் செயற்படும் போது, வெளிவிவகார அமைச்சிலுள்ள இந்த அதிகாரிகள், சகவாழ்வைச் சீரழிப்பதாக எம்மைக் காட்டிக் கொடுத்தனர்.

நாம் ஜெனீவா சென்று நாட்டுக்காகக் குரல் கொடுத்தபோது எம்மைப் பற்றி வெளிவிவகார அமைச்சிலுள்ள சிலர் தகவல் திரட்டினர். மலைநாட்டு முன்னாள் அமைச்சரின் உறவினருடைய மகன் ஒருவர் ஜெனீவாவிலுள்ள இலங்கை தூதரகத்தில் பணியாற்றினார். அவர் எம்மைப் பற்றிய தகவல்களைத் திரட்டினார் – என்றார். (ஐ)

# இலஞ்சம் வாங்கினார் என்ற குற்றச்சாட்டில் காலி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கைது!

கொழும்பு, நவ. 24

இலஞ்சம் கோரினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிலாபம் பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோயில் ஒன்றில் காணாமற்போன இரண்டு வலம்புரிச் சங்குகளை தேடிக் கொடுத்தல் மற்றும் ஆலயத்தின் பணிகளை எவ்வித சிக்கல்களும் இன்றி முன்னெடுப்பதற்காக அவர் இலஞ்சம் கோரியுள்ளார்.

இதற்காக அவர் இரண்டு இலட்சம் ரூபா பணம் கோரியுள்ளார் என இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழு தெரிவித்தது.

இதற்கமைய அவர் அந்த ஆலய வளாகத்தில் இலஞ்சம் பெற்றபோதே கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# ஐக்கிய தேசியக் கட்சியில் இணைகின்றார் சம்பிக்க !



கொழும்பு, நவ. 24

ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவுள்ளாரெனத் தெரிகிறது.

ஜாதிக ஹெல உறுமய ஐக்கிய தேசியக் கட்சி அரசின் முக்கிய பங்காளியாக இருந்து வந்தது. ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடைந்த நிலையில் அந்தக் கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வகையில் அந்தக் கட்சியுடன் இணையத் தீர்மானித்துள்ளார் சம்பிக்க. சம்பிக்கவின் இந்தத் தீர்மானத்திற்கு ஜாதிக ஹெல உறுமயவின் அரசியல் குழு அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. (ஐ)

# வவுனியா வைத்தியசாலையில் இரு வைத்தியர்களுக்கு டெங்கு



வவுனியா, நவ. 24

வவுனியா வைத்தியசாலையில் கடமையாற்றும் இரு வைத்தியர்கள் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் டெங்கு நோய் வேகமாகப் பரவி வரும் நிலையில் அதனை கட்டுப்படுத்தச் சுகாதார திணைக்களம் தீவிர நடவடிக்கைகளை எடுத்துள்ளது. வவுனியா வைத்தியசாலையில் 305 பேர் டெங்கு நோய் தாக்கம் காரணமாக சிகிச்சை பெற்றுள்ளனர்.

இந்நிலையில் இந்த வைத்தியசாலையில் பணியாற்றும் வெளி மாவட்டங்களை சேர்ந்த இரு வைத்தியர்களும் டெங்கு நோய் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இதனையடுத்து வைத்தியசாலைச் சூழல் மற்றும் வைத்தியர் விடுதி ஆகிய பகுதிகளில் டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்தச் சுகாதார திணைக்களத்தினர் மேற்கொண்டுள்ளனர். (ஐ– 100)

# 46கிலோ மரை இறைச்சியுடன் வவுனியாவில் ஒருவர் கைது

வவுனியா, நவ. 24

வவுனியா அட்டமஸ்கட பகுதியில் நேற்று முன் தினம் இரவு 46கிலோ மரை இறைச்சியுடன் நபர் ஒருவரைக் கைது செய்துள்ளதாக மாமடுப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு வோகஸ்வெவ பகுதியில் இருந்து வவுனியா நகரிலுள்ள உணவகம் ஒன்றிற்கு பட்டா வாகனத்தில் 46 கிலோ மரை இறைச்சி ஏற்றிச் சென்றபோது நந்திமித்திரகம பகுதியை சேர்ந்த 29 வயதுடைய நபர் ஒருவரைக் அட்டமஸ்கட பகுதியில் வைத்து பொலிஸார் கைது செய்தனர்.

பட்டா சாரதி கைப்பற்றப்பட்ட மரை இறைச்சியுடன் விசாரணைகளுக்காக மாமடு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (ஐ – 100)

# அமெ. தூதுவருடன் சிலர் ரகசிய பேச்சு

கொழும்பு, நவ. 24

முன்னாள் இராணுவ உயர் அதிகாரியொருவரும், அரச சார்பற்ற அமைப்பின் பிரதானி ஒருவரும் பொறியியலாளர் ஒருவரும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸுடன் இரகசியப் பேச்சு நடத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த முன்னாள் இராணுவ உயர் அதிகாரி சி.ஐ.ஏ.அமைப்புடன் தொடர்புள்ள நிறுவனம் ஒன்றுடன் நீண்டகாலம் பணியாற்றிய ஒருவர் எனப் புலனாய்வுத் துறை தகவல்கள் தெரிவிக்கின்றன எனவும் சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் முன்னாள் இராணுவத் தளபதி, வடக்கிலுள்ள தமிழ் அரசியல் தலைவர்கள் இருவருடன் நீண்டகாலம் மிக நெருங்கிய தொடர்பு வைத்தவர் எனவும் அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# பொதுத் தேர்தல் மே 2 ஆம் திகதி?

கொழும்பு, நவ. 24

நாடாளுமன்றத் தேர்தல் அடுத்த வருடம் மே 2 ஆம் திகதி நடக்கக் கூடுமென அரசியல் வட்டாரங்களில் இருந்து நம்பகரமாக அறியமுடிகின்றது.

இப்போதைய நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி முதல் அதிகாரம் வருகிறது.

அதன்படி நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அவர் உடனடியாகப் பொதுத் தேர்தலுக்கு செல்வார் எனது தெரிகிறது.

ஏற்கனவே நாடாளுமன்றக் கலைப்பு பற்றி ஜனாதிபதி தெரிவித்திருந்த நிலையில் அதன்படி அந்தக் காலப்பகுதிக்குள் கலைக்கப்பட்டால் மே இரண்டாம் திகதி மட்டில் தேர்தல் நடக்குமெனத் தேர்தல் திணைக்கள மற்றும் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் அடுத்த நாடாளுமன்ற அமர்வின் பின்னர் நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஜனாதிபதியினால் ஒத்திவைக்கப்படலாமெனச் சொல்லப்பட்டாலும் அது குறித்து இறுதியான தகவல் எதுவும் வெளிவரவில்லை. (ஐ)



மட்டக்களப்பு மாவடிமுன்மாரி துயிலும் இல்லம் மாவீரர் தின ஏற்பாடுகளுக்காக நேற்று சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது. (ஐ)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.11.2019 இல் வெளியிடப்பெற்றது.